*ed 11—11—1965]

R.R. 2911/76

986

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## TUESDAY, 3RD AUGUST 1965

**VOLUME XXX—No. 7**

*CONTENTS*


| | PAGES |
|---|---|
| I Obituary reference to Sri B. Pocker Sahib, a former M.L.A. | 575 |
| II Questions and Answers | 575–591 |
| III Government Bills— | |
| (1) The Madras Agricultural Produce Markets (Amendment) Bill, 1965. | 591 |
| (2) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965. | 592 |
| (3) The Madras Appropriation (No. 4) Bill, 1965 | 675 |
| IV Announcements— | |
| (1) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965. | 591 |
| (2) The Madras Appropriation (No. 4) Bill, 1965 | 675 |
| V The Madras State Electricity Board Budget for 1965-66—Discussion *cont.* | 592–624 |
| VI First Supplementary Statement of Expenditure for 1965-66—General discussion. | 624–670 |


[P.T.O.

©
GOVERNMENT OF MADRAS
1965

*slative Assembly Department*
*Fort St. George, Madras-9*

. utes]

123192

*CONTENTS*—cont.


PAGES

VII Voting on Demands for Grants for Further Expenditure in 1965-66— 670-675

A. EXPENDITURE ON REVENUE ACCOUNT. 670-673

Demand No. II—Motor Vehicles Acts—Administration ..
Demand No. VIII—Head of State, Ministers and Headquarters staff.
Demand No. IX—District Administration and Miscellaneous.
Demand No. XII—Police .. .. .. .. .. ..
Demand No XIII—Education .. .. .. .. ..
Demand No. XIV—Medical .. .. .. .. ..
Demand No. XV—Public Health .. .. .. ..
Demand No. XVI—Agriculture .. .. .. .. ..
Demand No. XVIII—Animal Husbandry .. .. ..
Demand No. XIX—Co-operation .. .. .. ..
Demand No. XX—Industries .. .. .. .. ..
Demand No. XXIV—Labour including Factories .. ..
Demand No. XXVI—Irrigation .. .. .. ..
Demand No. XXVII—Public Works—Works .. ..
Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant.
Demand No. XXIX—Public Works—Grants-in-aid .. ..
Demand No. XXXIII—Miscellaneous .. .. .. ..

B. EXPENDITURE ON CAPITAL ACCOUNT. 673-674

Demand No. XXXVII—Compensation to Zamindars ..
Demand No. XXXVIII—Capital Outlay on Public Health.
Demand No. XXXIX—Capital Outlay on Agriculture ..
Demand No. XLI—Capital Outlay on Industrial Development.
Demand No. XLII—Capital Outlay on Irrigation .. ..
Demand No. XLIII—Capital Outlay on Public Works ..
Demand No. XLVII—Capital Outlay on Schemes of Government Trading.

C. EXPENDITURE ON LOAN ACCOUNT.

Demand No. XLVIII—Loans and Advances by the State Government. 675

VIII Papers laid on the Table of the House .. .. 675-676


# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, the 3rd August 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—OBITUARY REFERENCE TO SRI B. POCKER SAHIB, A FORMER M.L.A.

MR. SPEAKER: It is my painful duty to inform the House about the demise of Sri B. Pocker Sahib on the 29th July 1965 He was a former Member of the Madras Legislative Council from 1930 to 1936 and a former Member of the Madras Legislative Assembly from 1946 to 1952 representing Kozhikode-*cum*-Cannanore Tellicherry Towns Muhammadan Urban Constituency.

On behalf of the House, I will convey the condolence to the bereaved family.

I request the hon. Members to stand in silence for a minute as a mark of respect to the departed soul.

The Members stood in silence for a minute.

123192

### II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER: Question No. 39.

THE HON. SRI P. KAKKAN: Sir, the hon. Member who has given notice of the question is not in his seat.

MR. SPEAKER: Anyway, the Hon. Minister can give the answer. Even though the Members who have given notice of the question are not present in the House, I have been allowing the answers to be given in the House, in order that it might give an opportunity to the Members present in the House to put supplementaries.

*Sugarcane Nurseries*

*39 Q.—SRI K. NARAYANASWAMY PILLAI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of nurseries raised under the Sugarcane Development Scheme in the various centres during 1964; and

(*b*) the amount disbursed as subsidy?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Five thousand one hundred and forty-four (5,144).

(*b*) A sum of rupees three lakhs eighty-eight thousand six hundred and sixty and paise seventy-seven (Rs. 3,88,660·77) was disbursed during the last year as premium and transport subsidy.

(அ) ஐயாயிரத்து நூற்றி நாற்பத்து நான்கு (5,144).

(இ) கடந்த ஆண்டில், மூன்று லட்சத்து எண்பத்தெட்டாயிரத்து அறுநூற்றறுபது ரூபாய் எழுபத்தேழு காசுகள் (ரூ. 3,88,660.77) பிரீமியமாகவும் போக்குவரத்திற்கான உதவித் தொகையாகவும் வழங்கப்பட்டது.

**திரு. சா. கணேசன் :** இந்தக் கரும்பு நாற்றங்கால் பண்ணைகள் எந்தெந்த ஜில்லாக்களிலே எத்தனை, எத்தனை அமைக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் தெரிவிக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஜில்லாவாரியாக என்னிடத்தில் தகவல் இல்லை. தென் ஆற்காடு ஜில்லாவில் தான் அதிகமாக இருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்தக் கரும்பு நாற்றங்காலுக்குப் பணம் எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ? அதற்காக ஏதாவது நிலங்கள் ஜாமீன் கொடுக்க வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கரும்பு உற்பத்தி செய்கிற அன்பர்களுக்கு, மூன்று கண்ணுடைய கரும்புகளுக்கு 15 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் 15 ரூபாய் பிரீமியம் கொடுக்க வேண்டும். இரண்டு கண்ணுடைய கரும்புகளுக்கு 22,500 ரூபாய் கொடுத்தால் 10 ரூபாய் பிரீமியம் கொடுக்க வேண்டும். இன்னும் டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் வேறு கொடுக்கிறார்கள். இரண்டு மூன்று கண்ணுடைய கரும்புகளுக்குத் தகுந்தவாறு கொடுக்கப்படுகிறது. இருபது மைலுக்குள் (up to a distance of 20) இருந்தால் 20 ரூபாய் வாடகை உதவி கொடுக்கிறார்கள். இருபது மைலுக்குமேல் 75 மைலுக்குள் இருந்தால் 40 ரூபாய் கொடுக்கிறார்கள். எழுபத்தைந்து மைலுக்குமேல் இருந்தால் 150 ரூபாய் வாடகை உதவி அளிக்கிறார்கள்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** அநேகமாகக் கரும்பு உற்பத்திச் செய்யும் விவசாயிகளுக்குச் சரியான முறையில் விதை கிடைப்பதில்லை. இவ்வாறு உதவி செய்வது விவசாயிகளுக்கு அதிகமாகத் தெரிவதில்லை. ஆகவே இதை விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தி அதிகமாக விதைக் கரும்புகளைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போதே அதிகமாகத்தான் கொடுத்து வருகிறோம். முதலிலே நான் வாசித்தேன் 5,144 நர்சரீஸ் இருக்கின்றன என்று, அங்கேயிருந்து விவசாயிகளுக்கு விதைக் கரும்புகள் அளிக்கப்படுகின்றன. நம் மாநிலத்திலே கடலூரில் ஒரு ஷுகர் ரிசர்ச் ஸ்டேஷன் வைத்திருக்கிறோம். மத்திய சர்க்கார் சார்பிலே கோயம்பத்தூரில் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளின் மூலம் பரிசீலனை செய்து கரும்பு விதைகளைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.



**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, ரூபாய் 3¾ லட்சத்திற்கு மேலாக சப்சிடியாகக் கொடுத்தும்கூட கொடுக்கப்படும் அந்த விதைகளைப் பயன்படுத்தாமல், கரும்பு ஆட்டுவதற்குப் பயன்படுத்துகிறார்கள். இது நடைமுறையில் இருந்து வருகிறது. இதை உடனடியாகச் சீர்திருத்தி எதற்காக இந்தப் பணம் ஒதுக்கப்படுகிறதோ அதற்காகப் பயன்படுத்த வேண்டுமென்று உத்தரவு போடுவார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று ஒதுக்கப்பட்டதோ அதற்காகத்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வேறு நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்ற தகவல் இருந்தால், கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பினால் அது கவனிக்கப்படும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** இந்த விதைக் கன்றுகளில் எவற்றில் ஷுகர் கன்டென்ட்ஸ் அதிகமாக இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எந்த விதைக்கன்றில் என்று இல்லை. அது ஏரியாவைப் பொறுத்திருக்கிறது. எந்த ஏரியா விதையில் ஷுகர் கன்டென்ட்ஸ் அதிகம் என்கிற தகவல் என்னிடம் இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** நமது மாநிலத்தில் மொத்தமாக எவ்வளவு ஏக்கராவில் கரும்பு விளைவு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனிக் கேள்வி போடுங்கள்.

**திரு. மு. சண்முகம் :** விதைப் பண்ணைக்காக நாம் மானியமாக ஏராளப் பணம் செலவிட்டு வருகிறபோது, எங்காவது விதைக் கரும்புகளை யாரும் வாங்காத நிலை ஏற்பட்டு அதனால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா ? அப்படிப்பட்ட இடங்களுக்கு அரசாங்கம் ஏதேனும் உதவி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** யாரும் வாங்காமல் இருக்கமாட்டார்கள். கரும்பு பயிரிட வேண்டுமென்ற எண்ணம் விவசாய மக்களுக்கு வந்திருக்கிறது. எங்காவது விதை வாங்கப்படாமல் இருக்கிறது என்றால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**புலவர் கா. கோவிந்தன் :** கனம் அமைச்சர் அவர்கள் ஐயாயிரம் விதைப் பண்ணைகள் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த விதைப் பண்ணைகள் அரசாங்கத் துறையில் நடத்தப்படுகிறதா ? தனியார் துறையில் நடத்தப்படுகிற விதைப் பண்ணைகளுக்கு அரசாங்கம் உதவி செய்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அநேகமாகத் தனியார் துறையில் தான் நடத்தப்படுகின்றன. நல்ல விதைகள் கிடைக்கின்றன.

**திரு. கரு. சீமைச்சாமி:** கரும்பு உற்பத்திக்காக அதிகப் பணத்தை மானியமாகக் கொடுத்துக் கொண்டிருப்பதால் உணவு உற்பத்தி பாதிக்கப்படாதா ?

**கனம் திரு. பூ. கக்கன்:** உணவு உற்பத்தியைப் பாதிக்காத வகையில் தான் செய்கிறோம். சர்க்கரையும் ஒருவகையில் உணவு தான். இது வெளி நாட்டுச் செலாவணியையும் தேடித் தருகிறது.

*Workmen's Compensation Act* 1923

* 61 *Q.*—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of applications received for the grant of compensation during the year 1963–64 under the Workmen's Compensation Act, 1923; and

(*b*) the number pending?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) At the beginning of the year 1963, 97 cases were pending and 149 applications were received during the year. Of these, 87 cases were pending at the end of the year. During the year 1964, 158 applications were received. Of the total pendency of 245 cases, 166 were pending at the end of the year.

(அ) & (இ) 1963 தொடக்கத்தில் 97 மனுக்கள் முடிவு செய்யப்படாமல் இருந்தன. அந்த ஆண்டில் மேலும் 149 மனுக்கள் வந்தன. இவற்றில் ஆண்டு இறுதியில் 87 மனுக்கள் முடிவு செய்யப்படாமல் இருந்தன. 1964-ம் ஆண்டில் 158 மனுக்கள் பெறப்பட்டன. எனவே முடிவு செய்யப்படாமல் நின்ற மொத்தம் 245 மனுக்களில், ஆண்டு இறுதியில் 166 மட்டுமே முடிவுரு நிலையில் இருந்தன.

பீடித் தொழிலாளர்கள்

* 62 கேள்வி—திரு. ஆர். அப்துல் கலீல்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களை ஸ்டேட் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் சேர்க்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** (அ) தற்போது அத்தகைய உத்தேசம் ஏதுவுமில்லை.

(இ) தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் சட்டத்தின் கீழ் வரும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கும் தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை நீடித்த பிறகுதான், பீடித் தொழிலாளர்களை இத் திட்டத்தில் சேர்ப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்க முடியும்.

**திரு. ஆர். அப்துல் கலீல்:** கனம் சபாநாயகர் அவர்களே, பீடித் தொழிலாளர்களிடமிருந்து ஏதாவது அப்பேர்ப்பட்ட மனுக்கள் வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்தத் தகவல் என்னிடம் இல்லை.



ஆட்டோ ரிக்ஷாக்கள்

* 63 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் 1964-65-ல் எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்டன ?

(இ) அவைகளுள் புதிதாக லைசென்ஸ் வழங்கப்பட்டவை எத்தனை ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Two hundred and ten as on 1st April 1964.

(*b*) Nil.

**புலவர் கா. கோவிந்தன்:** கட்டணம் மலிவானது. நெருக்கமாக இருக்கக்கூடிய தெருக்களுக்குக்கூட கொண்டு செல்லக் கூடியது. முன்பு 500 பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருந்தன. இப்போது குறைக்கப்பட்டுள்ளது. முன்பு கொடுத்திருந்த 500 வரையிலாவது கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** படிப்படியாகக் குறைக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் திட்டம். திடீரென்று எல்லாவற்றின் லைசென்சுகளையும் ரத்து செய்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் எந்த எந்த வண்டிகள்—ஏற்கனவே லைசென்சு கொடுக்கப்பட்டவை—பழுதாகப் போய்விடுகின்றனவோ, அவற்றை எடுத்து விடுகிறோம்.

**திரு. மு. கருணாநிதி:** சென்னை நகரில் மொத்தம் எவ்வளவு ஆட்டோ ரிக்ஷாக்கள் இருக்கின்றன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** 210 என்று சொன்னேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்களைக் குறைக்கக் காரணம் என்னவென்று சொல்ல முடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இது பற்றி ட்ராபிக் செல் பரிசீலனை செய்தது. பொதுவாக, பெரிய நகரங்களில் த்ரீ வீலர்களை எடுத்துவிட வேண்டும் என்பது அவர்கள் யோசனை. பம்பாயில் ஆட்டோ ரிக்ஷாக்களையே எடுத்துவிட்டார்கள். டெல்லியிலும் எடுத்துவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். நாமும் இப்பொழுதில் இருந்தே குறைத்துக் கொண்டு வந்தால்தான் பின்னால் இது ஒரு பெரிய பிரச்சினையாக எழாமல் இருக்க முடியும் என்று நினைக்கிறேன். ஆட்டோ ரிக்ஷாக்களை ரைட் ஹாண்டு பக்கம் திருப்பும் போது ஆக்ஸிடெண்ட் ஆகிறது, ஸ்டேபிள் ஈக்விலிப்ரியம் இல்லை என்றெல்லாம் சொல்கிறார்கள்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கோவை, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் எல்லாம் ஆட்டோ ரிக்ஷா விஸ்தரிக்கப் வருகிறது. சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் ஜனசெ,

முள்ள இடங்களில் தடை செய்யப்பட்டாலும் புதிதாக நகரம் விரிவடைந்து வருகிற கோடம்பாக்கம், மேற்கு மாம்பலம் போன்ற இடங்களிலாவது ஓட அனுமதி வழங்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தமாதிரி யோசனை இதுவரை வரவில்லை. கனம் அங்கத்தினர்கூட டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டியில் ஓர் உறுப்பினர் என்று நினைக்கிறேன். அடுத்து வருகிற கூட்டத்தில் கனம் அங்கத்தினர் இந்த யோசனையைச் சொன்னால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. எம். எஸ். மணி :** படிப்படியாக ஆட்டோ ரிக்ஷாக்களைக் குறைத்து வருவதாகச் சொன்னார்கள். ஆனால் திருச்சியில் படிப்படியாக அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதற்கு என்ன காரணம் என்று அறியலாமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பெரிய நகரங்களில் ஜன நெருக்கடி—டிராபிக் கன்ஜெஷன்—உள்ள இடங்களில் குறைத்து வருவதாகச் சொன்னேன். ஆட்டோ ரிக்ஷாக்களினாலும் ஓரளவு நன்மை இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியும். அதனால் தான் போக்குவரத்து நெருக்கடி இல்லா நகரங்களில்—முன்பாவது ஒரு லிமிட் வைத்திருந்தோம்—இப்போது லிமிட் இல்லாமலே அனுமதித்து வருகிறோம்.

### *Traffic in Thanjavur*

* 64 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any study team has been constituted to go into the question of traffic congestion in Thanjavur and the neighbouring areas; and

(b) if so, the recommendations, if any, made by the team and the action taken thereon?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** தஞ்சை ஜில்லாவில் அநேகமாக 20 மைல் போகக் கூடிய இடங்களுக்கு நெருக்கடி அதிகமாக இருக்கிறது. நீண்ட நேரம் பஸ்களுக்கு இடமில்லாமல் காத்திருக்க வேண்டியதாக இருக்கிறது. அம்மாதிரி இடங்களில் இன்னும் அதிகம் விட ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மூலக் கேள்வி தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில் டிராபிக் செல் அமைக்கப்பட்டதா என்பது. அந்த மாதிரி இல்லை. டிராபிக் அதிகாரிகள் அந்த அந்த இடங்களுக்குப் போய் டிராபிக் கன்ஜெஷன் நிலைமையை ஆராய்கிறார்கள். டிராபிக் சிக்னல் போடுவது பற்றிப் பரிசீலிக்கிறார்கள். அதன்படி டிராபிக் ரெகுலேஷன் செய்து வருகிறோம்.



**திரு. வை. சங்கரன் :** பொதுவாக நகரங்களில் சிறு சிறு தெருக்களில் கூட கோடவுன்கள் வாடகைக்கு எடுத்து லாரிகளைக் கொண்டு வந்து வைத்து போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்கிறார்கள். இம்மாதிரி சிறு சிறு தெருக்களில் உள்ள கட்டடங்களை கோடவுன்களுக்கு லீஸ் கொடுக்கக் கூடாது என்று தடை செய்ய முடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பொதுவாக லாரிகளை லாரி ஸ்டாண்டுகளில் தான் நிறுத்த வேண்டும் என்பதான விதி இருக்கிறது. இருந்தும் அதை அனுசரிக்காமல் ரோடுகளில் ஆங்காங்கே லாரிகளை நிறுத்துகிறார்கள். அதைத் தடுக்க முடியவில்லை. லாரிகளை ஸ்டாண்டுகளில்தான் நிறுத்த வேண்டும் என்கிற விதிப்படி நடந்து கொண்டாலேயே கஷ்டம் ஏற்படாது.

**திரு. வை. சங்கரன் :** லாரிகளை ஸ்டாண்டில்தான் நிறுத்த வேண்டும் என்றாலும் சாமான்களை ஏற்றி இறக்க கோடவுன்கள் உள்ள இடத்திற்குக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஆகவே தான் சிறுசிறு தெருக்களில் உள்ள இடங்களைக் கோடவுன்களுக்கு லீசுக்கு கொடுக்கக் கூடாது என்று தடை செய்யமுடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த மாதிரி உத்தேசம் சர்க்காரிடத்தில் இல்லை.

### ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான விளம்பரங்கள்

* 65 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம், சாதனைகள் நாடகம் மூலம் விளம்பரப்படுத்தப்படுகின்றனவா ?

(இ) ஆம் எனில், 1965-ம் வருடம் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் எந்தெந்த ஊர்களில் நடத்தப்பட்டன ?

(உ) அவற்றிற்கான செலவுத் தொகை எவ்வளவு ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) ஆம்.

(இ) & (உ) சபையில் ஒரு அறிக்கை * சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவரவர்களே, ஐந்தாண்டுத் திட்ட பிரச்சாரத்திற்கென்று எத்தனை நாடகக் குழுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன ? அந்த நாடகக் குழுக்களுக்கு ஒவ்வொரு நாடகம் நடத்துவதற்கும் எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** எத்தனை நாடகக் குழுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஒவ்வொரு நாடகத்திற்கும் 200 ரூபாய் கொடுக்கப்பட்ட

* 677—681-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

வருகிறது. எந்தெந்த நாடகங்களை அங்கீகரிக்க வேண்டுமென்பதை அந்தந்த மாவட்டத்திலேயுள்ள விளம்பர அதிகாரி பரிசீலனை செய்து அதை இங்கே அனுப்பி வைக்கிறார். இங்கேயும் அது பரிசீலனை செய்யப்படுகிறது. எத்தனை குழுக்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது என்ற விவரத்திற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சார நாடகங்களில் காதல் கட்டங்கள் அதிகமாக இருக்கின்றன என்ற கருத்து இருந்து வருகிறது. கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் ஒரு நாடகத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகின்றபொழுது இதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரிப் பகுதிகளை விளம்பரம் செய்யாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இந்த நாடகங்கள் திட்டங்களை மக்களுடைய மனத்திலே பதிய வைக்கும்படியாக இருக்க வேண்டும். அந்த வகையிலே என்ன என்ன கருத்துக்களைச் சேர்க்கலாமோ அவைகளைத்தான் சேர்க்கிறோம். முழுக்க முழுக்க காதல் கட்டம் இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவரவர்களே, இந்த நாடகப் பிரச்சாரத் திட்டத்தின் கீழ், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் அமைந்திருக்கிறதா ? அந்த நோக்கத்தைப் பிரச்சாரம் செய்கின்ற முறையில் திரைப் படங்கள், நாடகங்கள் உருவாகியிருக்கின்றனவா ? இல்லையென்றால், இனிமேல் உருவாக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இதில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமும் இருக்கிறது. அதற்கென திரைப் படமும் இருக்கிறது. நாடகங்களும் அவ்வப்பொழுது நடத்திக் காண்பிக்கப்படுகின்றன.

**திரு. து. ப. அழகமுத்து :** அங்கீகரிக்கப்பட்ட நாடகங்களின் வசனத்தை அச்சடித்து, நாடகங்களைப் பார்க்க முடியாதவர்கள் படித்துக் கொள்வதற்கு வசதியாக, விநியோகம் செய்வார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அவ்வாறு விநியோகிப்பதற்கு உத்தேசமில்லை.

**திரு. வை. சங்கரன் :** முக்கிய விழாக்கள், வைபவங்கள் இவைகளிலே தனியார் இந்த நாடகங்களை நடத்த விரும்பினால், நாமினல் சார்ஜிலே நடத்திக் காண்பிப்பதற்கு அரசாங்கம் திட்டங்கள் போட்டிருக்கிறதா ? இல்லாவிட்டால் இனிமேல் அதுமாதிரித் திட்டங்கள் போடும் உத்தேசமுண்டா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** எந்தெந்த விழாக்களிலே, வைபவங்களிலேயெல்லாம் நாடகம் நடத்த வேண்டுமோ அங்கேயெல்லாம் நாடகங்கள் நடத்திக் காண்பிக்கப்படுகின்றன. தனியார்



இந்த நாடகங்களை நடத்த வேண்டுமென்று விரும்பி அதற்காக முயற்சி எடுத்தால் அவர்கள் தங்களுடைய சொந்தப் பொறுப்பிலே தான் நடத்திக் கொள்ள வேண்டும்.

**திரு. எஸ். முருகையன் :** அண்மையிலே திரு. காமராஜ் அவர்கள் பேசும்பொழுது, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும் ஏழைகளுக்கு அவை பயன்படவில்லை, பணக்காரர்களுக்குத்தான் பயன்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்ற கருத்துக்களையும் இந்த நாடகங்கள் மூலம் பிரச்சாரம் செய்வார்களா ?

(பதில் இல்லை)

### *Kodaikanal Hills*

* 66 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether any steps have been taken to popularise and improve Kodaikanal as an important hill station and tourist centre; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) & (இ) சுற்றுப் பயணங்களை ஊக்குவிப்பதற்காகவும், கொடைக்கானலை மலை வாசஸ்தலமாகப் பிரபலப்படுத்துவதற்காகவும் கொடைக்கானலில் சுற்றுலா மாளிகை ஒன்றைக் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கொடைக்கானலுக்கு வரக் கூடிய சுற்றுப் பயணிகளுக்கு அது வசதியாக இருக்கும். கொடைக்கானல் ஏரியில் மேற்கொண்டு கூடுதலாக படகு வசதிகளையும் இதர சௌகர்யங்களையும் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. வார முடிவு விடுமுறையின்போது, மதுரை—கொடைக்கானல், வைகைத் தேக்கம்—மதுரை ஆகியவைகளுக்குச் சுற்றுலா வசதியையும் இந்த இலாகா அளித்து வருகின்றது.

**திரு. வை. சங்கரன் :** கொடைக்கானல் மலையிலே ஹாலிடே ஹோம் என்ற ஹோட்டல் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் மட்டுமே வந்து தங்க, உணவருந்த வசதியளிக்கும் வகையிலே இருக்கிறது. பொதுவாக டவுனிலே சௌகரியங்களோடு, பயணிகள் வந்து தங்குவதற்கு மட்டுமல்லாமல் போர்டிங் வசதியும் செய்து தரக் கூடிய வகையிலே ஒரு கட்டடம் கட்டுவதற்கும் உத்தேசம் உண்டா ? கீழ் மட்டத்தில் உள்ளவர்கள், சாதாரண பயணிகள், நடுத்தர மக்கள் எல்லோருமே தங்கிக்கொள்ளக்கூடிய வசதியுள்ள ஒரு ஹோட்டல் அமைப்பதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இதை அரசாங்கம் கவனத்தில் வைத்துத் தான் 8 லட்சம் ரூபாய் செலவிலே 50 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு பயணிகள் விடுதி அமைக்க அனுமதி வழங்கியிருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** சுற்றுலா மாளிகைகளில் சாதாரண மக்கள் வந்து தங்க முடியவில்லை. பெரிய, பெரிய மனிதர்கள்தான் தங்க முடிகிறது. ஆகவே, சாதாரண மக்கள், பயணிகள் வந்து தங்குவதற்காக வேண்டிய வசதிகளோடு கூடிய மாளிகைகளை அரசாங்கம் அமைக்க முன்வருமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அதுபோன்ற முறையிலேதான் மதுரை, திருச்சி, கொடைக்கானல் போன்ற இடங்களில் மிகக் குறைந்த வாடகைகளில் நடுத்தர மக்கள் வந்து தங்குவதற்கு வசதியாக அரசாங்கம் கட்டியிருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** சுற்றுலா மாளிகையில் நடிகர்கள் தங்குவது கூடாது என்று உத்தரவு வந்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்திருப்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** அது சுற்றுலா மாளிகையைப் பற்றியல்ல. இன்ஸ்பெக்ஷன் பங்களாவைப்பற்றி என்று நினைக்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** தனிப்பட்ட நடிகர்கள் தங்க அனுமதிக்கக் கூடாது என்று இல்லை. The whole troupe cannot stay there. அவ்வளவுதான்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, செய்தித் துறை அறிக்கையில் தாங்கள் சொல்லுகின்ற விளக்கம் வந்திருக்கிறது. ஆனால் தனிப்பட்ட நடிகர்களை அனுமதிக்கக் கூடாது என்று சொல்லப்படுவதற்குச் சில சான்றுகள் இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** நான் பத்திரிகையைப் பார்த்துத்தான் சொல்கிறேன்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** மதுரைக்குப் பெருமைதரக்கூடிய வகையில் அமைந்திருக்கிற கொடைக்கானல் மலையில் உள்ள ஏரியில் பொழுதுபோக்குக்காக உலாவ வேண்டுமென்றால் துடுப்பு வைத்து கையால் தள்ளக்கூடிய படகுகள்தான் இருக்கின்றன. ஆகவே, அங்கே விசைப் படகுகள் மூலமாகப் பொழுது போக்கு வதற்கு வசதியாக ஏதாவது ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** கொடைக்கானலில் உள்ள ஏரியைத் தூர் எடுப்பதற்காக 1 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது முடிந்தவுடன் விசைப் படகுகள் விடுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கொடைக்கானலில் அமைக்க இருக்கிற விடுதியில் 50 படுக்கைகள் ஒன்றாக இருக்குமா ? அல்லது கிளாஸ் வாரியாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** தனித்தனியே இருக்கும்.





**திரு. வை. சங்கரன் :** நான் கேட்டது—பயணிகளுக்கு விடுதி வசதியோடு, போர்டிங் வசதியும் அதாவது சாப்பாட்டு வசதியும் செய்து தரப்படுமா என்று கேட்டேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** சாப்பாட்டு வசதியும் இருக்கும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கொடைக்கானல், ஊட்டி போன்ற மலைவாசஸ்தலங்கள் அங்கே வரக்கூடிய டூரிஸ்டுகளை அட்ராக்ட் பண்ணக் கூடிய அளவிலே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே என்னென்ன திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் விவாதத்திற்கு வருகிறது. அதிலே சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்து, மேலும் அதில் என்னென்ன வசதிகள் செய்யலாம் என்பது பரிசீலனை செய்யப்படும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவரவர்களே, ஊட்டி, கொடைக்கானல் போன்ற பகுதிகள் சுற்றுலா செய்பவர்களைக் கவருகின்ற இடங்களாக இருக்க வேண்டும். அந்த முறையிலே ஊட்டியிலே சுற்றுலா செய்பவர்களை ஈர்க்கின்ற வகையிலே அங்குள்ள பூங்கா அமைந்திருக்கின்றது. ஆனால் கொடைக்கானலில் உள்ள ஏரிக்குப் பக்கத்திலேயுள்ள பூங்கா கவர்ச்சிகரமாக அமையவில்லை. அதை அழகான பூங்காவாக மாற்றியமைக்க வசதிகள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பூங்காவை அழகாக சுற்றுலா செய்பவர்களைக் கவருகின்ற வகையிலே மாற்றியமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இதைக் கவனத்திலே வைத்து அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. வை. சங்கரன் :** கொடைக்கானலுக்கு வரக்கூடிய பயணிகள் சுற்றியுள்ள கவர்ச்சிகரமான இடங்களைப் பார்ப்பதற்கு டாக்சி வசதி போதுமானதாக இல்லை. டாக்சி வாடகை அதிகமாகக் கேட்கிறார்கள். ஆகவே, சர்க்காரே இங்கே டாக்சிகளைச் சௌகரியமாக நடத்துவதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** சர்க்காரே ஏற்று நடத்துவதற்கு உத்தேசமில்லை. தனிப்பட்டவர்கள் இது விஷயமாக முயற்சி எடுத்தால் சர்க்கார் உதவியளிக்கும்.

* 67 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a Tourist Home at Kodaikanal Hills; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) & (இ) கொடைக்கானலில் ஐம்பது படுக்கை வசதிகள் கொண்ட பயணிகள் விடுதி ஒன்றை ரூபாய் 8 லட்சம் செலவு மதிப்பில் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்

[3rd August 1965

*Staff under Local Bodies*

* 68 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) when were orders issued for increasing the rates of dearness allowance for the staff working under local bodies, in pursuance of G.O. Ms. No. 623, Finance, dated 11th May 1964;

(*b*) whether increased rates of dearness allowance are applicable to the scavenging staff employed by the Municipalities and Panchayats; and

(*c*) if so, whether the same have been given effect to?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** (அ) அரசாங்க ஆணை எம். எஸ். 1092, கிராம நல-தல நிர்வாக இலாகா, தேதி 27-5-1964-லும், அரசாங்க ஆணை எம்.எஸ். 1186, கிராம நல-தல நிர்வாக இலாகா, தேதி 27-5-1964-லும் உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

(இ) ஆம்.

(உ) மேற்படி உத்தரவுகள் அமல் செய்யப்பட்டுள்ளன என்று சேலம், மதுரை மாவட்ட கலெக்டர்களைத் தவிர மற்ற எல்லா கலெக்டர்களிடமிருந்தும் தகவல் வந்துள்ளன. மதுரை, சேலம், கலெக்டர்களிடமிருந்து தகவல் எதிர்பார்க்கப்படுகின்றது.

9-00 a.m. **திரு. வி. எஸ். எஸ். மணி:** பஞ்சாயத்து நிர்வாகத்திலுள்ள ஸ்காவஞ்சர்ஸ்—தோட்டிகளை நீக்குவதும் சேர்ப்பதுமான பொறுப்பு பஞ்சாயத்துத் தலைவருடைய இஷ்டத்திற்கு விடப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக பஞ்சாயத்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து அவர்கள் முடிவின்படி அவர்களை நீக்கவோ, சேர்க்கவோ வழி செய்யப்படுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** இந்த உப கேள்வி இதிலே எழவில்லை.

**திரு. ம. கமலநாதன்:** நாட்டாண்மைக் கழகத்திலிருந்து ஊராட்சி மன்ற ஒன்றிப்பு மன்றங்களுக்கு மாற்றப்பட்டிருக்கும் ஊழியர்களின் ஊதிய உயர்வுக்கும், அரசாங்க அலுவலர்களின் ஊதிய உயர்வுக்கும் இடையே வித்தியாசம் இருப்பது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** என்னிடம் அந்தத் தகவல் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

SRI M. S. SELVARAJAN : Sir, is there any proposal to include them under the State service?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அம்மாதிரி உத்தேசம் இல்லை.



3rd August 1965]

**திரு. ஜே. மாதா கவுடர்:** டியர்னஸ் அலவன்ஸ் பொறுத்த வரை எல்லா ஜில்லாக்களிலும் ஒரே மாதிரியாக இருக்கிறது. மலைப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய ஊழியர்களைப் பொறுத்தவரை அங்கு விலைவாசி அதிகமாக இருப்பதால் அங்கு மேலும் அதிகமாக டியர்னஸ் அலவென்சை உயர்த்திக் கொடுக்க முன் வருவார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அம் மாதிரி உத்தேசம் இல்லை.

**திரு. வை. சங்கரன்:** மதுரை போன்ற நகரங்களில் நகர சுத்தித் தொழிலாளர்கள் எல்லாம் டெம்பரரியாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ரிடையர் ஆன பிறகு அவர்களுக்கு பிராவிடண்ட் பண்டு, பென்ஷன் போன்றவை கிடைக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு பர்மனென்சி கொடுக்க முன்வருவார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** இது பஞ்சப்படி பற்றிய கேள்வி. கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

*** 69 கேள்வி.—திரு. பி. முருகையன்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஊராட்சி மன்றங்களில் பணி புரியும் அலுவலர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் வீட்டு வாடகை அலவென்ஸ், அலுவலகங்கள் அமைந்திருக்கும் இடங்களின் அடிப்படையிலல்லாமல், ஒரே சீரான அளவில் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** இல்லை, இதைப் போன்ற உத்தேசம் எதுவும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

**திரு. பி. முருகையன்:** தாலூகாவின் தலைநகரிலே பஞ்சாயத்து யூனியன் அமைந்திருந்தால் பஞ்சாயத்து யூனியனில் பணி புரிகின்றவர்களுக்கு ஹவுஸ் ரென்ட் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. பஞ்சாயத்து எல்லையில் அந்தக் கூட்டு மன்றங்கள் அமைந்திருந்தால் அதிலே பணி புரிகின்றவர்களுக்கு ஹவுஸ் ரென்ட் அலவன்ஸ் கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு ஹவுஸ் ரென்ட் அலவன்ஸ் கொடுக்க சர்க்கார் முன்வருமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** தாலூகா தலைநகர், ஜில்லா தலைநகர், முனிசிபாலிடிகள் ஆகிய இடங்களில் இருக்கக் கூடிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குப் பாப்புலேஷன் அடிப்படையில் ஹவுஸ் ரென்ட் வழங்கப்படுகிறது. அதே அடிப்படையில் பஞ்சாயத்து ஊழியர்களுக்கும் வழங்கப்படுகிறது. சர்க்கார் ஊழியர்களுக்கு ஏற்றத் தாழ்வின்றி எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக ஹவுஸ் ரென்ட் அளிப்பதாக முடிவு செய்தால் பஞ்சாயத்து ஊழியர்களுக்கும் வழங்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

### பஞ்சாயத்து யூனியன்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மாற்றம்

* 70 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் உள்ள ஆசிரியர்களை மாற்றுவது பற்றிய உத்தரவு ஏதேனும் அண்மையில் அரசாங்கம் பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) இது சம்பந்தமாகப் பிறப்பிக்கப்பட்ட அரசாங்க ஆணையும் பிரதி* ஒன்று சட்டமன்றத்தின் பார்வைக்கு வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி: முன்பு பஞ்சாயத்து யூனியன் கமிஷனரும், தலைவரும் சேர்ந்து ஆலோசித்து ஆசிரியர்களை மாற்றி வந்தார்கள். புதிதாக வந்திருக்கிற உத்தரவில் ஆர்.டி.ஓ. சேர்மனைகவும், பஞ்சாயத்து யூனியன் தலைவர், டி.இ.ஓ., பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அடங்கிய குழு முடிவுப்படி ஆசிரியர்களை மாற்ற வேண்டும் என்ற உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். இந்த உத்தரவைப் போட வேண்டிய அவசியம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்த உத்தரவுக்கு என்ன அவசியம் என்பது சபை மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ள சர்க்காருடைய அறிக்கையில் இருக்கிறது. அதைப் படித்துப் பாருங்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : The order issued is good and it is working properly. Is there any proposal to include M.L.As. also in the *ad hoc* body thas has been constituted?

THE HON. SRI S. M. A. MAJID : No, Sir.

திரு. ம. கமலநாதன்: இந்த உத்தரவின் காரணமாகப் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் தனிப்பட்ட ஒரு அதிகாரி வந்து தலையிடக் கூடிய அளவிலே, பஞ்சாயத்து யூனியனுடைய சுயாமரியாதை பாதிக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஆர்.டி.ஓ.-வைப் போட்டிருப்பதைப் பற்றி எல்லா மாவட்ட ஊராட்சி மன்றங்களிலிருந்தும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இதை அரசாங்கம் மறு பரிசீலனை செய்து இதை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கனவே, ஆசிரியர்களை நியமிக்கக்கூடிய அதிகாரங்கள் அப்பாயின்ட்மென்ட் கமிட்டிக்குத்தான் இருக்கிறது. சர்க்கார் அவ்விதமான அதிகாரத்தை அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ள உத்தேசிக்கவும் இல்லை. எடுத்துக்கொள்ளவும் இல்லை. பஞ்சாயத்து யூனியன் எல்லையில்



ஆசிரியர்களை மாற்றும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன் தலைவர், பஞ்சாயத்து யூனியனால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஆகியோர் கொண்ட கமிட்டியிடம் இருந்தது. இந்த ஆசிரியர்களை மாற்றுவதைப் பொறுத்து சர்க்காருக்குப் பல புகார்கள் வந்த காரணத்தினால், சர்க்கார் நன்றாகப் பரிசீலித்து ஆர்.டி.ஓ.-வைத் தலைவராகக் கொண்டு இந்தக் கமிட்டியை நியமிக்க உத்தரவிட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன்: இந்த அறிக்கையிலே—

" This *ad hoc* body will ordinarily meet in the months of April and May and finalize the transfer proposals before the commencement of the year. . . In exceptional cases where such proposals have to be considered during the course of the year, the Panchayat Union Commissioner should send the proposals through the Panchayat Union Chairman to the Collector of the district and effect the transfer only after receiving his concurrence." . . .

என்று இருக்கிறது. அட்ஹாக் கமிட்டி ஆண்டுக்கு ஒரு முறை தான் கூடலாமா, மறுமுறை கூட வாய்ப்பு இல்லையா? அட்-ஹாக் கமிட்டி செய்த முடிவு தவறு என்று சொன்னால் அதை அவர்களே பின்னால் திருத்திக் கொள்ளலாமா? தவறு என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்து அந்த உத்தரவை மாற்ற அதிகாரம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பொதுவாக எல்லாவித மாற்றங்களும் வருஷ ஆரம்பத்திலேதான் இருக்கும். அம்மாதிரி மாற்றக் கூடிய காலங்கள்தான் ஏப்ரல்-மே என்று போடப்பட்டிருக்கிறது. தவறு ஏற்பட்டால் அதைக் கலெக்டர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு சென்று தவறை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஆசிரியர்களை மாற்றுவதிலே தவறு ஏற்பட்ட காரணத்தால் இந்த உத்தரவைப் போட்டிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தவறு இருக்கிறது என்ற காரணத்தால் அந்தக் குழுவிலே எண்ணிக்கையை மட்டும் அதிகரித்து விட்டால் போதுமா? பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கமிஷனராக அரசாங்க உத்தியோகஸ்தர் தான் இருக்கிறார். அவர் பேரில் அரசாங்கத்திற்கு நம்பிக்கை இல்லையா? கமிஷனரும், தலைவரும் சேர்ந்துதான் ஆசிரியர்களை மாற்றிவிடுகிறார்கள் என்று கருதித்தான் இந்த உத்தரவைப் போட்டார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பஞ்சாயத்துக் கமிஷனர் மீது நம்பிக்கை இல்லை யென்ற பிரச்சினை இல்லை. பொதுவாகப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து புகார்கள் வந்ததால் சர்க்கார் பரிசீலனை செய்து இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: ஆசிரியர்களை மாற்றுகிற முறையில் ஆர்.டி.ஓ. தலைமையில் உள்ள இந்தக் கமிட்டியில் சட்ட மன்ற உறுப்பினர்கள் இடம் பெறுவார்களா என்று கேட்ட கேள்விக்கு 'இல்லை' என்று பதில் சொன்னார்கள். அதற்குக் காரணம் என்ன?

[3rd August 1965

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சட்ட மன்றத்தில் அதிகமாக வேலை செய்யவேண்டுமே தவிர, அதிலே போய் அந்த அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்கும் அளவுக்குச் சட்ட மன்ற அங்கத்தினர்கள் இருக்கக் கூடாது. அட் ஹாக் பாடியில் சட்ட மன்ற அங்கத்தினர்கள் இடம் பெற்றால் அவர்கள் சட்ட மன்றத்தில் பணியாற்றுகின்ற வாய்ப்புக் குறைந்து விடும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஆசிரியர்களை மாற்றுவது பற்றிப் புகார்கள் வந்திருப்பதால் இந்த மாதிரி உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மற்ற இலாகாக்களில் இந்த மாதிரியான ஏற்பாடு ஒன்றும் செய்யவில்லை. மதுரையில் ஜில்லா கலெக்டர் ஒரு வருஷத்தில் நான்குபேர் மாறியிருக்கிறார்கள். ஆகவே, பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்து மட்டும் இந்த உத்தரவு போட வேண்டிய அவசிய மென்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** வருங்காலச் சந்ததிகளைச் சிருஷ்டிக்க அடிப்படையானவர்களாக ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்வார்கள். நிர்வாக இலாகாவிலே மாற்றுவது வேறு விஷயம். ஆனால், ஆசிரியர்களுக்கு உயர்ந்த முக்கியத்துவம் கொடுத்துச் சர்க்கார் இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. இதைப் பொதுவாக எல்லோரும் வரவேற்கிறார்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஜில்லா போர்டுகள் இருந்த காலத்தில் பள்ளிக்கூடக் கண்காணிப்புச் சரியாக இல்லை. பஞ்சாயத்து வந்த பிறகு ஆசிரியர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள் அவர்களை அடிக்கடி மாற்றுவதால் பெரிய கொந்தளிப்பு உண்டாகி இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த உத்தரவு வந்ததற்கு உண்மையான காரணம் என்ன என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** என்ன காரணம் என்பதை உப கேள்விக்குப் பதில் சொல்லும்போதே சொன்னேன். கொந்தளிப்பு என்று சொல்லும் அளவில் ஒன்றும் இல்லை. பொதுவாக, நிர்வாகத்திலுள்ள ஒவ்வொருவரும் சேர்ந்து முடிவு செய்தது நல்லது என்று உத்தரவு போட்டோமே தவிர, வேறு ஒன்றுமில்லை. பொதுவாக இந்த மாற்றம் வரவேற்கக் கூடிய ஒன்றுதான் ; எல்லோரும் வரவேற்கிறார்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி :** இது மிகவும் முக்கியமான பிரச்னை. ஜே.டி.ஸி. அவர்கள் வந்து ஒவ்வொரு மாவட்ட கவுன்சில் கூட்டும் போதும் அப்போது பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ஏகோபித்த அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ?

**கனம் திரு. சே. அ. மஜீத் :** ஜே.டி.ஸி. போய் வந்தபோது சட்டமன்ற அங்கத்தினர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள், மற்றவர்கள் என்ன குறிப்பிட்டார்களோ, அமைச்சர் செல்லும்போது சாதகமாகவும், பாதகமாகவும் அமைச்சரிடம் தெரிவித்தார்கள்.



3rd August 1965]

**திரு. எஸ். முருகையன் :** தனிப்பட்டவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகள் நடத்தி வந்தால் அதிலுள்ள ஆசிரியர்களை மாற்றுவதற்கும் இந்தக் கமிட்டிக்கு அதிகாரம் இருக்கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டுள்ள நேரடியான பள்ளிகள்தான்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்த நல்ல உத்தரவு போட்ட பிறகு ஆசிரியர்களிடையே மன நிம்மதி ஏற்பட்டிருக்கிறது. அதேபோல் அப்பாயின்ட்மென்ட் செய்வதிலும் இதே அட்-ஹாக் கமிட்டிக்கு விட்டுவிட்டால் நல்லதல்லவா ? அதைப் பரிசீலிப்பார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஆசிரியர்களை மாற்றுவதிலேயே கொந்தளிப்பு என்று குறிப்பிடும்போது அதில் மாறுதல் செய்வதற்கு இப்போது உத்தேசமில்லை.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

MR. SPEAKER : The hon. Member Sri Rama Arangannal, who has given a calling attention notice under rule 41, is not in his seat. So, we shall pass on to the next item.

## III. GOVRENMENT BILLS.

### (1) THE MADRAS AGRICULTURAL PRODUCE MARKETS (AMENDMENT BILL 1965.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Agricultural Produce Markets (Amendment, Bill, 1965.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Agricultural Produce Markets (Amendment) Bill, 1965."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI P. KAKKAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## IV. ANNOUNCEMENTS.

### (1) THE MADRAS GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL 1965.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965.

III.—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R VENKATARAMAN : Sri, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

V.—THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1965-66 DISCUSSION—*cont.*

* **திரு. இரா. நெடுஞ்செழியன்** : கனம் அவைத்தலைவர் அவர்களே, 1965–66-ம் ஆண்டுக்கான மின்சாரத் துறை நிதிநிலை அறிக்கையும், 1964–65-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையும் இந்த அவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அவைபற்றிய சில கருத்துக்களை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த மாநில அரசாங்கத்தின் கீழிருக்கிற நிறுவனங்களில் மிகப் பெரிய நிறுவனமாக ரூ. 227 கோடி மூலதனத்தோடு நடைபெறுகிற நிறுவனம் இந்த நிறுவனமேயாகும். மின்சாரத் துறை எந்த அளவிற்கு ஆர்வத்தோடும் அக்கறையோடும் பணியாற்றி வருகிறது என்பதை இந்த அவையில் உள்ள உறுப்பினர் பலரும் தெளிவுபட சுட்டிக் காட்டினார்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற வகையில் இந்த மாநிலத்தில் மின்சாரத் தேவை ஓரளவிற்கு நிறைவேறறப்படுகிற அளவிற்கு அதில் மிக அக்கறையோடும், ஆர்வத்தோடும் இந்தத் துறை ஈடுபட்டிருக்கிறது, அதில் மின்சாரக் குழுத் தலைவர் அவர்களும், தொழில் துறை அமைச்சர் அவர்களும் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதைப்பற்றி இந்த மன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுரை தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்த மாநிலம் அதிகமான அளவிற்கு மின்சாரத்தைப் பெருக்கி வருகிறது என்பதுபற்றி ஓரளவு மகிழ்ச்சி கொண்டாலும் மாநிலத்தின் தேவையை நிறைவேற்றுகிற அளவிற்கு அது அமைந்திருக்கிறதா என்றால் அமையவில்லை. கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அன்று இதுபற்றிக் கூறுகிறபோதுகூட மற்ற மாநிலங்களைவிட நாம் மின்சாரத்தை அதிகமாகப் பெருக்குவதில் முன்னேறியிருக்கிறோம் என்ற அளவோடு திருப்திப்படாமல் நம் தேவையை எந்தளவிற்கு நிறைவேற்றியிருக்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் மின்சார உற்பத்தியை நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று எடுத்துக் கூறினார்கள். நாட்டின் எதிர்கால வளர்ச்சி வேளாண்மைத் துறையைப் பொறுத்தும்,



தொழில் துறை வளர்ச்சியைப் பொறுத்தும், மின்சாரம் எந்தளவிற்கு தயாரிக்கப்படுகிறதோ, அதைப் பொறுத்தும்தான் அமைந்திருக்கிறது. நாட்டின் தேவையைக் கொண்டு நாம் மின்சார உற்பத்தியைக் கணக்கிட வேண்டும்.

இந்த நாட்டில் 100-க்கு 80 பேர்கள் விவசாயத் துறையை நம்பி வாழ்கிறார்கள். அவர்கள் மூலமாக கிடைக்கிற மூலப்பொருள்களைக் கொண்டுதான் செய்பொருள்களையும், உற்பத்திப் பொருள்களையும் நாம் இயற்றுதல் வேண்டும். மின்சாரத் துறை எந்தளவு வளர்ச்சி பெறுகிறதோ, அந்த அளவில் பொது வருமானமும் மக்கள் வாழ்க்கைத்தரமும் உயருகிறது. பயிருக்கு எப்படி நீர் பாய்ச்சுவது இன்றியமையாததாக இருக்கிறதோ, அதே போன்று தொழில் துறை பல்வேறு வகையில் வளர வேண்டுமானால் மின்சாரம் தொழிற்சாலைகளுக்குப் பாய்ச்சப்பட வேண்டும். மின்சார உற்பத்தி அதிகமாக இருந்தால்தான் தொழில்கள் நன்கு வளர வாய்ப்பு ஏற்பட முடியும். அந்த வகையில் மின்சாரத்தின் தேவையை நாம் உணர்ந்து வருகிறோம். அந்தத் தேவையை நிறைவேற்றுவதில் மேலும் மேலும் அக்கறை காட்டி வரவேண்டியது இன்றியமையாததாகும். ஆனால் தேவையைப் பார்க்கிறபோது இந்த அளவோடு நிறுத்தி விடுவதற்கில்லை. 1963-64-ல் 630 மெகா வாட் அளவிற்கு மின்சார உற்பத்தி பெற்றிருந்தோம் என்றும், 1964-65-ல் 775 மெகா வாட் என்றும், நடப்பாண்டில் 1,140 மெகா வாட்டாக உயரும் என்றும், நெய்வேலி அனல் மின்சார உற்பத்தி இதில் சேர்க்கப்படவில்லை என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இப்போது போடப்பட்டிருக்கிற திட்ட அடிப்படையில் பார்க்கிறபோது நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நமக்கு 3,600 மெகா வாட் தேவைப்படும் என்றும் ஆனால் 500 மெகா வாட் மின் சக்தி பற்றாக்குறையாக இருக்கும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பற்றாக்குறையைப் போக்குவதற்கு நாம் மேலும் பல முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

உலகத்தில் மின்சாரத் தேவை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே செல்கிறது. ஆகவே திருப்தி அடைந்துவிட்டோம் என்ற நிலையே ஏற்படாது. ஆனால் மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் நம் தேவையை இன்னும் எவ்வளவு வளர்க்க வேண்டியிருக்கிறது என்பதை உணரலாம். வளர்க்கத்தான் வேண்டும். ஏன் அந்த அளவிற்கு வளரவில்லை என்று கேட்பதற்காக நான் இதைக் குறிப்பிடவில்லை. நம் எதிர் காலத்தில் நாம் மற்ற நாடுகளுடன் இணைந்து வளரும் நிலையில் எந்த அளவிற்கு நாம் இன்னும் அதிகமாக மின்சாரத்தை பெறவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை உணர்த்தவே இதைச் சுட்டிக்காட்டுகிறேன். இன்று உலக சராசரிக் கணக்கைப் பார்த்தால் 1,465 கிலோ வாட் மணிகள் தனிப்பட்ட நபர் பெறுகிற அளவிற்கு இருக்கிறது உலகத் தேவை. அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் 8,263 கிலோ வாட் மணிகள் ஒரு தனி நபர் பெறுகிறார், பிரிட்டனை எடுத்துக் கொண்டால் [illegible] கிலோ வாட் மணிகள் பெறுகிறார். மேற்கு

ஜெர்மனியை எடுத்துக் கொண்டால் தனி மனிதன் ஒருவன் 3,884 கிலோவாட் மணிகள் பெறுகிறார். ஜப்பானை எடுத்துக் கொண்டால், தனி மனிதன் ஒருவர் பெறுவது 1,388, சோவியத் யூனியனை எடுத்துக் கொண்டால் தனி நபர் ஒருவர் பெறுவது 3,046 என்று இருப்பதைப் பார்க்கிறோம். இந்தியாவில் தனி நபருக்கு 161 கிலோவாட் மின்சாரம்தான் கிடைக்கிறது. இதை எதற்காக நான் சுட்டிக் காட்டுகிறேன் என்றால் எதிர்காலத்தில் நாம் நல்ல தொழில் வளர்ச்சியை அடைய வேண்டுமென்றால் நாம் எந்தளவிற்கு தனி நபர் தேவையைப் பெருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை உணர்த்துவதற்காகத்தான். இன்று இந்தியாவின் சராசரி உற்பத்தியான 161 கிலோ வாட் விட இரண்டு மடங்கு தமிழகம் பெருக்குகிற நிலையில் இருந்தாலும், எதிர்காலத்தில் நம் தொழில்கள் வளரவும், மூலப்பொருள்கள், கனிப்பொருள்கள், விளைபொருள்கள் இவற்றை செய்பொருள் களாக மாற்றுவதின்மூலம் இந்த மாநிலத்தின் வருமானம் பெருகவும் நாம் மின்சக்தியை மேலும் மேலும் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கு நம் நீர் மின்சாரத்தைப் பொறுத்தவரை அதற்கான வாய்ப்புக்கூறுகள் அத்தனையும் பெற்றுவிட்டோம் என்று குறிப்பில் கூறப்படுகிறது. நிறைவேற்றுகிற அளவிலாவது என்று குறிப்பில் கூறப்படுகிறது. சிறு சிறு நீர்வீழ்ச்சிகளில் இருந்து அந்த அந்தப் பகுதியின் தேவையை நிறைவேற்றுகிற அளவிலாவது சிறிய அளவில் நீர் மின்சாரம் பெற வழிவகை காண முடியுமா என்பது குறித்து உடனடியாகத் திட்டம் போட வேண்டும். வேறு வகைகளில் மின்சாரம் பெருக வேண்டுமென்றால் அனல் மின்சாரத்தின் மூலம்தான் பெருக்க வேண்டும். அலை மின்சாரத்தைப் பெருக்குவதற்கான மார்க்கங்கள் உலக நாடுகளில் ஆங்காங்கு இருக்கின்றன. நம் மாநிலத்தில் கடற்கரை இருந்தபோதிலும் அதிலிருந்து எளிதாக மின்சாரத்தைப் பெற முடியுமா என்பதுபற்றி ஐயப்பாடு தெரிவிக்கப் படுகிறது. மேலை நாடுகளில்கூட இதுபற்றிய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. விரிவான வகையில், எளிதான முறையில் அதை நிறைவேற்றுவதற்கு வழிவகைகள் கண்டு பிடிக்க முடியவில்லை. எதிர்காலத்தில் வேண்டுமானால் அந்தக் கூறுபாடுகள் காணப்படலாம் என்று கூறப்படுகிறது. எனவே அந்த அளவில் மின்சாரத்தை பெருக்குவதற்கு வழிவகை இருப்பதாகத் தெரிய வில்லை. சூரிய வெப்பத்தைக்கொண்டு அதிலிருந்தும் மின்சாரத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்றாலும், அது கட்டுபடியாகி வராது என்று கூறப்படுகிறது. நீர் நிலையங்களிலிருந்து கிடைக்கின்ற மின்சாரத்தின் அளவு குறைகின்ற நிலையில் இருப்பதாலும், வேறு வகைகளில் கிடைக்கின்ற மின்சாரத்தின் கட்டணம் அதிகமாகும் என்கிற நிலை இருப்பதாலும், அனல் மின்சாரத்தைப் பெருக்குவதற்கான முயற்சிகளைக் காண வேண்டியது அவசியமாகும். அவ்வப்போது கோடைக் காலத்தில் மின்சார வெட்டு வந்து விடுமோ என்று ஒவ்வொரு நேரமும் நாம் அச்சப்பட வேண்டிய நிலைமையில் இருந்து வருகிறோம். நீர் மின்சாரத்தின் அளவு கோடை காலத்தில் குறைகின்ற நேரத்தில் அதை ஈடு செய்து கொள்வதற்கு ஆங்காங்கு அனல் மின்சாரத்தை





ஏற்படுத்துவதன் மூலம் நம்முடைய குறைபாட்டை நீக்கிக் கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன். அனல் மின் சாரத்தைப் பொறுத்தவரையில் தூத்துக்குடியிலும், எண்ணூரிலும் அனல் மின்சார நிலையங்கள் ஏற்படுத்தப்படலாம் என்பது சற்று ஆறுதல் அளிக்கிறது.

கல்பாக்கத்தில் அணு மின்சார நிலையத்தை ஏற்படுத்துவதற் கான வாய்ப்பைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று அடிக்கடி நான் குறிப்பிட்டு வந்துள்ளேன். மற்றவர்களாலும் இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. இப்போது அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற முன்னுரையில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள், இந்த அணுமின்சார நிலையத்தை அமைக்க முடியும் என்ற உறுதிப்பாட்டைத் தெரிவித்திருக்கி றார்கள். நான்காவது திட்ட காலத்தில் கல்பாக்கத்தில் அணுமின் சார நிலையத்தை உருவாக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுமானால், இந்த மாநிலத்தின் தேவையை ஓரளவு நிறைவேற்றிக் கொள்வதற்கு அது பயன்படக்கூடும். அதோடு அணுமின்சாரத்தின் விலையும் ஓரளவுக்கு மலிவாக இருக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை எந்தவிதத்திலும் உருவாக்குகின்ற முயற்சியில் நமது அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாநிலத்தில் மேலும் மின்சாரத்தை பெருக்குவதற்கு, நெய்வேலியில் முன்னால் போடப்பட்டிருந்த குறியீட்டைவிட, அதாவது ஆரம்பத்தில் 400 மெகாவாட் உற்பத்தி செய்யலாம் என்று சொல்லப்பட்டிருந்தும், பின்னால் 600 மெகா வாட்டாக பெருக்கப்பட முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்கிற குறிப்பும் தரப்பட்டிருக்கிறது. மேலும் இதை 1,000 மெகா வாட்டாக பெருக்குவதற்கான வாய்ப்பும் இருப்பதாக சொல்லப் பட்டிருக்கிறது. காரணம், அங்கு ஏராளமாக நிலக்கரி கிடைப்ப தால் அதைக்கொண்டு பெருமளவு மின்சாரம் உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது. அதே நேரத்தில், இக்கரியை "பிரிக்கெட்" ஆக எடுத்து வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, மேலும் மின்சாரத்தை பெருக்கும் நோக்கத்தோடு, மின்சாரத்தை உற்பத்தியாக்குவதற்கு உதவுகின்ற அளவில் வீடுகளுக்கு கொடுக்கின்ற வாய்ப்பைக் குறைத்துக்கொண்டாவது, அனல் மின்சாரத்தை 1,000 மெகா வாட்டாக அல்லது, 1,500, 2,000 மெகா வட்டாக—நாளுக்கு நாள் உயர்த்திக்கொண்டு போகின்ற நிலையில்—நிலக்கரியைப் பயன் படுத்த வேண்டும்—அதற்கான சூழ்நிலையை உருவாக்கிக்கொள்வதில் இந்த அரசாங்கம் மேலும் கவனம் செலுத்த வேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். நீர் மின்சாரம் கிடைக்கக் கூடிய வாய்ப்பில், அதிகமான அளவில் வாய்ப்பு இல்லை என்ற நிலையிருப்பதால், மேலும் நமது தேவையை அனல் மின்சாரத்தின் மூலம்தான் நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்ற நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். நீர் மின்சாரத்தை விட, சிறிதளவு கூடுதலாகவே அனல் மின்சாரத்தின் விலை இருக்கிறது என்று கருத்துச் சொல்லப்பட்டாலும்கூட, அதிக அளவு மின்சாரத்தை பயன்படுத்தி, அதன் மூலம் கிடைக்கின்ற

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1965

பயனை பெருக்கி, அதிலிருந்து கிடைக்கின்ற அதிக வருவாய் மூலம் ஈடு செய்து கொள்ளக்கூடிய முறையில், விலை சற்று அதிகமாக இருந்தாலும், அனல் மின்சாரத்தைப் பெருக்குவதன் மூலம் இந்த மாநிலத்தின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும். அதை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பைப் பெருக்க வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒகனேக்கல் மின்சாரத் திட்டத்தின் மூலம் நமது மாநிலத்தில் இன்னும் பல தேவைகளை நிறைவு செய்துகொள்ள முடியும். அதைப் பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பில் சொல்லப்பட்டிருக்கின்றது. குறிப்பில் சொல்லப் பட்டிருப்பது:

• "போர்டு இத் திட்டத்திற்கு முதலிடம் அளித்து நான்காவது திட்டக் காலத்தில் நிறைவேற்றுவதற்காக அதை நான்காவது திட்டத்தில் சேர்த்துள்ளது. தமிழ் நாடு பகுதியில் விரிவான பரிசீலனைகள் பூர்த்தியாகி விட்டன. மாற்றியமைக்கப்பட்ட திட்ட அறிக்கை ஒன்று மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை மேற்கொள்ள மைசூர் அரசாங்கத்தின் சம்மதமும், மத்திய அரசாங்கத்தின் ஆட்சேபணையில்லை எனக் கூறும் சான்றிதழும் எதிர் பார்க்கப்படுகின்றன" என்பதாகும். மைசூர் அரசாங்கத்தோடு நடத்தின பேச்சு வார்த்தையின் மூலம் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு ஏதாவது இருக்கின்றதா என்பதை நான் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புகின்றேன். அதே நேரத்தில் நான்காவது திட்டத்தில் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையும் இதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றுவதன் மூலம் இரு மாநிலங்களும் பயன்பெறத் தக்க வகையில் இந்தத் திட்டத்தை செயல்படுத்துகின்ற வகையில் வாய்ப்புக்கள் இருக்கின்றனவா என்பதையும் நான் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன். இரண்டு மாநிலங்களும் தங்கள் முதலீட்டை பயன்படுத்தி இந்த ஒகனேக்கல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வழிவகை இல்லாவிட்டாலும், இதை மத்திய அரசாங்கமே எடுத்து மேற்கொண்டு, அதன் மூலம் மின்சாரத்தைப் பெருக்கி, இரு மாநிலங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கின்ற முயற்சியை மேற்கொள்ளுமாறு மத்திய அரசாங்கத்தை இந்த அரசாங்கம் வற்புறுத்துமா என்பதையும் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

தனியார் நிறுவனங்களை அரசாங்கம் மேற்கொள்ளுதல் வேண்டும் என்கின்ற கருத்து அடிக்கடி இந்த மன்றத்தில் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. தனியார் நிறுவனங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று அடிக்கடி இந்த மன்றத்தில் சொல்வதற்குக் காரணம், தனியார் நிறுவனங்களின் கீழ் இருக்கும் மக்கள் அடைகின்ற கஷ்டங்கள் பலப் பல, மின்சார கழகத்தால் நடத்தப்படும் மாவட்டங்களில் [illegible]



3rd August 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

சலுகைகள், வாய்ப்புக்கள் தனியார் நிறுவனங்களின்கீழ் இருக்கும் மாவட்டங்களில் கிடைப்பதில்லை. தனியார் நிறுவனங்கள் இருக்கின்ற இடங்களில் பல விதமான கஷ்டங்கள் இருக்கின்றன. எத்தனையோ கிராமங்கள் இன்னும் மின்சார வசதி பெறாமல் இருந்து வருகின்றன. கிட்டத்தட்ட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திற்குள் எல்லா கிராமங்களும் மின்சார வசதி பெற்று விடும் என்றும், அதன் மூலம் வேளாண்மையைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்றும், தொழில் வளத்தை பெருக்கிக் கொள்ள முடியும் என்றும் கூறியிருந்தும், கோவை, வட ஆற்காடு மாவட்டங்களைத் தவிர ஏனை மாவட்டங்கள் போதுமான அளவு மின்சாரத்தைப் பெறவில்லை. அதாவது கோவை மாவட்டத்தில் 2,707 ஊர்களுக்கும், தென் ஆற்காடு மாவட்டத்தில் 2,096 ஊர்களுக்கும் மின்சாரத்தின் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு மதுரை, சேலம், இராமனாதபுரம் போன்ற மாவட்டங்களில் இந்த அளவுக்கு வசதி பெறவில்லை என்றும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் 1,745-ம், மதுரை மாவட்டத்தில் 1,536-ம், சேலம் மாவட்டத்தில் 1,312-ம், திருநெல்வேலியில் 1,251-ம், இராமனாதபுரத்தில் 1,056-ம் என்றுதான் காணப்படுகிறது. இதிலும் குறைவாக தஞ்சையில் 608-ம், தென்னாற்காடு மாவட்டத்தில் 986-ம், கன்னியாகுமரியில் 551-ம் நீலகிரியில் 324-ம், திருச்சியில் 871-ம் என்று தான் வருகின்றன. இதற்குக் காரணம் தனியார் நிறுவனங்கள் இந்த இடங்களில் இருப்பதினால்தான். தனியார் நிறுவனங்கள் நடந்துகின்ற இடங்களிலும், மின்சாரக் கழகம் செய்து கொடுக்கின்ற வசதிகளையும் வாய்ப்புகளையும் தனியார் நிறுவனங்கள் தருவார்களேயானால், அவர்களிடமிருந்து பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமே இருக்காது. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போன்று, நாம் இதிலே கொண்டுபோய் பணத்தை முடக்குவதைவிட, புதிதாக வேறிடத்தில் செலவிடலாம். மின்சாரக் கழகம் செய்து கொடுக்கின்ற வசதிகளை இத்தகைய தனியார் நிறுவனங்கள் செய்து கொடுக்காமல் இருப்பதின் காரணமாகத்தான், மின்சாரக் கழகம் இவ்விடங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மாவட்டரீதியாக சொல்லப்படுகிறது. இப்போதுள்ள நிலையில் எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுப்பது என்பது அவசியமாகிறது. தஞ்சை மாவட்டத்தில், கீழ் நீரோட்டங்களை வெளியில் எடுத்து, ஆற்று நீர் பாயாத நேரங்களில்—கீழ் நீரோட்டங்கள் வாயிலாக உதவ முடியும் என்ற நிலை இருப்பதால், அத்தகைய ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால், பெரியதொரு உதவியாக இருக்கும். அதன் மூலமாக அரசாங்கம் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு வழிவகை செய்ததாக அமையும், கீழ் மட்டத்திலுள்ள கீழ் நீரோட்டங்களை மின்சாரத்தின் உதவியினால் எடுத்து பயன்படுத்த முடியும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மின்சாரத்தின் உதவியின் மூலம் கிராமங்களில் இதை பயன் படுத்திக்கொள்ள முடியும். இதற்கு உதவியாக தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் இருக்கின்ற தனியார் நிறுவனங்களை,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1965

அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். தனியார் நிறுவனங்களை அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டும் என்று உறுப்பினர்கள் கேட்டுக்கொண்ட வேண்டுகோளுக்கு, அரசாங்கம் " எஞ்சியுள்ள மின்சார நிறுவனங்களை படிப்படியாக எடுத்து நடத்துவது குறித்து பரிசீலனை நடந்து வருகிறது. . . " என்கிற அளவுக்கு குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் பரிசீலனை நீண்ட காலமாகவே இருந்து வருகிறது, பரிசீலனைக் கட்டத்தைத் தாண்டி முடிவு எடுக்கும் கட்டமாக வரவேண்டும் என்பதை நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் நம்முடை மாநிலத்தில், 3,600 மெகா வாட்ஸ் மின்சாரம் தேவைப்படும் என்று புள்ளிவிவரத்தின் மூலமாக சொல்லப்பட்டிருக்கிறது. போட்டிருக்கின்ற திட்டத்தின் அடிப்படையில் பார்த்தால், கிட்டத்தட்ட 3,000 மெகாவாட்ஸ்தான் பெறமுடியும் என்ற நிலைமை தென்படுகிறது. 500, 600 மெகா வாட்ஸ் மின்சாரம் பற்றுக்குறையாக அமையும் என்றும் சொல்லப் படுகிறது. நான்காவது திட்டத்தின் அடிப்படையில் மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு 216 கோடி தேவைப்படும் என்றும், அதை மத்திய அரசாங்கத்தினிடமிருந்து கேட்டுப் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளும் என்றும் அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற குறிப்பில் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், நான்காவது திட்டத்திற்கு தேவைப்படுகிற 216 கோடியில் இப்போது அட்வான்ஸ்—முன் பணமாக—மத்திய
9-30 a.m. அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். அம்முயற்சி எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும் இந்தியப் பாராளுமன்றத்தில் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது டாக்டர் கே. எல். ராவ் அவர்கள்—இந்திய சர்க்காரின் சார்பாக மின்சார உற்பத்தி நிலையங்கள் அமைக்கப் படுவது பற்றிக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் சொல்லும் போது—இரண்டு பெரிய நிலையங்களை அமைப்பதற்கு, ஒன்றை வடக்குப் பகுதியில் அமைப்பதற்கும், மற்ற ஒன்றைத் தெற்குப் பகுதியில் அமைப்பதற்கும் எண்ணம் இருக்கிறது, அதை அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்றும், மாநிலங்களின் எண்ணங்கள் அறியப்படுகிறது என்றும், அதற்குச் சில மாநிலங்கள் ஆட்சேபனை தெரிவித்திருக்கின்றன என்றும், சில மாநிலங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மாநிலத்தின் கருத்து அதைப் பொறுத்து அறிவிக்கப்பட்டதா ? அந்தத் திட்டம் இந்த மாநிலத்துக்கு நன்மை பயக்கும் திட்டமாக இருக்கும் என்று இந்த சர்க்கார் கருதுகிறதா ? அதைப் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு என்ன கருத்தைத் தெரிவித்தது ? என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். அந்தத் திட்டத்தின்படி, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் மூலமாக ஒரு பெரிய மின்சார உற்பத்தி நிலையம் ஏற்படுமானால், மத்திய அரசாங்கத்தில் செலவில்



3rd August 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

ஏற்படுமானால், அது நம் மாநிலத்திற்குப் பயன்படுவதாக அமையக் கூடுமே, அதைச் செய்ய நமது அரசாங்கம் முன் வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மேலும், மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கான முறையிலே பல முயற்சிகளில் ஈடுபட்டு வந்தாலும்கூட, மின்சார உற்பத்திச் செலவைக் குறைக்க வழிவகைத் தேடவேண்டும். மின்சார உற்பத்திச் செலவு நாளுக்கு நாள் பெருகி வருவதாகப் பல புள்ளி விவரங்கள் மூலம் தெரிவிக்கப்படுகிறது. அதற்கென ஒரு வல்லுநர் குழு நியமித்து எந்தெந்த வகைகளில் மின்சார உற்பத்திச் செலவைக் குறைக்கலாம் என்று அந்தக் குழு குறிப்பிடுகிறது என்று பார்த்து, அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். விலையைக் குறைப்பதற்கான வழிகளைக் கண்டறிந்து, குறைந்த விலையில் கொடுப்பதன் மூலமாக விவசாயிகள் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பு ஏற்பட முடியும். அதைச் செய்வதற்கும் முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், மின்சாரம் தருவதைப் பொறுத்த வரையிலும் தனி உறுப்பினர்கள் பலரும் ஆங்காங்கு பல இடங்களில் விண்ணப்பங்கள் கொடுத்தும்கூட, அவைகள் காலா காலத்தில் நிறைவேற்றப்படாத குறைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். எடுத்துக்காட்டாக நான் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். திருப்பூருக்கு அருகில் ராயபுரம் என்ற பகுதியில் ஏழு பேர்கள் கிணறுகளில் மோட்டார் வைத்து ஓட்டுவதற்கு விண்ணப்பித்துக்கொண்டு சாங்க்ஷன் ஆகி ஒரு ஆண்டுக்கு மேல் ஆகியும் 4—12—1964-லும், 9—6—1964-லும் சாங்க்ஷன் ஆகியும், அதற்குப் பிறகு 10-15 தடவைகள் முயற்சி எடுத்தும், இரண்டு ரூபாய் வட்டிக்கு 100 ரூபாய் என்ற முறையில் கடன் பெற்று மோட்டார்கள் வாங்கி வைத்தும், வொர்க் ஆர்டர் சாங்க்ஷன் ஆகியும் மின் இணைப்பு செய்யும் வேலை நிறைவேறவில்லை என்ற குறைபாடு எடுத்துச் சொல்லப்படுகிறது. பல தடவைகள் விண்ணப்பம் கொடுத்தும், அவர்களுக்கு இணைப்புகள் ஏற்படுத்த முடியாத அளவுக்கு, சாங்க்ஷன் ஆர்டர்கள் வந்தும் வேலை பூர்த்தி செய்யப் படாது இருக்கின்றது. "Work Order No. 34988, dated 4th December 1964, Sanction D.R. No. 145-M/64-65, dated 9th June 1964, Kalivelumpatti in Palladam taluk."— இதிலும்கூட சாங்ஷன் கொடுக்கப்பட்டும்கூட ஓராண்டு காலம் கவனிக்கப்படாமல் இருக்கின்றது. ஒரு எடுத்துக்காட்டாகத்தான் இதை நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். பல இடங்களில் மின் இணைப்புக்கு ஏற்பாடுகள் செய்தும், கடன் பட்டு மோட்டார்கள் வைத்தும் மின் இணைப்பு கிடைக்காத நிலையில் அவர்கள் பல இடர்பாடுகளுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd August 1965

மின் இணைப்பாளர்களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய குறைபாட்டை தொழில் அமைச்சர் அவர்களுக்கும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மின் இணைப்பாளர்களாக லைசென்ஸ் பெற ஆயிரம் ரூபாய் பாங்கில் கட்டி டெபாசிட் செய்யவேண்டும் என்ற விதி இருக்கிறது. டெக்னிஷியன்ஸ் ஆக லைசென்ஸ் பெற்றவர்களுடன் கூட தனிப்பட்டவர்களும் காண்ட்ராக்டர்களாக மாறுகிறார்கள். அவர்களுக்குள் வேண்டுமானால் பாகுபாடு வைத்தால் பரவாயில்லை. ஆயிரம் ரூபாய் கட்ட முடியாத அளவுக்கு இருக்கிறது என்ற முறையீடு இருக்கிறது; அதைக் குறைப்பதற்கு வழி இருக்கிறதா என்று கனம் முதல் அமைச்சர் அவர்களும், கனம் தொழில் அமைச்சர் அவர்களும் சிந்திக்கவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். கேரள மாநிலத்தில் லைஸென்ஸ் பெறுவதற்கு 100 ரூபாய் என்றும், அதைத் திருப்பிப் புதுப்பிக்க 25 ரூபாய் செலுத்தினால் போதும் என்ற முறை இருப்பதாகத் தெரிகிறது. ஆயிரம் ரூபாய் என்பது அதிகம் என்று கருதி, அதைக் குறைக்க வழி இருக்கிறதா என்று காணவேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

மேலும், மின்சாரத் துறை பொதுவாகப் பாராட்டக்கூடிய முறையில் இருந்தாலும், குறைபாடுகளும், குற்றங்களும், பிழைகளும் மற்றவைகளும் சில சில இடங்களில் நடைபெறுகின்றன. தவிர்க்கப்படக்கூடிய செலவுகளும், தேவைப் படாத செலவுகளும், அதிகப்படி செலவுகளும் ஏற்பட்டுள்ளது பற்றி தணிக்கையாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து அவைகள் தவிர்க்கப்பட்டால் தான் நிறுவனம் செம்மையாக இயங்க முடியும். தவிர்க்கப்படக் கூடிய செலவுகள் என்னென்ன, தேவைப்படாத செலவுகள் என்னென்ன என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து, அவைகளைத் தவிர்ப்பதற்கான வழி வகைகளைக் காண முயலுதல் வேண்டும். எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் நிலம் வாங்கியது பற்றிக் குறிப்பிட்டபோது, இது குறிப்புகள் அடிப்படையில் ஆராயப்படவேண்டிய ஒன்று என்று கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இது ஐயம் எழுப்பக் காரணமாக இருக்கிற காரணத்தினால் தலைமை தணிக்கையாளரைக் கொண்டு ஆராய்ந்து முடிவு எடுக்கலாம் என்று கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அன்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதைத் தீவிரமாகக் கண்டறிந்து, ஏற்படக் கூடிய முடிவுகளையொட்டித் தக்க நடவடிக்கை எடுத்தால்தான் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் இருக்க வழிவகை ஏற்பட முடியும். இதைத் தீவிரமாகக் கண்டறிந்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும், அதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்,

வணக்கம்.



3rd August 1965]

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதம் இந்த ஆண்டு [illegible] பயன் உள்ளதாக, உபயோககரமாக, இருந்தது என்று நான் [illegible]ல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல அங்கத்தினர்கள் [illegible] [illegible]சனைகள் சொன்னார்கள். பல அங்கத்தினர்கள் தங்க[illegible] [illegible]தியிலே என்னென்ன திட்டங்கள் இன்னும் நி[illegible]வேற்றப்படவில்லை, குறைபாடுகள் என்னென்ன இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். நாம் வகுத்திருக்கிற வழியின்படி தனித் தனி அங்கத்தினர்கள் கோரிக்கைகள், அவர்களுடைய தொகுதி பற்றிய கோரிக்கைகள் எல்லாவற்றையும் மின்சார போர்டு பரிசீலனை செய்து அவைகளில் என்னென்ன நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, என்னென்ன நிறைவேற்றப்படவில்லை என்று அது பற்றி ஒரு அறிக்கையை சபை முன்னால் வைக்கப்படும். அதே போல தனித் தனி பகுதிகளைப் பற்றி, தங்கள் தங்கள் பகுதியில் நிறைவேற்றப் படாத திட்டங்கள் இருக்குமானால், குறைகள் இருக்குமானால், அவைகளையெல்லாம் இந்த ஆண்டும் பரிசீலனை செய்து, வழக்கப்படி சட்ட சபையில் அறிக்கை வைக்கப்படும் என்று நான் முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது, மின்சாரக் கழகம் வேலை செய்கிற முறைக்கும் ஒரு சர்க்கார் இலாகா வேலை செய்கிற முறைக்கும் உள்ள வேறுபாடு கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும் என்று நான் நம்புகிறேன். சர்க்கார் இலாகாவாக இருக்குமானால் அதையொட்டிய எல்லாவித உத்திரவுகளையும் சர்க்கார் போடும். ஒரு தனிக் கார்ப்பரேஷனாக இருக்குமானால், கார்ப்பரேஷன் அலுவல்கள் எல்லாவற்றையும் ஒரு போர்டு வைத்து அது முடிவு செய்யும். சர்க்காருக்கு அந்த முடிவுகள் தெரிவிக்கப்படும். சர்க்காரிடத்திலிருந்து பணம் கோரினால் அது பற்றி ஆலோசித்து பணம் கொடுக்கப்படும். சர்க்காரிடத்திலிருந்து வாங்கிய பணத்திற்கு வட்டி கொடுப்பதைப் பொறுத்த வரையில் கொடுக்க முடியுமானால் கொடுக்கவேண்டுமென்றும், இல்லையென்றால் பிற்பாடு கொடுப்பதுபற்றியும் சொல்லப்படும். டைரக்ஷன் கொடுக்கும் ஒரு அதிகாரம் தான் சர்க்காருக்கு உண்டு. அது செக்ஷன் 78 பிரகாரம் பாலிஸி மாட்டர்ஸில் தான் கொடுக்கலாம். பொதுவாக அன்றாட அலுவல்களில் சர்க்கார் தலையிடுவதில்லை. சர்க்கார் தலையிடுவதற்கு அந்த வித அமைப்பு, எலெக்ட்ரிசிடி சப்ளை ஆக்டில் கொடுக்கவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்கை பூர்வமாகச் சொல்லப்பட்டவைகளை முதலில் எடுத்துக்கொண்டு—ஏனென்றால் அதற்கு சர்க்கார் பொறுப்பு—அப்படி சர்க்கார் பொறுப்பில் இருக்கிற விஷயங்களுக்கு பதில் சொல்லிவிட்டு, பிறகு போர்டார் பொறுப்பில் இருக்கிற விஷயங்களுக்கும் விவரம் கூற முன் வருகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும் போது, எதற்காக தூத்துக்குடியிலே 250 மெ.வா. மின்சார சக்தி உற்பத்தி செய்வதைத் தனியாரிடம் கொடுக்க வேண்டும், இது

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [3rd August 1965

ஜனநாயக சோஷலிஸத்திற்குச் சரியானதுதானா முரண்பட்டதில்லையா என்ற கேள்வியை எழுப்பினார்கள். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல, நம் ராஜ்யத்திற்கு மின்சார சக்தி எவ்வளவு உற்பத்தி செய்தாலும் போதாது என்பது இல்லை. பற்றாக்குறை தான் இருக்கிறது. மற்ற மாநிலங்களிலே அதிகமாக மின்சாரத்தை உற்பத்தி செய்துவிட்டு, என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கக்கூடிய அளவுக்கு ஒரு நிலைமை வந்துவிடும் என்று அஞ்சுகின்ற போக்கு இருக்கிறபொழுது, நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக் கொள்வோமானால், எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்தாலும், அது பற்றாக் குறையாகத் தான் இருக்கும் என்ற நிலைமை இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் நாம் ஆற்றிய சாதனைகள் இந்தியாவிலேயே முதன்மையானது. மற்ற ராஜ்யங்கள் செய்வதைவிட நம்முடைய ராஜ்யத்தில் அதிகமாக மின்சாரம் உற்பத்தி செய்திருக்கிறோம். நாம் அவ்வளவு அதிகமாக மின்சார உற்பத்தி செய்தாலும், நமது ராஜ்யத்தில் பற்றாக் குறை இருக்கிறது. காரணம் என்னவென்றால், நமது ராஜ்யத்தில் பொருளாதார வளர்ச்சி மிக வேகமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்தப் பகுதிகளிலே மின்சாரத் தேவை அதிகமாகி வருகிறது. மின்சாரத்தை பல துறைகளிலே பயன் படுத்துகிறார்கள். தொழில் வளம் வேகமாக முன்னேறி வருகிறது. சிறு தொழில்களுக்கும் நாம் கணக்குப் போட்டதைவிட அதிகமாக மின்சாரம் தேவைப்படுகிறது. விவசாயத்திற்கு நம் ராஜ்யத்தில் மின்சாரம் உபயோகப்படுத்தப்படுவது போல் வேறு எந்த ராஜ்யத்திலும் உபயோகப்படுத்தப்படுவதில்லை. இந்தக் காரணங்களால் நம்முடைய தேவை நாம் எவ்வளவு உற்பத்தி செய்தாலும், அதைவிட அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஒரு ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி அந்த ராஜ்யத்தினுடைய திட்டத்தைப் பொறுத்துத்தான், எவ்வளவு திட்டங்களுக்கு நமக்கு கொடுத்திருக்கிறார்களோ, அந்த திட்டங்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறோமோ, அந்த அளவுக்குத்தான் நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். நமது ராஜ்யத்தில் ஓரளவுக்கு திட்டங்களுக்கு அதிகமாகவே திட்டங்கள் போட்டு மின்சார உற்பத்தி செய்திருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலத்திற்குக் கொடுத்த திட்டங்களுக்கு ஒதுக்கிய தொகை ரூ. 100 கோடி. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலே நாம் 125 கோடி ரூபாய் அளவு மின்சாரத்திற்கு பயன்படுத்தியிருக்கிறோம். அந்த அளவுக்கு நம்முடைய ராஜ்ய நிதியிலிருந்து ஈடுகட்டி அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் நமக்கு ஒதுக்கக்கூடும் என்று எதிர்பார்க்கிற தொகை—ஏனென்றால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் இறுதி உருப்பெறவில்லை—ரூ. 216 கோடியாக இருக்கும். இந்த ரூ. 216 கோடியை நம்முடைய மின்சார திட்டங்களுக்கு கொடுத்தோமானால், தூத்துக்குடியில் 100 மெகாவாட் மின்சாரம்தான் உற்பத்தி செய்ய முடியும். அதற்கு மேல் உற்பத்தி



3rd August 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

செய்வதற்கு நம்மிடத்தில் பணம் இல்லை. இப்பொழுது தனியார் ஒருவர் '250 மெகாவாட்டுக்கு நாங்கள் உற்பத்தி நிலையம் போட்டுக் கொடுக்கிறோம், போட்டு நாங்கள் விநியோகம் செய்யவில்லை, மற்ற நிலையங்களைப் போலவே அதையும் உங்களிடம் கொடுத்து விடுகிறோம், அதாவது, சர்க்கார் இடத்திலே கொடுத்துவிடுகிறோம், அவர்கள் சொத்தாகவே கொள்ளப்படும், எங்களுக்கு 12 ஆண்டுகளுக்குள் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டால் போதும்' என்று சொல்லி முன்வந்தார்கள். அவ்வாறு அவர் வருகிற காரணத்தினால், நாம் திட்டமிட்டதைவிட மேற்கொண்டு 150 மெகாவாட் அதிகமாக மின்சாரம் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு அவர்கள் கொடுக்கவில்லை என்று சொன்னால் 216 கோடி ரூபாய்க்குள்ளாக எவ்வளவு செலவழிக்க முடியுமோ, அவ்வளவுதான் செய்ய முடியும். ரூ. 216 கோடி நாம் செலவிட்டால், தூத்துக்குடியில் 100 மெகாவாட்தான் கிடைக்கும். 250 மெகவாட் வேண்டுமென்று சொன்னால், திட்டத்திற்கு அப்பால் வேறு உதவிகள் நமக்குக் கிடைக்குமா என்று பார்க்கவேண்டும். திட்டத்திற்கு மேல் அதிகமாக உதவி ஒரு துறையிலே கிடைக்கின்ற காரணத்தினால், அதை நாம் ஏற்றுக் கொள்ளலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். இதைப்போல ஆந்திர ராஜ்யத்தில் ராமகுண்டத்தில் 250 மெகாவாட் செட் போட்டு சர்க்காருக்கு மாற்றியும் கொடுத்துவிடுகிறார்கள். அவ்வாறு மாற்றிக் கொடுப்பதன் மூலம் இந்த மின்சார நிலையத்திலே அவர்களுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. மின்சார நிலையம் நம்முடையதாகிவிடும். கடனை மாத்திரம் நாம் திருப்பிக் கொடுக்க வேண்டியதாக இருக்கும். இந்த ராஜ்யத்திற்கு நாம் எவ்வளவு மின்சாரம் திட்டமிட்டிருக்கிறோமோ, அதைவிட அதிகமாக கிடைக்கும்; கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் திட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஜனநாயக சோஷலிஸம் உண்மையாகவே உருவெடுக்கவேண்டும் என்று சொன்னால், எவ்வளவு அதிகமாக நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்து அதிகமான மக்களுக்குக் கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்குத் தான் ஜனநாயக சோஷலிஸம் வளர்ச்சி பெற முடியும். லெனின் சொன்னது உங்கள் எல்லோருக்கும் ஞாபகம் இருக்கும். 'ஸோவியட் அண்டு எலக்ட்ரிஸிடி' வந்துவிட்டால் கம்யூனிஸம் உலகம் பூராவும் வந்துவிடும் என்று சொன்னார்கள் லெனின் அவர்கள். குறிப்பாக லெனின்கிராடில் இருக்கிற பெரிய மின்சாரத் தொழிற்சாலைக்குச் சென்று பார்த்தால், அங்கே இந்த வாசகத்தைத் தான் முதலில் பொறித்திருக்கிறார்கள். எப்பொழுது அதிகமாக மின்சார உற்பத்தியும் ஸோவியட் பவரும் இருக்கிறதோ, அப்பொழுது கம்யூனிஸம் வந்துவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது மின்சாரம் அதிகரித்து வருவதன் மூலம் ஸோவியட் கம்யூனிஸம் வந்துவிடும் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் இம்மாதிரி சொன்னார்கள் என்பதை ஒரு எடுத்துக் காட்டாக சொல்லுகிறேன். (குறுக்கீடு) ஆகவே தான் இதைப் பற்றி கண்டிக்கக் கூடிய அங்கத்தினர், புகார் சொல்லக்கூடியவர்

சொல்லவில்லையோ என்று நான் நினைக்கிறேன். நம்முடைய ராஜ்யத்தில் எவ்வளவு அதிகமாக மின்சாரம் சேகரிக்க முடியுமோ, உற்பத்தி செய்ய முடியுமோ அந்தத் துறைகள் எல்லாவற்றையும் மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு மேற்கொள்வதன் மூலம் நம்முடைய ராஜ்யத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். இதிலே ஒன்றும் தவறு இல்லை. மற்ற தனியார் துறை இதற்கு முன்னால் செய்ததற்கும், நாம் இப்பொழுது செய்வதற்கும் பெரிய வித்தியாசம் உண்டு. இதற்கு முன்பு தனியார் துறை செய்தார்கள் என்றால், அந்த ஸ்தாபனத்தை அவர்களே நடத்தி வந்து, அவர்களே விநியோகம் செய்து லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். நாம் இப்பொழுது செய்கின்ற ஏற்பாட்டில், அவர்கள் 'எரெக்ட்' செய்து நம்மிடம் கொடுத்துவிடுகிறார்கள். மின்சாரத்தை விநியோகம் செய்து வரக்கூடிய லாபம், நன்மை எல்லாவற்றையும் நாம் தான் அடைவோம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** தனியார் நிறுவக்கூடிய இந்த மின்சார உற்பத்தி நிலையத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் என்ன செலவு காட்டுகிறார்களோ, அந்தத் தொகையை கடனாக ஏற்றுக்கொண்டு, 12 ஆண்டுக்குள் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமா? அல்லது 12 ஆண்டுகளுக்குப் பிறகு புதிதாக மதிப்பு போட்டு, அதை ஏற்றுக்கொண்டு அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இப்பொழுது நாம் பார்த்து, அரசாங்கம் நிர்ணயம் செய்து, 'க்ளோபல் டெண்டர்' மூலம் என்ன விலை இருக்கும் என்று பார்த்து நிர்ணயம் செய்து விடுகிறோம். அப்படி நிர்ணயம் செய்த தொகையை நாம் 12 ஆண்டிற்குள் ஆண்டுக்கு ஒரு பகுதியாக கொடுத்து எடுத்துக் கொள்வோம். அதற்கு வட்டியும் சேர்த்துக் கொடுக்கவேண்டும். இதன் மூலம் நம்முடைய ராஜ்யத்திற்கு அதிகமான மின்சாரம் கிடைக்கும். அப்படி கிடைக்கிற மின்சாரத்தை வைத்து நாம் கடனை அடைத்துவிட முடியும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவேதான் இதில் முரண்பாடு ஒன்றும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** மின்சார உற்பத்தியை தனிப்பட்டவர்களிடத்திலே கொடுத்து, அந்த மின்சாரத் திட்டத்தை ஏற்று நடத்தி, உற்பத்தி செய்யச் சொல்லி அதன் பிறகு 12 வருஷங்களுக்குள் அந்தக் கடனை அடைக்க நம்முடைய அரசாங்கம் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே நான் கேட்கிறேன். இப்பொழுது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றும்போது மத்திய சர்க்காரிடமிருந்து கடன் வாங்கி அதை நிறைவேற்றி வருகிறோம். ஒரு தனிப்பட்ட ஒரு தொழில் அதிபர் ரூ. 19 கோடி, 20 கோடி செலவிட்டு ஒரு மின்சாரத் திட்டத்தை துவக்கி வைத்த பிறகு, அந்த தனிப்பட்ட நபரிடம் 12 வருஷத்திற்குள் திருப்பித் தருகிறோம் என்று





கடனுக்கு ஒப்பந்தம் செய்துகொள்வது நியாயம்தானா? வேண்டுமானால், டாக்டர் தேஜா அவர்களிடம் ஒப்பந்தம் செய்வதைவிட, நமது தொழில் அமைச்சர் அவர்கள் தன்னுடைய திறமையின் மூலம் நேரிடையாக ஜப்பானுக்குச்சென்று ஒப்பந்தம் செய்து கொண்டால் அது நலமாக இருக்கும். அப்படிச் செய்யலாமே தவிர, ஒரு தனிப்பட்ட நபரிடத்தில் அரசாங்கம் கடன் வாங்கலாமா? அப்படி கடன் வாங்கி மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய அடிப்படை நியாயம்தானா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் என்னிடம் வைத்திருக்கிற அபார மதிப்புக்கு என்னுடைய நன்றி. சர்க்கார் நேரிடையாகச் சென்று இது விஷயமாக பேரம் பேசினால் ஓரளவுக்கு குறைந்து வாங்க முடியும் என்பதை நான் மறுக்கவில்லை. அதற்கு வேண்டிய நிதி வசதி நம்மிடத்தில் இல்லை. நமக்கு இருப்பது ரூ. 216 கோடி தான். இதையும் திட்டத்தில் சேர்த்துக்கொள்வோமானால், மேற்கொண்டு 240, 245 கோடி ரூபாய் அளவுக்கு நம்முடைய ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி ஏற்பட்டுவிடும். அதிக மின்சாரம் வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் இப்பொழுது இருக்கக்கூடிய பிரச்னை. நம்முடைய நிதியை வைத்துக்கொண்டு அந்த அளவுக்குப் போதும் என்று நினைத்தோமானால், அவர்கள் சொல்லுகிற வாதம் சரி தான். ஆனால் நம்மிடத்தில் இருக்கிற நிதி ரூ. 216, 217 கோடியை வைத்துக்கொண்டு அதற்குள் முடிந்த அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்து, மேற்கொண்டு ஒரு திட்டத்தின் மூலம் ரூ. 20, 22 கோடி அளவுக்கு அதிகமாக மின்சாரம் கிடைக்கும்படியான ஒரு வாய்ப்பு இருக்குமானால், அதை விட்டுவிடுவதற்கு நான் தயாராக இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதிலே நிதி மாத்திரம் அல்ல, அந்நியச் செலாவணியும் இருக்கிறது. நம்முடைய நாட்டிலிருந்து நிதி கிடைத்தாலும், மின்சார நிலையங்கள் உற்பத்தி செய்ய அந்நிய செலாவணி வேண்டும். இன்றைக்கு நமக்கு அந்நியச் செலாவணி குறைவு, அதனால் கஷ்டம் இருக்கிறது என்பது அங்கத்தினர்களுக்குத் தெரியும். அப்படி இருக்கும்போது, ஒருவர் அந்நியச் செலாவணியைப் போட்டு, அதைத்தான் எடுத்துக்கொண்டு, திட்டத்தை நிறைவேற்றி, அதன் பிறகு நம்மிடம் கொடுக்கிறேன், அந்தப் பணத்தைப் பன்னிரண்டு ஆண்டுகளில் கொடுங்கள் என்று சொன்னால், அது நம்முடைய மாகாணத்திற்கு நல்லதா இல்லையா என்பதை அங்கத்தினர்கள் தான் முடிவு செய்யவேண்டும். (குறுக்கீடு) அந்நியச் செலாவணி இருக்கிறது என்பது தெரியும். அவரைப் பற்றி நான் அசெம்பிளியில் சொல்வது கூடாது. அந்நியச் செலாவணி இருக்கிறது என்று தெரிந்துதான் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இவ்வளவுதான் கொள்கை பூர்வமாக சொல்லப்பட்ட பிரச்னை.

இனி நிர்வாக சம்பந்தமாக சொல்லப்பட்ட பிரச்னைகளுக்கு விளக்கங்கள் சொல்ல விரும்புகிறேன். அதே சமயத்தில் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட ...

விஷயங்களுக்கும் விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். மின்சார உற்பத்தியை பெருக்க என்னென்ன புது வகைகளையெல்லாம் உலக நாடுகளில் கண்டுபிடிக்கிறார்களோ, அவற்றை நம் நாட்டுக்கும், நம் ராஜ்யத்திற்கும் பயன் படுத்தவேண்டும் என்று சொன்னார்கள். அந்த வகைகளில் நாமும் முயற்சிகள் செய்கிறோம். புதிது புதிதான திட்டங்களெல்லாம், முதலிலே பார்க்கின்ற போது வெகு அழகாக இருந்தாலும், அதைப் பரிசிலனை செய்து பார்க்கும்போது, பொருளாதார விதிகள்படி கட்டுபடியாகுமா என்று பார்க்கிற போது, சில நிலையங்கள் சில நாடுகளில் கட்டுபடியாகிறது, வேறு சில நிலையங்கள் சிற்சில நாடுகளில் கட்டுபடியாவதில்லை. அலையிலிருந்து மின்சார உற்பத்தி என்று பார்க்கும் போது, எந்த இடங்களில் 20 அடி, 40 அடி அலைகள் உயரமாக வருகிறதோ, அப்படிப்பட்ட இடங்களில் சிறிய அளவில் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். உதாரணமாக, பிரான்சில், "ரான்ஸ்" பிராஜக்ட் என்று வைத்திருக்கிறார்கள். அதை நான் நேரில் பார்த்தேன். இந்த 'ரான்ஸ்' பிராஜக்டில் என்ன நடக்கிறது என்றால், காலை நேரத்தில், 30 அடி, 40 அடி ஆற்றுக்குள்ளாக தண்ணீர் போகிறது. அது மாலை நேரத்தில் வடிகிறது. இம்மாதிரி தண்ணீர் ஏறுகின்ற போது, டர்பைன்கள் வைத்து, அணையைப் போட்டு, நீர்த் தேக்கத்தில் தண்ணீரை ஏற்றியும், வடியும் போது வடித்தும், எலக்ட்ரிசிடியை உற்பத்தி செய்கிறார்கள். அது அந்த நாட்டில் கட்டுபடியாகும். அங்கே, அந்த நாட்டில் அவ்வளவு உயரமுள்ள அலைகள் இருக்கின்றன. நம்முடைய ராஜ்யத்திலே அதைப் பரிசிலனை செய்து பார்த்தால், அம்மாதிரியான அலைகள் இங்கே இல்லை. அதே போலத்தான் . . .

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத்தலைவர் அவர்களே, மேட்டூருக்கும், ஈரோட்டிற்கும் இடையிலே நீர் ஓட்டத்திலே மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்று கூறப்படுகிறது. அதைப் பற்றி பரிசிலனை செய்யப்பட்டதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அதைப் பற்றிச் சொல்லுகிறேன். அதே போலத்தான், ஸோலார் எனர்ஜியைப் பயன் படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதிலும். அப்படிச் செய்வது சிறு சிறு உபயோகங்களுக்கு பயன்படும். அதிலிருந்து ஒரு 100 மெகாவாட்ஸ் அல்லது 200 மெகாவாட்ஸ் மின்சக்தி உற்பத்தி செய்யலாம். ஒரு அலுமினியம் பாக்டரிக்குக்கூட உபயோகிக்கலாம் என்று சொல்ல முடியாது. சிறிய சிறிய திட்டங்களுக்குப் பயன் படுத்தப்படுகிறது. நான் பார்த்த அளவில் பெரிய அளவில், லட்சக்கணக்கான யூனிட்டுகள் உற்பத்தி செய்யும் திட்டங்களாக இல்லை. நம்முடைய தார்மல் பவர் இருக்கிறது, கன்வென்ஷனல் பவர், நீண்ட காலமாக இருக்கும், சரித்திர காலத்திலிருந்து உபயோகப்படுத்தப்பட்டு வந்த முறை. அதைத்தான் எண்ணூரில் ஒரு நிலையமும், தூத்துக்குடியில் ஒரு நிலையமும் வைத்து உற்பத்தி செய்ய முடிவு செய்திருக்கிறோம். தார்மல் பவர் உற்பத்தி செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்றால், உபயோகப் படுத்தும் நிலக்கரி [illegible]





போட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அந்த சமயத்தில் நீர் மின்சாரம் என்றால், தண்ணீர் ஓடிக் கொண்டே இருக்கிறது. உபயோகித்த பிறகு அந்த தண்ணீர் விவசாயத்திற்குப் பயன் படுகிறது. அதில் நஷ்டம் ஒன்றும் இல்லை. செலவும் அதிகம் இல்லை, பெரிய நிலையங்கள் கட்டும் செலவுதான் ஆகிறது. அந்த முறையில் எல்லாத் வசதிகளும் நம்முடைய ராஜ்யத்திலே பயன் படுத்தப்பட்டுவிட்டன. குறிப்பிலே சொல்லப்பட்டிருப்பது போல, அனல் மின்சாரம் சற்று விலை அதிகமாக இருந்தாலும், கூடுதலாக இருந்தாலும் அதைப் பயன்படுத்தவேண்டும் என்று கருதி, அப்படிப்பட்ட திட்டங்கள் போடுகிறோம். நெய்வேலியில், மூன்றாவது திட்டத்தில் 400 மெகவாட்ஸ் என்றும், நான்காவது திட்டத்தில் 600 மெகவாட்ஸ் என்றும் உற்பத்தி செய்வதாக திட்டமிட்டு அதை ஒத்துக்கொண்டு விட்டார்கள். மேற்கொண்டு அதை 1,000 மெகாவாட்ஸாக ஆக்கவேண்டும் என்றால், அதற்கு இரண்டாவது, 'மைன்' கட் செய்யவேண்டும். இப்பொழுது இருக்கும் ஒரு 'மைன்' போதாது. அதைப் பற்றி மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இன்னும் அதில் முடிவு எடுக்கப்படவில்லை. அதிர்ஷ்டவசமாக, கல்பாக்கம் அணு மின்சார நிலையம் ராஜ்யத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய பெரிய உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதலிலே ஆரம்பிக்கும் போது, 400 மெகவாட்ஸ் உற்பத்தி செய்வார்கள், பின்னால் வருங்காலத்தில், மேலும் 100 மெகவாட்ஸ் என்று உயர்த்திக் கொள்ளலாம் என்கிற கருத்துக்களெல்லாம் இப்பொழுது நிலவி வருகிறது. ஆகவே, அது சம்பந்தமாக நாம் எடுத்திருக்கும் முயற்சிகளின் மூலம் ராஜ்யத்தின் தேவைகளைச் சமாளிக்க முடியும்—பூர்த்தி செய்துவிட முடியும் என்று சொல்லவில்லை—என்று எதிர்பார்க்கிறோம்.

மேலும், ஓடுகின்ற நதிகளில், சில நாடுகளில் மின்சார உற்பத்தி செய்கிறார்கள். 'லோ ஹெட் டர்பைன்' என்று சொல்லுவார்கள், அப்படிப்பட்ட டர்பைன்களை உபயோகப்படுத்தி, சில இடங்களில் மின்சாரம் உற்பத்தி செய்கிறார்கள். அதே போல, நம் ராஜ்யத்திலும், காவேரி நதியில் மேட்டூரிலிருந்து, சற்றேறக்குறைய கரூர் வரையில், ஏதாவது நிலையங்கள் ஏற்படுத்த முடியுமா என்று இப்பொழுது நம்முடைய மின்சாரக் கழகம் பரிசிலனை செய்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கின்றது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஹொகனகல் திட்டத்திற்கு மைசூர் ராஜ்யத்தின் சம்மதம் தேவை. அவர்கள் சம்மதம் இல்லாமல் நாம் அதை நிறைவேற்ற முடியாது. அது ஒரு நல்ல திட்டம், மலிவான திட்டம். இன்றைக்கு இருக்கும் நிலையில், மின்சாரம் உற்பத்தி செய்ய யூனிட்டுக்கு ஆறு பைசா ஆகிறது. அனல் மின்சாரமாக இருந்தால், நெய்வேலி மின்சாரம், விலை 5.2 பைசா ஆகிறது ஒரு யூனிட்டுக்கு. அம்மாதிரி நிலைமை இருக்கும்போது, ஹொகனகல் திட்டம் ரொம்பச் சிறந்தது. அங்கே மூன்று பைசாவிற்கு மேல்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [3rd August 1965

ஆகாது உற்பத்திச் செலவு. நதியின் குறுக்கே ஒரு அணை போட்டு ஜெனரேட்டர் வைக்க வேண்டியதுதான். பென் ஸ்டாக் பைப்கள் வேண்டியதில்லை, டன்னல் போடவேண்டியதில்லை, அந்தச் செலவுகளெல்லாம் ஒன்றும் இல்லை. அதைப்பற்றி மைசூர் ராஜ்யத்தினிடத்தில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி எடுத்துப் பேசிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் ஓரளவு 'On principle' ஒத்துக்கொண்டாலும், அதை நடைமுறையில் உடனடியாகச் செய்வதற்கு நடவடிக்கைகள் ஒன்றும் எடுக்கவில்லை. அதற்கான சம்மதமும் தெரிவிக்கவில்லை. இந்தத் திட்டம் நிறைவேறுவதன் மூலம், தமிழ் நாட்டுக்கு மட்டும் நன்மை என்று அல்ல, மைசூர் ராஜ்யத்திற்கும் நன்மை கிடைக்கும். ஏனென்றால், நாம் கொடுத்திருக்கும் திட்டத்திலே, 'அதிலே உற்பத்தி செய்கின்ற மின் சக்தியை இரண்டு ராஜ்யங்களும் பாதிப் பாதியாகப் பகிர்ந்து கொள்வோம், பாதிப் பாதியாகச் செலவையும் பகிர்ந்து கொள்வோம்' என்று சொல்லியிருக்கிறோம். இந்தத் துறையில் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து ஒப்புதல் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அதில் எடுக்க வேண்டியது மைசூர் ராஜ்யத்தின் முடிவாக இருப்பதால், அவர்களை அணுகுவதைத் தவிர நாமாகச் செய்யக் கூடிய வேலை, காரியம் ஒன்றும் இல்லை என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சாவூர் ஜில்லாவிலே, பம்பு செட்டுகள் வைத்து நீர்ப்பாசனத்தைப் பெருக்கலாம் என்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆலோசனை இப்பொழுது நடைமுறையில் ஏற்று நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிலேயே சற்றேறக் குறைய 1,000 பம்பு செட்டுகள் தஞ்சாவூர் ஜில்லாவில் கொடுத்து, அவர்களுக்கு மின் சக்தியும் கிடைக்க வசதி செய்து கொடுத்து, இந்த ஆண்டு ஏப்ரல்–மே மாதமே அவர்கள் தண்ணீர் இறைத்து, பாய்ச்சி, நாற்று முதலிய
10-00 a.m. வைகளை விட்டு, விவசாயத்தை துரிதப்படுத்தலாம் என்று திட்டம் உருவாகி, அதற்கான நடவடிக்கைகளெல்லாம் நடந்து வருகின்றன. ஆகவே, அடுத்த ஆண்டு குறுவை வேளாண்மை தஞ்சாவூர் ஜில்லாவில் நடக்கிறபோது பெரிய அளவுக்கு மின் விசையை உபயோகித்து, பம்பு செட்டுகளின் மூலமாக நீர்ப்பாசன வசதியைப் பெற்று அதிக அளவில் நன்மையைப் பெற முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அட்வான்ஸ் ஆக்ஷனை எண்ணூர் திட்டத்தை ஏற்று நடத்திக் கொண்டு வருகிறோம். அது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தாலும் இப்பொழுதே பூர்வாங்க வேலைகள் எடுக்கப்பட்டு அவை துவங்கி நடந்து வருகின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கனம் உறுப்பினர்கள் நிர்வாக அமைப்பில் இருக்கிற குறைபாடுகளைச் சொன்னார்கள். அவற்றை நான் இப்போது ஒவ்வொன்றாக எடுத்து, அவற்றுக்குரிய காரணங்களை



3rd August 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

விளக்கலாம் என்று இருக்கிறேன். கிராமங்களில் மின்சாரத்தை விஸ்தரிப்பதனால் குறைந்த பட்சம் 10 சதவிகிதம் ரிடர்ன் இருக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம். அந்த 10 சதவிகிதம் கூட பலன் கிடைக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளாவிட்டால் நமக்கு நஷ்டமாகும். மின்சார போர்டார் 20 சதவிகிதம் ரிட்டர்ன் இருந்தால்தான் லாபகரமாக இருக்கும் என்று வைத்துக்கொண்டுள்ளார்கள். 20 சதவிகிதம் என்று சொன்னால் கிராமங்களில் அது சுலபமாக மக்களால் கட்ட முடியாது என்ற காரணத்திற்காக 10 சதவிகிதம் ஆகக் குறைத்திருக்கிறோம். ஆனால் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் ஓரளவு ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் மின்சாரத்தை விஸ்தரித்த பிற்பாடு இந்த 10 சதவிகிதம் கூட ரிடர்ன் இருக்கவேண்டும் என்று வைத்துக் கொள்வதை எடுத்துவிடலாம் என்று எதிர்பார்க்கிறேன். இப்போது அதிகச் செலவு செய்து பல பகுதிகளுக்கு மின்சாரத்தை எடுத்துக்கொண்டு போகவேண்டியதாக இருக்கிறது. ஆகவே, இந்த 10 சதவிகிதம் ரிடர்ன் இல்லை என்றால் அதிக நஷ்டமாகும். மின்சாரத்தைக் கொண்டு போக அதிகச் செலவு ஆரம்ப காலத்தில் ஏற்படுவதனால் இந்தக் கட்டுப்பாடு வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

அடுத்தாற்போல கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் பேசும்போது ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். ஸ்கீம் போடும்போது ஒரு தொகை வருகிறது. ஆனால். அந்த ஸ்கீமை நிறைவேற்றும்போது அதிகத் தொகையாகிவிடுகிறது என்று சொன்னார்கள். முதலில் 20 பேர் பம்பு செட்டு போடுகிறோம் என்று எழுதிக் கொடுக்கிறார்கள். அதற்கான செலவைத் திட்டமிட்டு அளிக்கிறோம். ஆனால் திட்டம் வருகிறபோது 10 பேர் தான் எடுத்துக் கொள்கிறார்கள். பத்துப்பேர் விலகிவிடுகிறார்கள். அதனால் செலவு அதிகரித்துவிடுகிறது. இந்தக் காரணத்தினால் ஸ்கீம் தயாரித்தபோது குறிப்பிட்ட செலவைவிட அதிகமாகப் பின்னால் ஏற்படுகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. செ. மாதவன் :** என் கருத்து அது அல்ல. முதலில் எஸ்டிமேட் போடுகிறார்கள். எஸ்டிமேட் போடும்போது அளவு எடுத்துதான் எஸ்டிமேட் போடுகிறார்கள். வேலையை முடித்த பிறகும் அளவு எடுக்கிறார்கள், உடனே அதிகச் செலவு ஆகியிருப்பதாகக் குறிப்பிடுகிறார்கள். இது டிபார்ட்மென்ட் மிஸ்டேக். இதற்குக் காரணம் என்ன என்று தான் கேட்டேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எஸ்டிமேட் போட்டதற்கும் வொர்க்கை நிறைவேற்றியதற்கும் இடையில் அதிகக் காலதாமதம் ஆகியிருந்தால் செலவு அதிகரித்திருந்தால் அச்சரியப்படுவதற்கில்லை. பல பண்டங்கள் இடையில் விலை ஏறிவிடுகின்றன. அதன் காரணமாகச் செலவு அதிகரிக்கிறதென்று அறிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தாற்போல, போர்டின் நிதிநிலைமை ஆண்டு இறுதியில் கஷ்டமாக இருக்கிறது, சிரமமாக இருக்கிறது என்கிற கருத்தைக் கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்களே எடுத்துச் சொன்னார்கள். நாம் திட்டத்திற்கு மேல் அதிகமாகச் செலவு செய்கிற காரணத்தினால் இந்த நிலைமை ஏற்படுகிறது. குறிப்பாக, 100 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் போட்டு ஐந்தாண்டுகளில் ஆண்டுக்கு 20 கோடி செலவிடுவது என்று தீர்மானிக்கிறோம். ஆனால், வேலை செம்மையாக நடந்துகொண்டே போகிறபோது ஒரு ஆண்டில் 25 கோடிவரை செலவிட்டுவிடுகிறோம். ஆண்டுக்கு 25 கோடி செலவு செய்கிறபோது முடிவில் நாம் நம்முடைய திட்டங்களுக்கு 125 கோடி செலவழிக்கிறோம். இதன் காரணமாக, வருட இறுதியில் நமக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிறது. திட்டத்தை வேகமாக, விரிவாக, பெரியதாக நிறைவேற்றுகிற காரணத்தினால் இந்த நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிறதே தவிர இதில் நஷ்டம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

அதே சமயத்தில் நமது நிர்வாகத்தைத் தனியாருடன் ஒப்பிட்டு திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். தனியார் என்றால் இன்றைக்கு விநியோகம் செய்கிறவர்கள் தான். விநியோகம் செய்கிறவர்களுக்குக் கட்டுபடியாகிறது. மின்சார போர்டுக்குக் கட்டுப்படியாகவில்லை, 3 சத விகிதம்தான் ரிட்டர்ன் இருக்கிறது என்றால் விநியோகத்திற்கும், உற்பத்திக்கும் உள்ள வேறுபாட்டைத்தான் நான் விளக்க விரும்புகிறேன். விநியோகம் செய்கிறபோது அவர்கள் மொத்தமாக வாங்கிக் கொண்டு எச்.டி. என்றால் இவ்வளவு, எல்.டி. என்றால் இவ்வளவு, டொமஸ்டிக் ரேட் இவ்வளவு என்று விதித்து சப்ளை செய்து நஷ்டம் இல்லாமல் விற்பனை செய்து தொடர்ந்து லாபம் பெற முடியும். (செல்லர்)களுக்கு மார்க்கெட்டில் பண்டத்தை வாங்கி விற்பவனுக்கு நஷ்டம் வராது. நமக்கும்கூட நஷ்டம் வரவில்லை. ஆனால் நமக்குக் கட்டுபடியாகவில்லை. ஆண்டு தோறும் 'ஜெனரேஷன்' ஸ்கீம்களை எடுத்துக் கொள்கிறோம். ஒரு திட்டத்திற்கு 20 கோடி என்று போட்டு முதல் ஆண்டு ஐந்து கோடி செலவு செய்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த ஆண்டு இறுதியில் நமக்கு ரிட்டர்ன் இல்லை. அடுத்த ஆண்டு ஐந்து கோடி செலவு செய்கிறோம். அடுத்த ஆண்டும் ரிட்டர்ன் இல்லை. அதற்கு அடுத்த ஆண்டும் ஐந்து கோடி செலவு செய்கிறோம். அந்த ஆண்டும் ரிட்டர்ன் வராது. அதற்கு அடுத்த ஆண்டும் ஐந்து கோடி செலவு செய்து, அங்கே மின்சார உற்பத்தி வேலையைத் துவக்கிய பிறகுதான் ரிட்டர்ன் வர ஆரம்பிக்கிறது. முதலில் எல்லாம் நமக்கு நஷ்டம் போலத்தான் தோன்றும். பொதுவாக, நம்முடைய போர்டின் நிதி நிலைதான் சிறப்பாக இருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். அதைப்பற்றி யாரும் குறை சொல்லவில்லை. டிஸ்ட்ரிப்யூஷன் ஏஜெண்டுக்கும், ஜெனரேஷன் செய்கிற நமக்கும் உள்ள வித்தியாசத்தைத்தான் கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டும். இரண்டையும் ஒப்பிட முடியாது. அவர் யூனிட்டை 8 பைசாவுக்கு வாங்கி எச்.டி. என்றால் 30 பைசா, [illegible]





என்றால் 16 பைசா என்று ரேட் வைத்து லாபம் சம்பாதித்து விடலாம். ஜெனரேஷன் திட்டத்திற்காக நாம் ஆண்டுதோறும் செலவு செய்கிறோம். திட்டம் முடிவடைந்த பிறகுதான் நமக்கு ரிட்டர்ன் வருகிறது. ஆகவே, இதில் ஒன்றும் தவறு இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தாற்போல, திரு. மாதவன் அவர்கள் "ரிசர்வ் பாங்கில் ஏன் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும்? தனி பாங்கில் கணக்கு வைக்கக்கூடாதா?" என்று கேட்டார்கள். தனி பாங்கில் கணக்கு வைப்பதில் லாபம் இல்லை. மின்சாரக் கழகத்திற்கு வருகிற பணம் எல்லாம் சர்க்காரிடத்தில் டெபாசிட் செய்துவிடுகிறார்கள். போர்டுக்குப் பணம் வேண்டும் என்கிறபோதெல்லாம் சர்க்காரிடத்தில் வாங்கிக் கொள்கிறார்கள். அவர்களுக்குப் பணம் தேவைப்படுகிறபோது வாங்கிக்கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கிறது. அதே சமயத்தில் சர்க்காருக்கு இந்தப் பணம் வேஸ் அண்டு மீன்ஸ்க்கு உதவியாக இருக்கிறது. இதுதான் சிறந்த ஏற்பாடு என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து கண்டிராக்டர்களுக்கு அட்வான்ஸ் பேமெண்ட் கொடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். கொடுக்காமல் இருக்கும்படியான நிலைமை இருந்தால் எனக்கும்கூடச் சந்தோஷம்தான். ஆனால், இன்றைக்குச் சில பண்டங்கள் கிடைக்காமல் இருக்கிற காரணத்தினால் முன் அட்வான்ஸ் கொடுத்தே ரிசர்வ் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. அகில இந்திய டைரெக்டர் ஜெனரல் ஆப் சப்ளைஸ் அண்டு டிஸ்போசல்ஸ்கூட கிடைக்காத பண்டங்கள் இருக்குமானால் அட்வான்ஸ் கொடுத்துத்தான் ரிசர்வ் செய்து கொள்கிறார்கள், தங்களுக்குச் சாமான் கிடைக்க வேண்டும் என்பதற்காக. மேலும் திரு. மாதவன் அவர்கள் பேசும்போது மேட்டூர் டன்னல் இனாகுரேஷனுக்காக 50 ஆயிரம் ரூபாய் செலவழித்திருப்பதாகச் சொன்னார்கள். மன வருத்தமுடையவர் யாரோ என்ன என்னவோ தவறான கருத்துக்களைத் திரு. மாதவன் அவர்களிடத்தில் குறிப்பிட்டிருப்பார் போலிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு இவர் இங்கே சிலவற்றைச் சுட்டிக் காட்டினார். ஏனென்றால் மேட்டூர் டன்னல் இனாகுரேஷனுக்காகப் போர்டு செலவழித்தது 12,412 ரூபாய்தான். இனாகுரேஷனுக்காக என்று இல்லாவிட்டாலும் திட்டத்திற்காகவே லெவல் செய்யப்பட வேண்டிய வேலைகளுக்கு ஐந்தாயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது. அதையும் இனாகுரேஷன் செலவோடு சேர்த்துக் கொள்ளும்படியாக அக்கௌண்டண்ட் ஜெனரல் சொன்னார்கள். அது திட்டச் செலவுதான். இனாகுரேஷன் என்று இல்லாவிட்டாலும்கூட அந்தத் தொகை திட்டத்திற்காகச் செலவிடப்பட வேண்டியதுதான். ஆகவே அதைத் திட்டத்தோடு போட்டுக்கொண்டுவிடலாம் என்பது போர்டினுடைய யோசனை. ஆக டிஸ்ப்யூட் என்றாலும் அது இந்த ஐயாயிரம் ரூபாயைப்பற்றியதுதான். பன்னிரண்டாயிரம் என்பதைப் பதினேழாயிரம் என்று போட்டுக் கொள்வது. அப்படியிருக்க 50 ஆயிரம் செலவிட்டிருப்பதாகச் சொல்வது அர்த்தமே இல்லாத வாதம். அதேபோல்தான் கலிங்கா

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [3rd August 1965

ட்யூப்ஸைப் பொறுத்தும், சாதாரணமாக, எலெக்ட்ரிஸிடி போர்டு வாங்குவதெல்லாம் இந்தியா ட்யூப்ஸ்தான்; டாடா கம்பெனியிலிருந்துதான் வாங்குகிறோம். ட்யூப்ஸ் நமக்கு வேண்டியபோது அங்கு கிடைக்காமற்போனால் வேறு இடத்தில் வாங்குகிறோம். நஷ்டப்பட்டு வாங்க முடியாது. டைரக்டர் ஜெனரல் ஆஃப் ஸப்ளைஸ் அண்ட் டிஸ்போஸல்ஸ் 'ரேட் கார்டு ஸிஸ்டம்' வைத்திருக்கிறார்கள். அந்த ரேட் கார்டு பிரகாரம்தான் நாம் வாங்க வேண்டும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அதே மாதிரி, கலிங்கா ட்யூப்ஸைப் பொறுத்தும் டி.ஜி.எஸ்.டி. 'அப்ரூவ்' பண்ணி 'ரேட் கார்டு' கொடுத்திருக்கிறார்கள். அதன் பேரில்தான் வாங்கியிருக்கிறோம். ஒன்று 'கலிங்கா ட்யூப்ஸ் வாங்க வேண்டாம். அதனால் வேலையை நிறுத்தி வையுங்கள்' என்று சொல்லலாம். அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அடுத்தபடி, கலிங்கா ட்யூப்ஸுக்கு அதிக விலை கொடுத்திருக்கிறோம், அது தப்பு என்று சொல்லலாம். அதுவும் சரியல்ல. டி.ஜி.எஸ்.டி. ரேட் பிரகாரம்தான் கொடுத்திருக்கிறோம். யாராவது அவருக்கு brief பண்ணியவர் சரியாக விஷயத்தைப் புரிந்துகொள்ளாமலே, கொஞ்சம் தப்பும் தவறுமாகச் சொல்லிவிட்டார் என்று நினைக்கிறேன்.

**திரு. செ. மாதவன்:** கலிங்கா ட்யூப்ஸைப் பொறுத்து, "அந்த ட்யூபிலே பழுது இருக்கிறது. உள்ளே 'ரீட்' நீட்டிக்கொண்டிருக்கிறது. ஆகவே, தேவை இல்லை, சரியான சரக்கு அனுப்பவேண்டும்" என்று அக்கௌண்ட்ஸ் மெம்பருடைய குறிப்பு இருக்கிறது. அந்தக் குறிப்பு கம்பெனிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதே பைப் வரவழைக்கப்பட்டிருக்கிறது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் உறுப்பினர் அவர்கள், இந்தக் கலிங்கா ட்யூப்ஸை ஏதோ வாங்கிவிட்டதாகச் சொன்னார்கள். இப்பொழுது கலிங்கா ட்யூப்ஸில் ஏதோ சரியாக இல்லை என்று சொல்கிறார். வாங்கின சரக்குகள் எல்லாமே சரியாக இருக்கும் என்று உத்தரவாதம் கொடுக்கவில்லை. சரியாக இருக்கலாம். சில தவறாக இருக்கலாம். தவறாகப் போனால் திருப்பியனுப்பப் போகிறோம். அல்லது 'டாமேஜ்' க்ளெயிம் பண்ணப் போகிறோம். இதெல்லாம் எப்படி ஒரு குற்றச்சாட்டு ஆகும்? ஒரிடத்தில் ட்யூப் கிடைக்கவில்லையென்றால் வேறிடத்தில் வாங்கப் போகிறோம். டி.ஜி.எஸ்.டி. 'ரெகமண்டு' பண்ணி, 'அப்ரூவ்' பண்ணி 'ரேட் கார்டு' கொடுத்திருக்கிறபோது, அதன்படி ட்யூப் வாங்கும்போது, 'அதிலே பழுது இருந்தது', "தவறு இருந்தது". என்று சொல்வது அவ்வளவு சரியான வாதம் அல்ல என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



3rd August 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

ஸ்டாக் வெரிஃபிகேஷனைப் பொறுத்த வரையில், போர்டிலே மத்திய ஸ்தாபனமாக வைக்கவேண்டும் என்று பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி சிபார்சு செய்தார்கள். அதை நாம் ஏற்றுக்கொண்டு அவ்வாறு செய்வதாக முடிவு செய்திருக்கிறோம்.

ஸ்டோர்ஸ் பர்ச்சேஸ் சம்பந்தமாக, ஏராளமான ஸ்டோர்ஸ் வாங்கப்படுகிறது என்றெல்லாம் சொல்கிறார்கள். நாட்டிலே இருக்கும் நிலைமையில், 'ஸ்டோர்ஸ்' இல்லாமல் போய்த் திண்டாடுவதைவிட, அளவு 'ஸ்டோர்ஸ்' அதிகமாக வாங்கி வைப்பதில் தவறு இல்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன். 227 கோடி ரூபாய் போட்டு நடத்தும் ஒரு பெரிய ஸ்தாபனத்தில் 17 கோடி ரூபாய்க்கு ஸ்டோர்ஸ் வாங்கியிருப்பது அதிகம் என்றால் அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த ஸ்டோர்ஸ் வாங்காவிட்டால் பல வேலைகளெல்லாம் தடைபடக்கூடும். 12 கோடி ரூபாய்க்கு ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் செய்திருக்கிறோம். அதற்குத்தான் ஏராளமான ஸ்டோர்ஸ் வேண்டியிருக்கிறது. கம்பங்கள், கம்பிகள், ஆங்கிள்கள் போன்ற எத்தனையோ சாமான்கள், சரக்குகள் வேண்டியிருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் முன்கூட்டியே வாங்கி வைத்திருந்தால்தான் நாம் போட்டிருக்கும் திட்டம் நிறைவேற முடியுமே தவிர, அன்றன்றைக்குக் கடைக்குப் போய் வாங்க முடியாது. நான் சொன்னதுபோல், 227 கோடி ரூபாய் மூலதனத்தில் இயங்கும் ஒரு ஸ்தாபனத்திற்கு 17 கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஸ்டோர்ஸ் இருப்பது அதிகம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத வாதம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்டோர்ஸை எங்கே வைக்க வேண்டும் என்பதைப்பற்றிக்கூட கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். இதெல்லாம் போர்டுக்கே விட்டுவிட வேண்டிய விஷயம். இங்கே வைப்பதா, அங்கே வைப்பதா, அங்கே வைத்தால் சாமான் கெட்டுப் போனது என்றெல்லாம் சொல்வது சரியல்ல. சாமான் விரயம் ஆகக்கூடிய இடத்தில் ஸ்டோர்ஸை வைக்கிறார்கள் என்றெல்லாம் சட்டசபையிலே 'க்ரிடிஸைஸ்' செய்வது அவ்வளவு நன்றாக இருக்காது. அந்த ஸ்தாபனத்திலே பொறுப்பாக இருக்கிறவர்கள் எந்த இடத்தில் சாமான்களை வைத்திருந்தால் சௌகரியமாக இருக்கும் என்று நினைக்கிறார்களோ அங்கே தான் வைப்பார்கள். இதற்குக்கூடப் பதில் கொடுத்திருக்கிறார்கள். அத்திக்கடவு போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டிய ஸ்டோர்ஸைக் கோயமுத்தூரில்தான் வைக்கிறார்கள். எதற்காக அங்கே வைக்கிறார்கள் என்றால் அங்கே "ஸ்டோர் கண்ட்ரோல்" இருக்கிறது. வேண்டும் என்கிறபோது அங்கிருந்து எடுத்துக்கொள்ளுவதற்கு வசதி இருக்கிறது. அத்திக்கடவிலேயே வைத்திருக்க வேண்டுமென்றால் அதற்காக அங்கே ஒரு பெரிய ஆர்கனைசேஷன் வைத்து ஆள் போட்டுப் பாதுகாப்பு செய்வதில் எத்தனையோ கஷ்டங்கள் வரும். அதுபோல், கோவை

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [3rd August 1965

யார் ஸ்கீமுக்கு வேண்டிய ஸ்டோரைத் திருநெல்வேலி பக்கத்தில் வைத்திருக்கிறோம். இதையெல்லாம் குற்றச்சாட்டு என்று நான் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

'மேட்டூர் டன்னல் ஸ்கீம்' ஐப் பொறுத்துக் குறிப்பிடுகையில், leakage வந்தது என்று சொன்னார்கள். பெரிய திட்டங்களை எடுத்துக்கொண்டு நிறைவேற்றும் போது, என்னதான் ஜாக்கிரதையாக இருந்தாலும், சின்னச் சின்ன குறைபாடு இல்லாமலிருக்காது. இந்த மேட்டூர் டன்னல் இருக்கிறதே அது உலகத்திலேயே இரண்டாவது பெரிய டன்னல். நயாகரா டன்னல் சற்றேறக்குறைய 50 அடி குறுக்களவுடையது. மேட்டூர் டன்னல் 47 அடி குறுக்களவு உடையது. அவ்வளவு பெரிய டன்னல் நம்முடைய ராஜ்யத்தில் வைத்திருக்கிறோம். அதில் சிமெண்ட் பூசியதில் ஏதோ கொஞ்சம் breast wall -இல் லீக்கேஜ் இருந்தது என்று சொன்னார்கள், கண்டிராக்டரைக் கூப்பிட்டு அதை ரிபேர் செய்யும்படிச் சொல்லிவிட்டோம். அது ரிபேர் ஆகிவிட்டது. குறைபாடு உள்ளதாக இருந்தது என்று சொல்லப்பட்டது ரிபேர் செய்யப்பட்டு விட்டது. அந்த டர்பைனில் ஆகஸ்டு 16-ந் தேதியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்போகிறோம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நம்முடைய எலெக்டிரிஸிடி போர்டிலே உள்ளவர்கள் சற்றுக் கடுமையாக இருக்கிறார்கள் என்று புகார் வந்திருந்தது. இலேசாக இருக்கிறதாக புகார் வரவில்லை. படேல் அண்டு கம்பெனி, சுப்ரமண்யம் அண்டு கம்பெனி என்று இரண்டு கம்பெனிகள் இருக்கின்றன. சுப்ரமண்யம் அண்ட் கம்பெனிக்குக் கொடுக்க வேண்டியதில் 50 ஆயிரம் ரூபாய் பிடித்து வைத்துவிட்டார்கள். படேல் அண்டு கம்பெனிக்கு 30 ஆயிரம் ரூபாய் பிடித்து வைத்திருக்கிறார்கள். இதில் சரியாகக் கடைசி வரையில் தண்ணீர் ஓடி பவர் ஜெனரேட் ஆன பிறகு தான் அந்தப் பணத்தைக் கொடுக்க முடியும் என்று சொல்லி, கொடுக்க வேண்டிய தொகையிலே கூட பிடித்து வைத்திருக்கிறார்கள். வாக்னர் ப்யூரோ கொடுத்த 'கேட்'கள் சம்பந்தமாகக் குறைபாடு இருந்தது என்று சொன்னார்கள். வெளிநாட்டிலிருந்து அந்த ஸப்ளை வந்தது. அதிலே சில குறைபாடு இருந்தது. ஆனால், அதெல்லாம் நிவர்த்தி செய்யப்பட்டு விட்டது. வருகிற சாமான்களெல்லாம் அதிலும் மேல் நாடுகளிலிருந்து வருகிற சாமான்களெல்லாம் அப்படியே கண்ணாடி கேஸில் வைத்து அனுப்பின மாதிரி வரும் என்று எதிர்பார்க்க முடியாது. அதிலும் 6 லட்சம் ரூபாய் அவர்களிடமிருந்து பிடித்து வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் 'ஸ்பீட்' ஆக ஓடின பிறகு தான் கொடுக்க முடியும் என்று நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

வேலூரில் ட்யூப் லைட்ஸ் வைத்திருப்பதாகச் சொன்னார்கள். ட்யூப் லைட்ஸ் நிறைய வைத்திருக்கிறார்கள் என்றால், ரூரல் எலெக்டிரிபிகேஷனுக்கு வேண்டியிருக்கிறது. ரூரல் எலெக்டிரிபிகேஷனுக்காக அங்கே ட்யூப் லைட்கள் வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதையும் ஒரு குற்றச்சாட்டாக நான் எடுத்துக்கொள்ள முடியவில்லை.



3rd August 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

அடுத்தாற்போல், தொழிலாளர் சம்பந்தமாகச் சில பிரச்னைகளைப்பற்றிப் பேசினார்கள். அவைகளைப்பற்றியும் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்து நான் விளக்கலாம் என்று நினைக்கிறேன். கனம் உறுப்பினர்கள் திரு. கலியாணசுந்தரம், திரு. கிருஷ்ணமூர்த்தி, இன்னும் பல கனம் உறுப்பினர்கள் பேசினார்கள். கடந்த ஆண்டு, தொழிலாளர்களுக்கும் மின்சார போர்டு இலாகாவிற்கும் இடையே எந்த விதமான சச்சரவும் ஏற்படவில்லை. ஒரு வேலை நிறுத்த நோட்டீஸ் கிடையாது ஒரு 'Go slow' கிடையாது. நல்ல சுமுகமான உறவு இருக்கிறது. ஏதோ 200, 300 தனிப்பட்ட கேஸ்கள் வந்தன. நூற்று ஐம்பத்து மூன்று கேஸ்களில் நேரடியாகப் பேசித் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் நடைமுறை சம்பந்தமாக நல்ல உறவு இருக்கிறது. அதையும் நான் ஒரு பெருமையாக எடுத்துச் சொன்னேன். அதைத் தவறாகக் கூட எல்லோரும் சொன்னார்கள். ஒன்றும் தவறு இல்லை. ஏனென்றால் தொழிலாளர்களிடத்திலே வெவ்வேறு கோரிக்கைகள் இருந்தாலும் கூட, வேலை செய்யும்போது நல்ல ஒத்துழைப்புடன் அவர்கள் தங்கள் கடமையை நன்றாகச் செய்திருக்கிறார்கள், பணியை நன்றாக ஆற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது எனக்குப் பெருமை என்று அதை நான் எடுத்துச் சொன்னேன்.

அவர்களுக்குச் சட்டப்படி போனஸ் உண்டு என்று நம்முடைய சட்ட இலாகா உறுப்பினர் சொல்வாரானால் 'ஆட்டோமேடிக்' ஆகக் கொடுத்துவிடப் போகிறோம். அதற்காக நாங்கள் ஒன்றும் சொல்லப் போவதில்லை. உண்டா, இல்லையா என்பதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பரிசீலனை முடிந்தவுடன், அவர்களுக்கு உண்டு என்று சொல்லிவிட்டால், அதன்படி அவர்களுக்குக் கிடைக்கும். சர்க்கார் ஊழியர்கள் மாதிரி அவர்களைக் கருதுவதா அல்லது தனிப்பட்ட ஸ்தாபனங்களில் உள்ளவர்களைப் போன்று கருதுவதா என்பது தான் இதிலே முக்கியமான பிரச்னை. என்னைப் பொறுத்த வரையில், நான் சென்ற ஆண்டு கூடச் சொன்னேன். அந்தத் தொழிலாளர் பிரதிநிதிகளிடத்திலும் கூட நான் சொன்னேன். ஒரு 'பப்ளிக் யுடிலிடி சர்விஸ்'-இலே இருக்கும் தொழிலாளர்கள் சர்க்கார் ஊழியர்கள் மாதிரி இருப்பது தான் அவர்களுக்கு நல்லது என்று சொன்னேன். காரணம் என்னவென்றால், இன்றைக்கு மின்சார இலாகாவை எடுத்துக் கொண்டால், அதற்கு மூன்று அகௌண்ட்ஸ் உண்டு. ஒன்று, செக்ஷன் 67 பிரகாரம் நம்முடைய சட்டத்தின்படி வைக்கவேண்டிய கணக்கு. மற்றொன்று, கமர்ஷியல் அகௌண்ட். "டிப்ரிஸியேஷன் ஸிங்கிங் பண்டு மெதட்"-படி கொடுக்கக்கூடிய அகௌண்ட் மூன்றாவது, இன்கம்-டாக்ஸுக்காகக் கொடுக்கக் கூடிய அகௌண்ட். ஒவ்வொன்றுக்கும் சிற்சில மாறுதல் உண்டு. நம்முடைய கமர்ஷியல் அகௌண்டிலே, சாதாரண 'ஸிங்கிங் பண்டு மெதட்'-படி லாப நஷ்டத்தைக் கணக்கிடுகிறோம். இன்கம்-டாக்ஸுக்காகக் கொடுக்கிற கணக்கிலே 'டெவலப்மெண்ட் ரிபேட்' கணக்கிடப்படுகிறது. நாம் புதுப் புது இயந்திரங்களை வாங்குவதால் அந்த டெவலப்மெண்ட் ரிபேட் இன்கம்-டாக்ஸ் கணக்கில் வருகிறது. [illegible]

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [3rd August 1965

ஆண்டுகளில் புதிய புதிய ப்ராஜெக்டுகள் காரணமாக இன்கம்-டாக்ஸ் கணக்கு 20 லட்சம் ரூபாய் நஷ்டமாகவே காண்பிக்கும். சொல்லப்போனால், நாம் புதிது புதிதாகத் திட்டங்கள் எலெக்ட்ரிஸிடி போர்டிலே போட்டுக்கொண்டிருக்கிற வரையில் அது நஷ்டம் தான் காண்பிக்கும். ஒவ்வொரு வருஷமும் டெவலப்மெண்ட் ரிபேட் வரும். அது ஒவ்வொரு வருஷமும் வரும்போது 40 சதவிகிதம் வரை கிடைக்கும் நிலைமை இருக்கும் காரணத்தால் நஷ்டமாகத்தான் காண்பிக்கும். தொழிலாளர்கள் கோர்ட்டுகளுக்குச் செல்வார்களேயானால், கோர்ட்டார் இன்கம்-டாக்ஸ் கணக்கைத் தான் எடுத்துக்கொள்வார்கள். தனியார் துறையிலே இதுமாதிரி எத்தனையோ கேஸ்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் நஷ்டக் கணக்கைக் காட்டுகிறபொழுது தொழிலாளர்கள் என்ன சலுகைகள் பெறமுடியும்? டெவலப்மெண்ட் ரிபேட், இன்கம்-டாக்ஸ் ரிபேட், இவைகளைக் கழித்து கணக்குகளைக் கோர்ட்டிலே கொடுக்கிறார்கள். அப்படியிருக்கும்போது தொழிலாளர்கள் என்ன சலுகையைப் பெறமுடியும்? இது மாத்திரமல்ல. ஒரு பப்ளிக் யுடிலிடி சர்வீஸினுடைய ரேட் சட்டசபையினால் தீர்மானிக்கப்படுகிறது. இன்றைக்கு 14 பைசா எல்.டி. கொடுத்தால்தான் விவசாயத்திற்குக் கட்டுபடியாகும். ஆனால் நாம் 8¼ பைசா தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த விதமாகப் பொதுமக்களுடைய ரேட் நிர்ணயம் செய்யவேண்டிய நேரத்தில் ரேட் குறைவாகப் போய்விடுமானால் இன்னும் நஷ்டம் ஏற்பட்டுவிடும். அப்பொழுது தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் கிடைக்காமல் போய்விடும். இன்ஜினியரிங் காலேஜ் ஸ்டாஃப் டிரிபியூனலுக்குப் போய் வேஜ் நிர்ணயம் செய்யவேண்டுமென்று சொன்னால் எப்படியிருக்கும்? ஸ்டூடன்ட்ஸ் கொடுப்பது ஆயிரம் ரூபாய் தான். ஆனால் செலவு 1 லட்சம் ரூபாய் இருக்கும். ஆகையினால் அந்த அடிப்படையில் நிர்ணயம் செய்ய முடியாது. இதையெல்லாம் மனதிலே வைத்துத்தான் நான் தொழிலாளர்களிடத்திலே சொன்னேன். போர்டுக்கு லாபம் வந்தாலும், நஷ்டம் வந்தாலும் உங்களுக்குச் சர்க்கார் ஊழியர்களுக்குக் கிடைக்கிறபடி எல்லாம் கிடைக்கும், இதனால் உங்கள் பிரச்னையெல்லாம் தீர்ந்துவிடும், பஞ்சப்படி ஊதிய உயர்வு கொடுக்கவேண்டுமென்ற பிரச்னை தீர்ந்துவிடும். சர்க்கார் ஊழியர்களுக்கு பே கமிஷன் வைக்கிறார்கள். பே கமிஷன் மூலம் சம்பளம் நிர்ணயமாகிறது; டி.ஏ. நிர்ணயமாகிறது. ஆகவே, அந்த முறையிலே நிர்ணயமாவது உங்களுக்கும் நல்லதென்று நினைக்கிறேன் என்று சொன்னேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள். இதை வேண்டாமென்று சொல்லியோ, அல்லது மறுத்தோ அவர்கள் சொல்லவில்லை. சென்ற ஆண்டு மூன்று முறைகள் டி.ஏ. உயர்த்தினோம். அப்பொழுது தொழிலாளர் சங்கம் இதைக் கேட்க வேண்டுமென்று நினைத்து அவர்களுடைய கோரிக்கையைப் பார்த்துத்தான் கொடுக்கவேண்டுமென்று உயர்த்தவில்லை. ஆடோமேடிக் ஆக அவர்களுக்கும் உயர்த்திக்கொண்டே போனோம். சிக்னஸ் பெனிஃபிட் வேண்டுமென்று கேட்டார்கள். அதற்காக ராஜ்ய நிதியிலிருந்து கொடுக்க கனம் பப்ளிக் ஹெல்த் மினிஸ்டருக்கு இதை மாற்றிவிட்டு, அந்த சலுகையெல்லாம் செய்துகொடுத்தோம்.



3rd August 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

ஆகவே, அந்தச் சலுகைகளையெல்லாம் வேண்டாமென்று சொல்லியிருந்தால் வேண்டாமென்று சொல்லித் தீர்மானம் போட்டு அனுப்பியிருந்தால் அதை நிறுத்துவதில் அப்ஜக்‌ஷன் ஒன்றுமில்லை, 'நீங்கள் 5, 10, 15 ரூபாய் என்றுதான் கொடுக்கிறீர்கள், இது எங்களுக்குப் போதாது, இது எங்களுக்குத் தேவையில்லை, கோர்ட்டிலே நாங்கள் அட்ஜுடிகேஷன் மூலம் கேட்டுக்கொள்கிறோம்' என்று அவர்கள் சொல்லியிருந்தால் இதை நிறுத்தி வைத்திருக்கலாம். கோர்ட்டுக்குப் போவதின்மூலம் பெற்றுக் கொள்கிறோம் என்று சொன்னால் தனியார் துறையிலே இப்படியெல்லாம் அடிக்கடி கொடுத்துக்கொண்டு வருகிறார்களா? ஆகவே, தொழிலாளர்கள் அதை ஏற்றுக்கொண்டு எந்த விதமான ப்ரொடஸ்டும் இல்லாமல் வாங்கிக்கொண்டிருக்கிற காரணத்தால் தான் நாம் இதைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். ப்ரொடஸ்டு செய்து, வேண்டாமென்று யூனியன் எழுதிவிட்டால் சர்க்கார் சலுகையை நிறுத்திவிடும். பிறகு கோர்ட்டுக்குச் செல்லலாம். அப்பொழுது போர்டில் இருக்கிறவர்கள் நஷ்டக் கணக்குகளைத்தான் காட்டுவார்கள். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் கிடைக்காமல் போய்விடும். சுமுகமான உறவுகள் ஏற்படாது. ஆகவே, பப்ளிக் யுடிலிடி சர்வீஸில் இருக்கிறவர்களுக்கு சர்க்கார் என்ன பாதுகாப்புக் கொடுக்கிறதோ அவைகள் எல்லாம் இந்தத் தொழிலாளர்களுக்கும் கிடைக்கும், இது அவர்களுக்கு நன்மையைத்தான் அளிக்கும். அது விருப்பமில்லையென்று சொன்னால் இப்பொழுது கூட அவர்கள் எழுதிவிடலாம். 'உங்களுடைய டி.ஏ. எங்களுக்குத் தேவையில்லை, நாங்கள் கோர்ட்டிலே என்ன முடிவாகிறதோ அதை பார்த்துக்கொள்கிறோம்' என்று சொல்லலாம். இது சம்பந்தமாக உள்ள சட்டத்தைப்பற்றியும் கொஞ்சம் நான் சொல்ல விரும்புகிறேன். எந்தத் தொழிலாளரும் ப்ரொடஸ்டு இல்லாமல் முதலாளியோ, அல்லது சர்க்காரோ பணம் கொடுப்பதை ஏற்றுக்கொண்டுவிட்டால், அவர்கள் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டார்கள் என்பதுதான் முடிவு என்று சுப்ரீம் கோர்ட்டிலே கூறப்பட்ட தீர்ப்புக்கள் இருக்கின்றன. தொழிற் சங்கத் தலைவர்களைப் பொறுத்தவரையில் அந்தத் தலைவர்களை எல்லாம் எனக்குத் தெரியும். அவர்கள் எல்லோரும் சட்டம் படித்தவர்கள். அடிக்கடி என்னிடத்தில் வந்து பேசிக்கொண்டிருப்பவர்கள். ஒரு வருஷத்தில் 364 நாட்களில் அவர்கள் ஒன்றுமே சொல்வதில்லை. ஒரே ஒரு நாள் பட்ஜெட் அன்று தான் அவர்கள் ஏதாவது புகார்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கிறபடியெல்லாம் கொடுக்கப்படுகிறது, இதைத் தவிர நாங்கள் அதிலேயும் ஏதாவது வந்தால் பார்க்கிறோம் என்று சொல்கிறார்கள். இதை நான் தொழிற் சங்க இயக்கத்திலேயே ஒரு புதுமை என்றுதான் சொல்வேன். இதை ஏற்றுக்கொள்கிறோம் என்று அவர்கள் சொன்னால், இப்பொழுது சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுப்பதைப்போல் கொடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ப்ரொடஸ்டாவது சொல்லியிருக்கவேண்டும். ஒரே ஒரு சிறு குறிப் மாத்திரம் . . . .

[3rd August 1965

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இது சம்பந்தமாக சிப்பந்திகளிடத்திலே எழுதிக் கையெழுத்துப்போட வேண்டுமென்று கோரப்பட்டது. இப்படிப் போட்டதிலே கடைசி வரைக்கும் இன்னும் கூடப் போடாதவர்கள் சிலர் இருக்கிறார்கள்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** சிலர் இருக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் பெருவாரியான அங்கத்தினர்கள் சொல்வதை ஒத்துக்கொள்ளவேண்டுமா அல்லது சிறுபான்மையான அங்கத்தினர்கள் சொல்வதை ஒத்துக்கொள்ள வேண்டுமா என்பதைக் கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் தான் சொல்லவேண்டும். கோர்ட்டு மூலம் மேற்கொண்டு கொடுத்தால் அதையும் பெற்றுக்கொள்கிறோம் என்று சொன்னால் அது நியாயமாகுமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். தொழிலாளர்கள் தங்களுடைய எண்ணத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும். கோர்ட்டுக்குச் சென்றால் அதனாலே வரும் நஷ்டத்தை பின்னால் அவர்கள் வருத்தத்துடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை ஏற்படும்.

Sri M. Kalyanasundaram rose.........

**Mr. DEPUTY SPEAKER:** The Hon. Minister is not yielding.

**The Hon. Sri R. VENKATARAMAN:** Sir, may I have another 15 minutes?

**கனம் உதவி சபாநாயகர்:** இந்த நேரத்தை உபமானியக் கோரிக்கைகள்மீது, நாம் நடத்த இருக்கும் பொது விவாதத்தில் குறைத்துக்கொள்ள வேண்டிவரும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** திரு. சங்கான் அவர்கள் பேசுகின்றபொழுது போர்டு மெம்பருக்கு 15 ஆயிரம் ரூபாய் ஏன் டி.ஏ. கொடுக்கப்பட்டது என்று கேட்டார்கள். பொறுப்புள்ள ஒரு அங்கத்தினர் இதை ஒரு பெரிய விஷயமாக அசெம்பிளியிலே சொல்லக்கூடிய நிலையில் இந்த விஷயம் இல்லை. ஆண்டுக்கு 30 கோடி ரூபாய் வரை செலவழிக்கும் ஒரு ஸ்தாபனம் இது. இதில் மெம்பர்கள் பல இடங்களுக்குப் போக வேண்டியிருக்கிறது; பல இடங்களில் அவ்வப்பொழுது கூட்டம்போட வேண்டியிருக்கிறது. இதைத்தவிர மெம்பர்களுக்கு 53 ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. சேர்மனுக்கு நாங்கள் கொடுக்கும் சம்பளம் குறைவானது. பென்ஷன் போக பாக்கியுள்ளதைத்தான் அவருக்குக் கொடுக்கிறோம். மற்ற மெம்பர்கள் எல்லோரும் கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்கள்தான். டைரக்டர் ஆப் இண்டஸ்டிரிஸ், செகரட்டரி டு இண்டஸ்டிரீஸ், செகரட்டரி டு பைனான்ஸ் போன்றவர்கள்தான் மெம்பர்களாக இருக்கிறார்கள். இந்த மாதிரி இந்த இலாகாவோடு இணைந்த தொடர்புள்ளவர்கள்தான் மெம்பர்களாக இருக்கிறார்கள். இது செலவில்லை. இது சிக்கனமாக நடத்தப்பட்டிருக்கிறது என்று இதை வரவேற்றிருக்க வேண்டும். மூன்று உத்தியோகங்கள்



3rd August 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

காலியாக வைத்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டது. அந்த உத்தியோகங்களைப் பூர்த்தி செய்யாமல் சிக்கனமாக செலவில்லாமல் நடத்துகிறோம் என்று அவர்கள் வரவேற்றிருக்க வேண்டும். இதிலே உத்தியோகஸ்தர்கள் போடவில்லையென்பது ஒரு குறையாகாது. நம்முடைய வேலையைப் பொறுத்துப் போடலாம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** அப்படியென்றால் போஸ்டே வேண்டாம் என்று சொல்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** போஸ்டை அபாலிஷ் பண்ணலாம். ஆனால் அதை மறுபடியும் ரிவைவ் பண்ணும்படி கோரும்பொழுது அதை அனுமதிக்க மாட்டோம். முன்பு 2 பேர் வைத்துக்கொண்டு இருந்தீர்கள், இப்பொழுது மூன்று பேர்கள் ஏன் கேட்கிறீர்கள் என்று விவாதம் நடக்கும். பின்பு அதை ரிவைவ் செய்வது கஷ்டம். ஆகவே, இதை ஒரு பெரிய குறையாகச் சொல்லமுடியாது. ஸ்டோர் பர்சேஸ் கமிட்டி தேவையென்று சொன்னார்கள். அதைப்பற்றி நான் சென்ற ஆண்டே சொல்லிவிட்டேன். புதிதாகச் சொல்ல ஒன்றுமில்லை. 10–30 a.m.

அடுத்தாற்போல் 'பி' கிரேடு லைசென்சீஸ் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் எல்லாம் 1,000 ரூபாய் காரண்டி கொடுக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. மின்சார இலாகாவிலே, சரியான முறையில் இணைப்புப் பொருத்தம் எல்லாம் செய்யாவிட்டால் இந்த சிஸ்டமே கெட்டு விடும். ஒரே காமன் க்ரிட் ஆக இருக்கும் காரணத்தால் ஒரு பகுதியிலே தவறு ஏற்பட்டாலும் 'ஹோல் சிஸ்டமே' 'அஃபெக்ட்' ஆகிவிடும். அடிக்கடி டெக்னிகல் 'ஃபெய்லர்ஸ்' வருவதற்குக் காரணம் 'நான்-ஸ்டாண்டர்டு எக்விப்மெண்ட்ஸ்' போடுவது, 'அன்க்வாலிபைடு பீப்பிளை' வைத்துக் கொண்டு போடுவது ஆகியவைதான். இருந்தாலும் அவர்கள் ஆயிரம் ரூபாய் காரண்டி கட்ட வேண்டுமென்று சொன்னால் அதிகமாக இருக்கும் என்று சொன்னார்கள். போர்டுடன் கலந்தாலோசித்து காரண்டி தொகையை 500 ரூபாயாகக் குறைக்க முடியுமா என்று பரிசீலனை செய்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் வாங்கக் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் இல்லாமல் அவர்கள் எப்படி வேலை செய்ய முடியும்? 'மெகர்' இல்லாமல் மெஷர் பண்ண முடியாது. லீக்கேஜ் இருக்கிறதா என்று கண்டுபிடிக்க முடியாது. இதையெல்லாம் யாரோ சொல்கிறார்கள் என்று சட்டசபையிலே வந்து சொல்வது பொருத்தமாக இருக்காது. நம்முடைய ஆக்ட் பிரகாரம் ஸ்டேட் எலக்ட்ரிசிடி போர்டுதான் ஃபைனல் அதாரிடி, அப்பெலட் அதாரிடி. அதற்கு மேல் அப்பலட் அதாரிடி என்று வைக்க முடியாது. சுப்ரீம் கோர்ட்தான் ஃபைனல் அதாரிடி என்றால் அதற்கு மேல் எப்படி ஒரு அப்பெலட் அதாரிடியை வைக்க முடியும்? அதே போல் எலக்ட்ரிசிடி போர்டு தான் ஃபைனல் அதாரிடி என்று தீர்மானம் செய்து ஆக்டில் போட்டிருக்கிறோம். அதற்கு மேல் அப்பெலட் அதாரிடி என்று ஒன்றும் வைக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்ற ராஜ்யங்களுடன் எதற்காக இணைப்புச் செய்யவேண்டுமென்று கேட்டார்கள். நல்ல கேள்விதான். இணைப்புச் செய்ய முக்கிய காரணம் என்னவென்று சொன்னால் நம்மிடம் உள்ள உபரியை மாற்றிக்கொள்ள மாத்திரமல்ல; நீண்ட தூரத்திற்கு மின்சாரத்தை எடுத்துச் செல்வதால் டிரான்ஸ்மிஷன் லாஸ் ஏற்படுகிறது. அதைக் குறைக்க பக்கத்தில் இருக்கும் இடத்தில் இருந்து வாங்கிக் கொண்டு இன்னோரிடத்தில் கொடுப்பது என்று ஏற்பாடு செய்கிறோம். உதாரணமாக இங்கிருந்து கன்னியாகுமரிக்கு பவர் கொடுப்பதை விட திருவனந்தபுரத்திலிருந்து எடுத்துக் கொண்டு, கோயம்புத்தூரிலிருந்து காலிகட்டுக்கு நாம் பவர் கொடுக்கலாம். இதனால் டிரான்ஸ்மிஷன் லாஸ் குறையும். மற்ற ராஜ்யங்களில் உபரி ஏற்பட்டு மாற்றிக் கொள்வது என்பதும் ஒரு முக்கிய காரணந்தான்.

அடுத்தாற்போல் கனம் அங்கத்தினர்கள் திரு. அழகமுத்து, திரு. வி. எஸ். எஸ். மணி, திரு. சுப்பையா முதலியார், திரு. ராகவ ரெட்டியார் ஆகியவர்கள் எல்லாம் வேலைகளை நிறைவேற்றக் காலதாமதமாகிறது என்று சொன்னார்கள். காலதாமதமாகிறது என்று சொல்வதை விடத் தேவைகள் அதிகமாக இருக்கின்றன என்று சொன்னால் நியாயமாக இருக்கும். 1963-64-ல் 1,620 கனெக்ஷன்ஸ் கிராமங்களுக்குக் கொடுத்தோம். 1964-65-ல் 2,552 கனெக்ஷன்ஸ் கிராமங்களுக்குக் கொடுத்தோம். தேவையோ ஐயாயிரத்திற்குமேல் இருக்கிறது. கிராமங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்குப் பணமும் கிடையாது; வேண்டிய மெடீரியல்சும் கிடையாது. கிராமங்களில் பலருக்குக் கிடைக்கவில்லை என்ற புகார் உண்மைதான்; இல்லையென்று சொல்லவில்லை. நம்முடைய வளர்ச்சி, தேவை மிக அதிகமாக இருக்கிறது. அதற்கு வேண்டிய நிதி நம்மிடத்தில் இல்லை, மெடீரியல்ஸ் போன்றவையும் இல்லை. அதன் காரணமாகத்தான் நாம் எவ்வளவுதான் சீக்கிரமாகக் கொடுக்க வேண்டுமென்று விரும்பினாலும் அதை நிறைவேற்றுவதற்கில்லை. பம்ப் செட்கள் சம்பந்தமாக எடுத்துக் கொண்டால் சென்ற ஆண்டு 22,953 கனெக்ஷன்ஸ் கொடுத்தோம். இந்த ஆண்டு 31,900-க்கு மேல் கொடுத்திருக்கிறோம். ஓராண்டில் இவ்வளவு அதிகமாகக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால் காலதாமதம் என்று எப்படிச் சொல்ல முடியும்? நம்முடைய தேவை இதை விட அதிகமாக இருக்கிறது. தேவையைத் திருப்தி செய்யக்கூடிய அளவுக்கு நிதியும் இல்லை, பல உபகரணங்களும் இல்லை. எவ்வளவு அதிகமாகச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்யலாமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஃப்யூஸ் கால் போன்றவை சீக்கிரமாக ரீப்ளேஸ் செய்யப்பட வேண்டும். டிலே இன் சர்விஸ் கனெக்ஷன் இருக்கிறது. போதிய அளவு மின்சார உபகரணங்கள் கிடைக்கவில்லை என்பன போன்றவற்றுக்கெல்லாம் அறிக்கையில் சமாதானங்கள் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், திரு. அழகமுத்து அவர்கள் பேசும்போது சில விஷயங்களை எடுத்துச் சொன்னார்கள். ஸ்டேட்மெண்ட் ஆப் அக்கவுண்டில் இருந்து எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக



ஆடிட் செய்யப்பட்ட பிறகு சொன்னால்தான் தீர்ந்து போன விஷயமாக இருக்கும். அக்கவுண்டிலிருந்து யாரும் சுலபமாகக் கண்டு பிடித்துச் சொல்ல முடியாது. உதாரணமாக, ஃபார்கோ வான் வாங்க 22,000 ரூபாய் என்று இருந்தது; செலவு 95,000 ரூபாய் அளவுக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். இது 'மிஸ் க்ளாசிபிகேஷன்' ஆகும். ஒரு தலைப்பில் போட வேண்டிய பணத்தை இன்னொரு தலைப்பிலே போட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்காக வாங்கப்பட்ட வான், ஜீப் போன்றவை எல்லாம் சேர்ந்து 95,000 ரூபாயாக இருக்கிறது. அதிலே தவறு ஒன்றும் ஏற்பட்டுவிடாது. பவர் டிரான்ஸ்பார்மருக்கு ஏன்—1,17,000 என்று போட்டிருக்கிறது என்று கேட்டார்கள். நாம் ஒரு டிரான்ஸ்பார்மரைக் கொண்டு போய் வைத்தோம்; அது போதாது என்று அதை எடுத்து விட்டு பெரிய டிரான்ஸ்பார்மரைக் கொண்டு போய் வைத்தோம். பெரிய டிரான்ஸ்பார்மர் இரண்டு லட்சம் ரூபாய் என்றால் திருப்பி எடுத்துக் கொண்டது—1,17,000 ஆகும்.

**திரு. து. ப. அழகமுத்து:** இடைவெளி ஒரு வருஷத்திற்கு மேல் இருக்கிறது. டிரான்ஸ்பார்மர் இல்லாமல் ஒரு வருஷம் இருந்திருக்க முடியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அங்கே சிறு டிரான்ஸ்பார்மரைக் கொண்டு போய் வைத்தார்கள். அது போதாதென்று பெரிய டிரான்ஸ்பார்மரை கொண்டு போய் வைக்கிறபோது அந்த வருஷக் கணக்கில் சிறு டிரான்ஸ்பார்மரை எடுத்துக் கொள்வதால் அதை மைனஸ் கணக்கில் போடுவார்கள்.

அடுத்து, முக்கியமாகச் சொன்னது நெய்வேலியிலிருந்து 5.2 பைக்கு வாங்கி லைசென்ஸ்காரர்களுக்குக் குறைவான விலைக்குக் கொடுக்கிறோம் என்பதாகும். நமக்குத் தேவையான மொத்த மின்சாரத்தையும் நாம் நெய்வேலியிலிருந்து வாங்குவதில்லை; சில இடத்தில் ஒரு பைசாவுக்கு உற்பத்தி செய்கிறார்கள்; சில இடங்களில் 3 பைசா, 4 பைசாவுக்கு உற்பத்தி செய்கிறார்கள். இதெல்லாம் சேர்ந்து கிரிட் ரேட் இருக்கிறது. ஆவரேஜ் ஆக அது 4½ அல்லது 5 பைசா வரும். நெய்வேலி ரேட்படி லைசென்ஸ்தாரர்களுக்குக் கொடுத்தால் அவர்களால் ஒரு இண்டஸ்ட்ரிக்குக் கூட மின்சாரம் கொடுக்க முடியாது. டிப்ரிசியேஷன் போட்டு அவர்களுக்கு 8 பைசா என்று சொன்னால் நம்முடைய நாட்டுக்கு இண்டஸ்ட்ரியே வராது. ஆகவேதான் அவர்களுக்கு ஆவரேஜ் ரேட் போட்டுக்கொடுக்கிறோம். 'ஏன் சிங்கிள் பேஸ் மீட்டர் வைக்கிறார்கள்? த்ரீ பேஸ் மீட்டர் வைத்தால் என்ன?' என்று கேட்டார்கள். மூன்று சிங்கிள் பேஸ் மீட்டரின் விலை 90 ரூபாய் வரைதான் ஆகிறது. ஆனால் ஒரு த்ரீ பேஸ் மீட்டரின் விலை 150 ரூபாய் வரை ஆகிறது. ஆகவே, எகனாமிக்காக சிங்கிள் பேஸ் மீட்டரை வைக்கிறார்கள். திரு. சுப்பையா முதலியார் அவர்கள் 'நான்-அபிஷியல் அட்வைசரி கமிட்டி' போட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இப்போது அது தேவையில்லை. டெவலப்மெண்ட் கமிட்டியே போதும். அந்த மாதிரி பதில் கொடுத்திருப்பதாக நினைக்கிறேன்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [3rd August 1965

திரு. கருணாநிதி அவர்கள் 'காண்ட்ரிப்யூஷன் டு லோன் ரிடம்ப்ஷன் ஃபண்ட்' போதாது என்று சொன்னார்கள். நாம் பொதுமக்களிடமிருந்து கடன் வாங்கிச் செலவு செய்வதை ஈடுகட்ட ஒரு நிதி வைத்திருக்கிறோம். அந்த நிதி வைத்திருப்பது சரியல்ல என்று அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆடிட் ரிப்போர்ட்டில் இருக்கிறது. 1957 எலக்ட்ரிசிடி போர்டு ஆக்ட் பிரகாரம் இதற்குப் ப்ரொவிஷன் கொடுக்கவில்லையாதலால் இவ்வாறு வைத்திருப்பது சரியல்ல என்று சொன்னார்கள். இந்த நிதி வைக்கவில்லையென்று சொன்னால் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாது. ஒரு காலத்தில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு எலக்ட்ரிசிடிபோர்டு கடன் பட்டு 60 கோடி ரூபாய் வட்டி கொடுக்கும் நிலைமை வந்து விடும். ஆகவே, அதை ஏற்றுக் கொள்ளாமல் நிதி ஒதுக்கித்தான் வைத்திருக்கிறார்கள். சமீபத்தில் அகில இந்திய டாரிஃப் போர்ட் கமிட்டி கூட அந்தக் கொள்கையை ஏற்று சிபார்சு செய்திருக்கிறார்கள் மத்திய அரசாங்கத்திற்கு, அதை திருத்தி கடனைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று. குறிப்பிட்ட ஆண்டை எடுத்துக் கொண்டால் 1968-ம் ஆண்டு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகை 2 கோடியாகி விடும். அதே சமயத்தில் நாம் நிதி ஒதுக்கியிருப்பது 2 கோடி 97 லட்சமாக இருக்கிறது. வருடா வருடம் ஒதுக்க முடியவில்லை என்று திரு. கருணாநிதி அவர்கள் சொன்னதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால், எப்போதைக்கெப்போது நிதி கிடைக்கிறதோ அப்போதைக்கப்போது நிதி ஒதுக்கி வந்ததால் இன்று முதன் முதலாக கொடுக்க வேண்டிய தொகை 68-ல் 2 கோடி கொடுக்க நம் இடத்தில் நிதி வசதி 2 கோடி 97 லட்சமாக இருக்கிறது.

தாத்தய்யங்கார்பேட்டை பற்றி சொன்னார்கள். ஊர் பெயர் நன்றாக இருக்கிறது. 'பிளாண்ட் பர்சேஸ் ஆஃப் ஸ்டோர்ஸ்' வேண்டுமென்று சொன்னார்கள். அதுபற்றி முன்பே கூறியிருக்கிறேன் எப்படி வாங்குகிறோம் என்று. பைக்கார ஸிஸ்டம் இருக்கிறது, குந்தா ஸிஸ்டம் இருக்கிறது, ஐந்தாறு ஸிஸ்டங்கள் இருக்கின்றன. அதிலுள்ள சீஃப் என்ஜினியர்கள் எல்லாம் ஆண்டுக்கு முன்னால் கணக்கு போட்டு இவ்வளவு ஸ்டோர்ஸ் வேண்டு மென்று எழுதி அனுப்புகிறார்கள். அதையெல்லாம் இங்குள்ள சீஃப் என்ஜினியர் பரிசீலித்து பின்னர் டெக்னிக்கல் மெம்பர் பரிசீலனை செய்து இவ்வளவு வேண்டுமென்று முடிவு செய்கிறார்கள். அப்படி முடிவு செய்யப்பட்டுத்தான் வாங்கப்படுகிறது. ஸ்டோர் விஷயத்தில் நாம் லிபரலாக வாங்கி வைப்பதுதான் நல்லது. ஸ்டோர் இல்லாததால் எந்தத் திட்டமும் தடைப்படக் கூடாது. அக்கவுண்ட்ஸ் ஆபீசரின் சர்விஸ் எதற்காக நீடிக்கப்பட்டது என்று கேட்டார்கள். அது அட்மினிஸ்ட்ரேட்டிவ் மாட்டர். அவர்கள் தேவைப்பட்டவர், நல்ல சேவை செய்கிறார்கள் என்று கொடுத்திருக்கலாம். டெப்டி சீஃப் அக்கவுண்டன்ட் ஸ்ரீபெரும்புதூரில் பணம் கையாடல் செய்து விட்டார் என்று சொல்லப்பட்டது. பணத்தை வைத்து செலவு செய்வதில் சூப்பர்வைசர் வைக்கப்படுகிறது. வேலியே பயிரை மேய்ந்து விட்டதென்றால் என்ன செய்வது? எந்த இலாகாவானாலும் நிதிநிலைக்கு



3rd August 1965] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

ஒருவரிடம் பொறுப்பு கொடுத்துத்தான் நடத்த வேண்டும். அந்த சூப்பர்வைசரே பணத்தை எடுத்துவிட்டார்கள். ஏன் மேலே சூப்பர்விஷன் இல்லை என்று கேட்டால் அது பதில் சொல்ல வேண்டிய விஷயம்தான். இதில் என்ன ஏற்பட்டது என்றால் சூப்பர்வைசராக இருப்பவரே பணத்தை கையாடல் செய்து விட்டார். பாவம் அவர் தண்ணீரில் மூழ்கி செத்து விட்டாராம். காரணம் நான் சொல்லத் தேவையில்லை.

நிலம் வாங்கியது சம்பந்தமாக கூறப்பட்டது. எருக்கஞ்சேரியில் நிலம் வாங்கப்பட்டது. இப்போது குறிப்பாக நான் சொல்ல விரும்புவது சர்க்காரிடத்தில் இருக்கிற தகவல் கலெக்டர் அவர்களை ஆலோசித்து என்ன விலை அந்த இடத்திற்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டு வாங்கினதாக தகவல் இருக்கிறது. இருந்தாலும் கனம் எதிர்கட்சித் துணைத்தலைவர் அவர்களே இதை சட்டசபையில் எடுத்துச் சொன்ன காரணத்தினால் இதை நாங்கள் அக்கவுண்ட்டென்ட் ஜெனரலுக்கு அனுப்பி 'ரிப்போர்ட் ஆஃப் தி டிரான்ஸாக்ஷன்' பற்றி விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்போகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, விவசாயிகள் சம்பந்தமாக சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம் ராஜ்யத்தில் 23 சதவிகிதம் விவசாயிகள் மின்சாரம் உபயோகப்படுத்துகிறார்கள் என்று முன்பே சொன்னேன். மேலும் அதை விஸ்தரிக்கவேண்டும் என்பதுதான் சர்க்காரின் அவா. மத்திய அரசாங்கமே இதற்கு 9 பைசா அளவு குறைந்த பட்சம் சார்ஜ் செய்யலாம் என்று சொன்னார்கள். நம் ராஜ்யத்தில் 8¼ தான் நாம் சார்ஜ் செய்து கொண்டிருக்கிறோம். மேற்கொண்டு நிதிநிலை எப்படியிருக்கும் என்று இப்போது சொல்வதற்கில்லை. எந்தளவிற்கு நாம் இந்தச் சலுகை கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்க சர்க்கார் உறுதி கொண்டிருக்கிறது என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். க்ரூப்பிங் ரெஸ்ட்ரிக்ஷன் 60-க்கு கொடுத்தாகி விட்டது. பாக்கி எஞ்சிய தாலுகாவில் இருக்கிறது. மின்சார உற்பத்தி சற்று விரிவடைந்தவுடன் அதைத் தளர்த்தி விவசாயிகள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் மின்சாரம் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலையை உண்டாக்க வேண்டுமென்று இப்போது சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. வை. சங்கரன்:** இந்த காண்ட்ராக்ட் லைசென்ஸ் பற்றி சொல்லும்போது, அந்த வேலை செய்பவர்கள் அன்க்வாலிபைடாக, இன்காம்பிட்டன்ட்டாக இருப்பதால் பெரிய பெரிய தவறுதல்கள் ஏற்பட்டு விடுமென்றும் ஆகவே டெப்பாசிட் ரூ. 1,000 கட்ட வேண்டியிருக்கிறது. அதை 500 ஆக குறைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மகிழ்ச்சி. வொயர்மென் வொயரிங் சர்ட்டிபிகேட் எடுத்து க்வாலிபைடாகவும், காம்பிட்டன்ட்டாகவும் இருக்கும் பகுதியினருக்கு எக்ஸெம்ஷன் கொடுத்து அதில்லாத கன்ட்ராக்டர்களுக்கு 500 ரூபாய் விதிக்கும் முறையில்

[திரு. வை. சங்கரன்] [3rd August 1965

அந்தச் சலுகை கொடுப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சிந்திப்பார்களா ? அதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கன்ட்ராக்டர்கள் செய்த தவறுகளை சொல்ல வேண்டாமென்று மேலெழுந்தவாரியாக பதில் சொன்னேன். இப்போது திரு. சங்கரன அவர்கள் அதை சொல்லத்தான் வேண்டுமென்றால் இந்த சபையில் அதைச் சொல்லவும் தயாராயிருக்கிறேன். கன்ட்ராக்டர்கள் போலி சர்டிபிகேட் கொடுக்கிறார்கள். தான் டெஸ்ட் செய்ததாக கொடுக்கிறார்கள். தாங்கள் செய்யாத வேலைக்கு 10, 20 ரூபாய் வாங்கிக் கொண்டு செய்ததாக கொடுக்கிறார்கள். இந்தவிதமான பல்வேறு புகார்கள், குறைகள் எல்லாம் நம்மிடத்தில் வருகின்றன. இதை அவர்கள் மீது என்போர்ஸ் செய்யவேண்டுமென்றால் வழியில்லை. ஆகவே ஆயிரம் ரூபாய் போட வேண்டுமென்று நினைத்தேன். இருந்தாலும் அங்கத்தினர்கள் எல்லோரும் சொன்னார்கள் இது அதிகமாக இருக்கிறது என்று. அதற்காகத்தான் 500 ரூபாயாகக் குறைத்தது. வேலை தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்பதில்லை. யோக்கியமானவர், யோக்கியமில்லாதவர்கள் என்பதுதான் பிரச்னை.

Sri N. Rajangam rose.........

MR. DEPUTY SPEAKER : We have to take up voting on supplementary Demands at 1 p.m. The hon. Member should be brief.

**திரு. ந. இராசாங்கம் :** தென் ஆற்காடு மாவட்டத்தில் சூபரின்டென்டிங் எஞ்சினியர் போட வேண்டுமென்று என் உரையில் வேண்டிக்கொண்டேன். செங்கல்பட்டு, திருச்சிக்கு போய் கடைசி அனுமதி வாங்கவேண்டிய நிலை இருப்பதால் தொழிற்சாலைகள் கூடுதலாக ஆண்டுக்கு ஆண்டு உண்டாகிக் கொண்டிருக்கிற நிலை இருப்பதால் அதைச் செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மற்ற விவரங்களை எல்லாம் கனம் அங்கத்தினர்கள் தனித்தனியாக சொன்னதை புத்தகத்தில் போட்டு பதில் கொடுக்கிறோம். அதை பரிசீலனை செய்து பதில் கொடுப்பார்கள்.

## VI.— FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1965-66—GENERAL DISCUSSION.

MR. DEPUTY SPEAKER : Now general discussion on the First Supplementary Statement of Expenditure for 1965-66 will take place. The hon. Member, Sri K. A. Mathialagan, may now speak.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற உப மானியக் கோரிக்கைகள் மீதான முதல் துணை அறிக்கை மீது



3rd August 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

நான் ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறி அமரலாம் என்று கருதுகிறேன். துணை மானியக் கோரிக்கைகளில் போலீஸ் படையினரின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கும், அவர்களின் படைக்கலன்களை அதிகப்படுத்தவும் தேவையான ஏற்பாடுகளை செய்ய அரசாங்கம் அண்மையில் பரிசீலித்திருக்கிறது. போலீஸ் படையினரின் திறனை அபிவிருத்தி செய்து மாநிலத்தின் சட்ட நிலைமைகளை பராமரிக்க உதவும் பல திட்டங்களுக்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது என்ற வகையில் 48,79,000 ரூபாய் துணை மதிப்பீடு கோரிக்கையாக கோரியிருக்கிறார்கள். இந்த விவரங்களை குறித்து சில வார்த்தைகள் குறிப்பிடுவது பொருத்தமானது என நான் கருதுகிறேன். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கவேண்டும், சட்டமும் ஒழுங்கும் பராமரிக்கப்படவேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்பதிலும், நாட்டில் நல்லாசு நிலவவேண்டும் என்பதிலும் யாருக்கும் இரண்டு விதமான அபிப்பிராயங்கள் இருக்கமுடியாது. நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, நல்லமுறையில் சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படவேண்டும், நாட்டில் நல்லதொரு சமுதாயம் அமையவேண்டும், நாட்டில் சமதர்மம் வளரவேண்டும், அதன் அடிப்படையில் போலீஸ்காரர்களுக்கு அவர்களுடைய பிரத்யேக பணியைக் கருதி நல்ல உதவிகள் செய்து கொடுக்கவேண்டும் என்பதில் எங்களில் யாருக்கும் வெவ்வேறான அபிப்பிராயம் இருக்க முடியாது. ஆனால் இந்த மன்றத்தில் போலீஸ் படைக் கலனை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று அரசாங்கம் பரிசீலனை செய்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு பரிசீலனை செய்த விவரங்கள் என்ன ? சுதந்திரம் பெற்று 18 வருடங்களாகியும், புதிய சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்று சொல்லுகின்றோம், புதிய சமுதாய முன்னேற்றத்தை காண வேண்டும் என்று சொல்லுகிறோம். அந்த அடிப்படையை நிறைவேற்ற போலீஸ்காரர்கள் தாங்கவேண்டிய பாத்திரம் குறித்து பரிசீலனை செய்யப்பட்டதா ? அப்படியில்லாமல் கண்ணீர்ப்புகை செய்வதற்கும், தடியடி செய்வதற்கும், துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கும், விலைக உயிர்களை கொன்று குவிப்பதற்கும் இதற்காக பரிசு கொடுப்பது போல்—சம்பளத்தில் ஒரு விகிதத்தை உயர்த்திக் கொடுப்பதற்கும்தான்—இப்போது அரசாங்கம் பரிசீலனை செய்ததா என்பதை நான் அறிய விரும்புகிறேன். சட்டமும் ஒழுங்கும் நாட்டில் பாதுகாக்கப்பட வேண்டியதுதான். ஆனால் அதே நேரத்தில் சட்டத்தின் பெயரால், சட்ட விரோதமான வகையில் பல காரியங்களை இந்த அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. கடந்த நான்கு மாதங்களாக தமிழ்நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சரியானபடி பாதுகாக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால்—இல்லை—போலீஸ்காரர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதோடு அல்லாமல் மக்கள் ஊழியர்களாகவும் இருக்கவேண்டும் என்று எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால் நாட்டில்

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் எதையெல்லாமோ படிக்கின்றார்கள். இப்போது இந்திய பாதுகாப்புச் சட்டம் அமலில் இருக்கிறது. இந்தச் சட்டத்திற்கு விரோதமாக சுப்ரீம்கோர்ட் ஏதாவது தீர்ப்பு கொடுத்திருந்தால், அதைக் காண்பிக்கவேண்டும். அதல்லாமல் எதையெல்லாமோ சொல்லிக்கொண்டிருப்பது பொருத்தமாகாது. இப்போதும் எத்தனையோ டெட்டின்யூக்களின் மனுக்கள் பரிசீலனையில் இருக்கின்றன. இவைகளை எல்லாம் அரசாங்கம் தள்ளிவிடவில்லை. செப்டம்பர் 6-ம் தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஹைக்கோர்ட்டிலும் இதைப்பற்றி வழக்கு இருந்து வருகிறது. அப்படியிருக்கும் போது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை இவர்கள் மீறியிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பது கொஞ்சமும் பொருத்தமல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்** : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, எனக்கு இன்னும் சில நிமிடங்கள் அதிகமாக தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய கருத்தை நான் தகுந்த ஆதாரங்களுடன் இங்கு எடுத்துக்காட்ட தயாராக இருக்கிறேன். சுப்ரீம் கோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். 22-வது ஆர்ட்டிகிள், 14-வது ஆர்ட்டிகிள், இரண்டும் அடிப்படை உரிமைகள் பற்றிய சட்ட விதிகளாகும். இதற்கு முரணாக இருக்கின்றது இந்த பாதுகாப்புச் சட்டம் என்பதை நன்றாக தெளிவாக திட்டவட்டமாக எடுத்துக்காட்ட முடியும். அதற்கு பல புத்தகங்கள் சட்ட கருத்துரை ஏடுகள் இருக்கின்றன. இவ்வளவு இருந்தும், இது எங்கே இருக்கிறது, எங்கே சொல்லப்பட்டிருக்கிறது என்று கேட்கிறார்கள் நமது முதலமைச்சர் அவர்கள். சுப்ரீம் கோர்ட்டில் இதைப்பற்றிய தாவா வந்தபோது, அப்ஸர்வேஷனில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இதில் இருக்கக்கூடிய கஷ்டத்தை விளக்கியிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தின்படி தான் இச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்** : பாதுகாப்புச் சட்டம் அரசியல் சட்டத்திலுள்ள அடிப்படை உரிமைகளான "equality of law, equal protection before law" போன்ற விதிகளுக்கு முரணாக விரோதமான வகையில் செய்யப்பட்டுள்ள சட்ட விரோதமான, செல்லுபடியாகாத சட்டம் என்பதை சுப்ரீம் கோர்ட் தெளிவாக சொல்லியுள்ளது. இது சம்பந்தமாக சட்ட நிபுணர்களிடம் கருத்துரை கேட்டபோது அதில் கலந்து கொண்டு சுப்ரீம் கோர்ட் பெரிய வழக்கறிஞர்கள் திரு. செதல்வாட், திரு. என். வி. சாட்டர்ஜி, திரு. எம். கே. நம்பியார், திரு. விஸ்வநாத சாஸ்திரி, திரு. ஏ. எஸ். ஆர். சாரி போன்றவர்கள் மிகத் தெளிவாக பாதுகாப்புச்சட்டம் சட்ட விரோதமானது என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள்.



**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம் இப்போது அமலில் இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டில் இதற்கு விரோதமாக ஏதாவது சொல்லியிருந்தால், அதைச் சொல்லவேண்டும். அதல்லாமல் செதல்வாட் சொல்லியிருக்கிறார், சட்டர்ஜி சொல்லியிருக்கிறார் என்று சொல்வது என்ன நியாயம்? பாராளுமன்றம் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது, வேண்டுமென்றால் அதை மாற்றவேண்டும் என்று சொல்லலாம். அதல்லாமல் ஏதோ இது சட்டவிரோதமானது, சட்டவிரோதமானது என்று சொல்லிக் கொண்டிருப்பதால் என்ன பிரயோசனம்?

**திரு. கே. ஏ. மதியழகன்** : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, மிகப் பணிவோடு சொல்லிக்கொள்வேன், சம்பந்தம் உண்டு. 11-00 a.m.
இதே சட்டத்தின் கீழ், இதே சென்னை சர்க்கார், சட்ட விரோதமான சட்டத்தின் கீழ், அரசியல் அமைப்புக்கு முரண்பட்ட சட்டத்தின்கீழ், அரசியல் சட்டத்தை கேவலப்படுத்தும் சட்டத்தின் கீழ், அந்தச் சட்டத்தின் 30-வது விதியின் கீழ் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இது முறைக் கேடானதல்லவா? முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் இந்த நூலை பரிசாக அளிக்கிறேன், சட்ட விரோதமான சட்டம் என்று இத்தனை வக்கீல்கள் சொல்லுகிறார்களே என்று பார்த்தாவது, ஜனநாயகத்தில் நம்பிக்கை இருந்தால், குடி உரிமையில் நம்பிக்கை இருந்தால் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இந்த டிடென்ஷன் செய்ததைப் பற்றி சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது, சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு இருக்கிறது. அவர்கள் சொல்லவேண்டும். கனம் அங்கத்தினர் மதியழகன் சொன்னால் போதாது. விசாரணையில் இருக்கும்போது இப்படிச் சொல்லுவது கூட கண்டெம்ப்ட் ஆஃப் கோர்ட். அவர்கள் பார்த்துச் சொல்லவேண்டும். அதை விட்டு சட்டத்திற்கு விரோதம், சட்டத்திற்கு விரோதம் என்று இங்கே சொல்லுவதால் என்ன பிரயோசனம்?

**திரு. கே. ஏ. மதியழகன்** : முதல் அமைச்சர் அவர்கள் துர்வாச முனிவர்போல், எல்லா வக்கீல்கள் மீதும் சாபம் . . .

**MR. DEPUTY SPEAKER** : The hon. Member should not indulge in such remarks.

**திரு. கே. ஏ. மதியழகன்** : சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லி சட்ட விரோதமான சட்டத்தை நாட்டில் அமுல் படுத்துகிறார்கள், இது முதல் குற்றச்சாட்டு. இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு அரசியல்வாதிகளைப் பழி வாங்க உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள், இது இரண்டாவது குற்றச்சாட்டு. அந்தச் சட்டத்தின் கீழ் 10 கல்லூரி மாணவர்களைச் சிறையில் பிடித்து அடைத்தார்கள். அதைப் பற்றி குறிப்பிடும்போது 'காரணம் சொல்லக் கூட வேண்டியதில்லை. இருந்தாலும் சொல்லுகிறேன்' என்று அன்றைய தினம் கனம் முதல்

அமைச்சர் கூறினார்கள். ஏன் அவர்கள் மீது வழக்கு போடக் கூடாது? வழக்குப் போட்டு தண்டிக்கட்டுமே? அவமானகரமான சட்டத்தின் கீழ், குடியுரிமையைப் பறிக்கும் சட்டத்தின் கீழ் ஏன் அவர்களைச் சிறையில் கொண்டு வைக்கவேண்டும்? ஏன் இப்படி பழி வாங்கவேண்டும்? சட்டப் புத்தகத்தில் வேறு செக்ஷன்கள் இல்லையா? சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக இந்தச் சட்டம் இருக்கிறது என்று சொல்லுகிற நேரத்தில் இரண்டு விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இதிலே ஒரு அபாயகரமான நிலைமை இருக்கிறது. இன்றைக்கு தமிழகத்திலே போலீஸ் படையின் திறமை அதிகரிக்கிறது என்றால் அதை நான் வரவேற்கிறேன். ஆனால், கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு என்ன பார்த்தோம்? என்ன நிலைமை இருந்தது? அந்த நிலைமையைச் சரியாகச் சமாளித்தார்களா? நான் மிகப் பணிவோடு, உதவி சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்வேன், அன்றைக்கு ஏற்பட்ட அமளிகள், ரத்தக்களரிகள், உயிரிழப்பு, பொருட்சேதம் இவற்றிற்கெல்லாம் யார் பொறுப்பு? சட்டத்தையும் ஒழுங்கையும் எப்படிப் பாதுகாத்தார்கள் . . . .

**கனம் திரு. பூ. கக்கன்** : இதற்கெல்லாம் காரணம் கனம் அங்கத்தினருடைய கட்சியும், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் தான்.

**திரு. கே. ஏ. மதியழகன்** : ஒப்புக்காக இப்போது சொல்லலாம். உயர்நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் பொது நீதி விசாரணை வையுங்கள் என்று சொன்னோமே, அறைகூவல் விட்டோமே, அது என்ன ஆயிற்று? இப்போதாவது தயாரா? போலீஸ்காரர்களுக்கு புதிய கடமைகள் ஏற்பட்டு இப்போது புதிய சமுதாயத்தை நோக்கி நடை போடுகிறோம். இனிமேல், துப்பாக்கி குண்டுகளாலும் கண்ணீர் புகையினாலும் தடியடியினாலும் பரிகாரம் தேட முடியாது என்பது மட்டுமல்ல, தமிழகத்திலே அன்று என்ன பார்த்தோம்? சாவுக்குத் துணிந்து துப்பாக்கிக்கு மார்பைக் காட்டினார்கள். என்ன நடந்தது? சாவுக்கு அஞ்சாத (Death defying) மக்கள் தோன்றி விட்டனர். நாட்டிலே உள்ள 30,000 போலீசார்கள் 3½ கோடி மக்களை சமாளித்து விடப் போகிறார்களா? சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் மக்கள் சம்மதமே அடிப்படை; எனவே சட்ட விரோதச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டும், இது முதல் மந்திரிக்கே அவமானச் சட்டம், நியாயமான குற்றச்சாட்டுகள் இருந்தால், சட்டப் புத்தகத்திலே வேறு சட்டங்கள் இருக்கின்றன, அவைகளின் கீழ் வழக்குத் தொடரலாம் என்று வலியுறுத்திக் கூறி, இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு பழி வாங்குவது சரியாகாது, பாதுகாப்புச் சட்டத்தை வாபஸ் வாங்குங்கள், சிறைப்பட்டவர்களை விடுதலை செய்யுங்கள் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற உதவி மான்யக் கோரிக்கையை ஆதரிக்கிறேன்.





இந்த இனங்களில் ஏறக்குறைய 19.75 கோடி ரூபாய் துணை மான்யமாகக் கோரப்பட்டிருக்கிறது. அதில் பெரும் பகுதியும் மூலதனச் செலவுகளுக்காகக் கோரப்பட்டிருக்கிறது. அது ராஜ்யத்தினுடைய வேகமான அபிவிருத்திக்கு அறிகுறியாக அமைகிறது. விவரங்களைப் பார்க்கிற நேரத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு எத்தனையோ உதவிகளைச் செய்ததன் காரணமாக கைத்தறி உற்பத்தி பெருகியது. கைத்தறி உற்பத்தி பெருகியதன் காரணமாக, அளவுக்கு அதிகமாகக்கூட பெருகி, தேக்கம் ஏற்பட்டது. உற்பத்தி பெருகியதற்கு ஏற்ப விற்பனைக்கு ஏற்பாடு செய்யாவிட்டால் பஞ்சம் ஏற்படுமோ என்ற நிலைமை கூட ஏற்பட்டது. அந்த நிலைமையைத் தவிர்க்க ½ கோடி ரூபாய் உதவி கொடுத்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். அவர்களுடைய கஷ்டங்களைப் போக்க சர்க்கார் உதவிகளைச் செய்திருக்கிறார்கள். அது இந்த துணை மானியத்தில் இடம் பெற்றிக்கிறது.

இந்த மானியத்தில் சின்னஞ்சிறு திட்டங்கள் கூட இணைக்கப்பட்டிருக்கின்றன. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் க்ராஷ் ப்ரோக்ராம் போட்டு, ஸ்தல ஸ்தாபனங்களில் ஏற்படக் கூடிய சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்ற வழிவகை செய்திருக்கிறார்கள். முன்பு இருந்து வந்த ஜில்லா போர்டு காலத்தில் சில ரோடுகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. பஞ்ச நிவாரண வேலையாகக் கூட சில ரோடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். ஸ்தல ஸ்தாபனங்கள் பொறுப்பில் சில ரோடுகளெல்லாம் போடப்பட்டிருக்கும். போடப்பட்டு சில ரோடுகள் அரைகுறையாகக் கூட இருக்கும். போடப்பட்டு முழுமையான ரோடுகள் கூட, ஜில்லா போர்டுக்குச் சொந்தம், அல்லது சர்க்காருக்குச் சொந்தம் என்ற நிலைமை இல்லாது இருக்கும். திருநெல்வேலி ஜில்லாவில் கூட அது போன்ற ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் சர்க்கார் பொறுப்புக்கே ஆர்ஜிதம் செய்ய வழிவகை செய்து அதற்கான நிதி ஒதுக்கம் கூட இந்தத் துணை மானியக் கோரிக்கையில் இருப்பது பார்த்து நான் சந்தோஷப்படுகிறேன்.

மற்றொன்று, இன்னும் நல்ல முறையில் சிறு தொழில்கள் பரவுவதற்காக ஒரு நல்ல நிறுவனம் ஸ்மால்-ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன், நிறுவ ஏறக்குறைய 7 கோடி ரூபாய்க்கு மேல் உதவி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு சிறந்த ஏற்பாடு. சமீபத்தில் தேசம் முழுமையிலும் ஏற்பட்டிருக்கக்கூடிய பொருளாதார நிலைமையை மனதில் கொண்டு ரிசர்வ் பாங்கினர் சில முடிவுகள் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் எடுத்திருக்கிற முடிவு கிராம மட்டத்தில் இயங்கக் கூடிய சாதாரண விவசாய பாங்கைக் கூட முழு அளவுக்கு பாதித்திருக்கிறது. என்னுடைய பணிவான அபிப்பிராயம், ரிசர்வ் பாங்க் செய்திருக்கிற முடிவு தேசம் முழுமைக்கும் பொருத்தமானதாக இருக்கலாம், இருந்தாலும் எந்தெந்த இனங்களில் அமல் நடத்துவது என்பதில் கூட்டுறவு சொஸைட்டிகளில் கூட பல ரக சொஸைடிகள் இருக்கின்றன, எந்தெந்த சொஸைட்டிகள் என்று தேர்ந்தெடுத்து கூட பொருள் வழங்குவதில் ஏற்பட்டிருக்கிற சிக்கலைத் தவிர்க்க முயற்சி செய்ய

[திரு. எஸ். எஸ். செல்வராஜன்] [3rd August 1965

வேண்டியது மிகப் பெரிய பொறுப்பு. மற்றப்படி ஒரு மொத்த மாக எல்லா கூட்டுறவு சொஸைட்டிகளுக்கும் சிரமத்தைக் கொடுக்கக் கூடிய முறையில் நிலைமை ஏற்படுமானால் ப்ரொடக்ஷன் கூட பாதிக்கப்பட்டுப் போகும் என்று நான் அஞ்சுகிறேன். ஆகவே அமைச்சர் அவை தீர்க்கமாக யோசித்து, கோவாப்ப ரேட்டிவ்களை இனவாரியாகப் பிரித்து, எவற்றுக்குக் கொடுக்க வேண்டும், எவற்றுக்கு சிரமங்களைத் தவிர்க்கவேண்டும் என்று புனர் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என்று நான் கருது கிறேன். இது போன்று ஸ்மால்-ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்ப ரேஷன் வைக்க ஏற்பாடு இருக்கிறதே அது ஒரு நல்ல ஏற்பாடு. ஏனென்றால் சிறு தொழில்கள் வைக்க அறைகுறையாக ஏற்பாடுகள் செய்திருக்கலாம. அவர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாது, ரிசர்வ் பாங்க் அல்லாத மற்ற வங்கிகளில் வாங்குவதிலே கூட சிரமங்கள் ஏற்பட முடியும், அத்தகைய சிரமங்கள் ஏற்படாத அளவுக்கு சிறந்த நிறுவனமாக இது அமையும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

முதல் முறையாக துணை மானியம் வரும்போது மற்றொரு செய்தியை எதிர்பார்த்தோம். சென்ற வருஷம் ஏப்ரல் மாதத்தில் இருந்து தனியார் பாடசாலைகளில் பணிசெய்திருக்கிற ஆசிரியர்கள், ரிட்டயர் ஆன ஆசிரியர்களுக்கு, குறைந்தபட்சம் 20 ரூபாயாவது கிடைக்க வழி செய்யப்படும் என்ற நம்பிக்கை இருந்தது. சென்ற வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து ஆக்ஸ்ட் மாதம் வரையில் கூட ரிட்டயர் ஆன ஆசிரியர்களுக்குப் பணம் கொடுத்து, தவறுதலாகக் கொடுக்கப்பட்டது என்று திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். பிறகு உத்திரவிட்டாலும், ரீட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து ஏப்ரல் மாதத்திலிருந்து 20 ரூபாய் கிடைக்க வழி செய்யப்படும் என்று நம்பிக்கை இருந்தது. ஏனென்றால் சர்க்கார் தீவிரமாகப் பரிசீலனை செய்துகொண்டிருப்பதாக அப்போதைக்கப்போது வாக்குறுதி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே இப்போது இடம் பெறாவிட்டாலும் தீவிரமாக கவனம் செலுத்தி அதற்குத் தகுந்த வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிற நிலைமை இந்தச் சபையும், இந்த ராஜ்யமும் அறிந்த நிலைமைதான். இன்று காலையில் எனக்கு வந்த செய்தி கூட இது வரையில் அங்கே மழை இல்லை என்பதுதான். பஞ்சம் பரவலாக இருக்கிறது. மலை முக்கிலிருந்து கடற்கரை வரையில் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ராயல சீமையைப் போல கஷ்டம் ஏற்பட்டுவிடுமோ என்று நாமெல்லாம் அஞ்சுகிறோம். நான் நேரடியாகத் தெரிந்து கொண்ட மட்டில் திருச்செந்தூர், நாங்குனேரி பகுதிகளில் கிணறுகளை எவ்வளவோ ஆழப்படுத்தியும் குடிப்பதற்கு கூட தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கடந்த 10 வருஷங்களுக்கு முன்பு, ஏறக்குறைய 1955, 1956-வது வருஷம் என்று நினைக்கிறேன், அந்த நேரத்தில் இதுபோன்ற கஷ்ட நிலைமை ஏற்பட்டது தண்ணீருக்கு. பவர் டிரில்ஸ் எங்கிருந்தெல்லாமோ கொண்டுவரப்பட்டு ஆழமான



3rd August 1965] [திரு. எஸ். எஸ். செல்வராஜன்]

கிணறுகள் தோண்டி, குழாய்கள் மூலம் தண்ணீர் கொடுக்கக்கூடிய வசதி செய்வதற்கு அரசாங்கம் முந்திக்கொண்டது. அந்த நிலைமை இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. சாதாரண வசதியை வைத்துக்கொண்டு, கருவிகாணங்களை வைத்துக்கொண்டு இதைச் செய்து கொடுக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை. பவர் டிரில்ஸ் எங்கிருந்தாலும், அவைகளை ஒட்டு மொத்தமாக அந்த பகுதிக்குக் கொண்டு வந்து சேர்த்து, குடிதண்ணீர் கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும். நான் அறிந்த மட்டில் ஒரு சாதாரண கிராமத்தில் ஒரு வாளி தண்ணீர், 80 பைசா, 90 பைசா விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் காயல்பட்டணத்தில் அந்த மாதிரி நிலைமை இருக்கிறது. இம்மாதிரி நிலைமை எண்ணற்ற கிராமங்களில் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன தீவிர ஏற்பாடுகள் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் தயவு செய்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த துணை மான்யக் கோரிக்கையில் பல இடங்களில்; குறிப்பாக தஞ்சாவூர் போன்ற இடங்களில் கோடவுன்ஸ் கட்டுவதற்கு நல்லபடியாக முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது, பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. சந்தோஷம். சாதாரண கண் கொண்டு பார்ப்பதற்கு சென்னை நகரத்தில் தெருவில் விற்கக் கூடிய அரிசி விலை ரூ. 1.10 அல்லது 1.15 ஆக இருக்கிறது. ஆனால், திருச்செந்தூரில் ஒரு படி அரிசி விலை ரூ. 2.15 என்று கேள்விப்படுகிறேன். இப்படி ஒரே ராஜ்யத்தில் ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் ஒரு படி அரிசியின் விலையில் ஒரு ரூபாய்க்கும் அதிகமாக வித்தியாசம் இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருந்தால், இந்த ஏற்பாடு சரியான ஏற்பாடு என்று நாம் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? இந்த நிலைமையை தவிர்ப்பதற்கு அரசாங்கம் எவ்வளவு வேகமாக திட்டங்கள் வகுக்கக்கூடுமோ அவ்வளவு வேகமாக திட்டங்கள் வகுத்து, அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் குடும்பக் கார்டுகள் வழங்கும் திட்டத்தை அமல் நடத்துவதுபற்றி ரொம்பவும் சந்தோஷம். இந்த ஏற்பாட்டைச் செய்வதிலே ரெவின்யூ அதிகாரிகளின் சாதாரணப் போக்கு கடைப்பிடிக்கப்பட்டால் ஒரு மாத காலம் ஆகிவிடும். அதற்குள் என்ன விளைவு ஏற்படும் என்று சொல்ல முடியாது. ஆகையால் இதை அவசர முக்கியத்துவமாகக் கருதி, ஸ்பெஷல் 'ஸ்டாஃப்' போட்டு, இந்த திட்டத்தை காலாகாலத்தில் அமல் நடத்துவதற்கு என்னென்ன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரபாணி நதி தீரத்தில் ஒரு முக்கியமான குறைபாடு இருக்கிறது. இந்த வறட்சியை பயன்படுத்திக்கொண்டு, இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமையை பயன்படுத்திக்கொண்டு,
[illegible] புனரமைப்பு செய்தால் தான்

தண்டத் தீர்வை வசூலிப்பதை நிவர்த்தி செய்ய முடியும். புஞ்சையை நஞ்சையாக மாற்றக்கூடிய வாய்ப்பு அளிக்கப்படும் என்று அரசாங்கத்தின் சார்பில் முன்பு வாக்குறுதி கொடுக்கப்பட்டது, கனடியன் கால்வாய்க்காக ரூ. 4.5 லட்சம் ஒதுக்கப்பட்டது. அந்தத் திட்டம் மீண்டும் அமல் நடத்தப்படாமல் இருக்கிறது. சர்க்கார் பாக்கி இருக்கக்கூடிய வேலைகளையும் சாங்ஷன் செய்து, இந்த வரட்சி காலத்தை உபயோகப்படுத்திக்கொண்டு இந்த வேலைகளை துரிதமாக எடுத்து நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் இந்தத் துணை மான்யக் கோரிக்கையின் மீது சில வார்த்தைகள் கூறலாம் என்று நினைக்கிறேன். 17, 18 வருஷ காலமாக இந்த நாட்டிலே ஒரே கட்சியினர் ஆண்டு வந்தும்கூட, 8 அவுன்ஸ் அரிசி என்ற நிலைமையிலே இப்பொழுது துணை மான்யக் கோரிக்கையை நமது முதல் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். இந்த 8 அவுன்ஸ் அரிசியும், 6 அவுன்ஸ் ஆகுமோ அல்லது 4 அவுன்ஸ் ஆகுமோ என்ற பயம் இன்னும் மக்களிடத்திலே இருந்துகொண்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய எனது கட்சியினுடைய செயலாளர் திரு. மதியழகன் அவர்கள் 'டிபென்ஸ் ஆப் இண்டியா ரூல்ஸ்' பற்றியெல்லாம் பேசினார்கள். முதல் அமைச்சர் அவர்கள் கூட ஆதாரங்கள் கொடுங்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நான் இங்கே அவர்களுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால், 'டிபென்ஸ் ஆப் இண்டியா ரூல்ஸின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை முதல் அமைச்சர் அவர்களுக்கு நேரடியாகத் தெரியாது, தெரிந்திருக்க வேண்டிய அவசியமும் கிடையாது. 'டிபென்ஸ் ஆப் இண்டியா ரூல்ஸின்' கீழ் எப்படி கைது செய்யப்படுகிறார்கள், யார் கைது செய்யப்படுகிறார்கள், எப்படி மாவட்டரீதியிலே இருக்கிற அதிகாரிகள் தங்களுக்கு இருக்கிற பொதுவான எதிரிகளை இந்தச் சட்டத்தினுடைய பற்களிலே தள்ளி விடுகிறார்கள் என்பதனை ஒரு குறிப்பை வைத்து நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கன்யாகுமரி மாவட்டத்தில் வழக்கறிஞர் எம். ஸி. பாலன் அவர்கள் 1962-ம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டவர்கள். 20,000 வாக்குகளைப் பெற்று தோல்வி கண்டவர். அவர் அண்ணார் சென்னை பல்கலைக்கழகத்தில் டாக்டராக பணி புரிகிறார். அவருடைய இன்னொரு சகோதரர் அரசாங்க வக்கீலாக இருக்கிறார். திரு. பாலன் அவர்கள் ஏற்கனவே மாவட்ட பப்ளிக் ப்ராஸிக்யூட்டராக இருந்த பக்ருதீன் ஆடம் என்பவரோடு கூட இருந்து வழக்கறிஞராக பணி புரிந்து வருகிறார். எதற்காக இன்று திரு. எம். சி. பாலன் அவர்கள் 'டிபன்ஸ் ஆப் இண்டியா ரூல்ஸின்' கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறார்? காரணம் கேட்டால், திரு. பாலன் அவர்கள் ஒரு ரௌடி என்று சொல்லுகிறார்கள். நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், இப்படி ஒரு வழக்கறிஞராக இருப்பவரை, தேர்தலில் நின்று போட்டியிட்டவரை, அரசியல்வாதியை என்ன காரணத்தினால் ரௌடி என்று சொல்லுகிறார்கள், அந்த அளவுக்கு





அரசாங்கம் ஏன் அனுமதிக்கிறது என்று தான் நான் கேட்கிறேன். பாலன் அவர்கள் ரௌடி என்றால், எத்தனை பேர்கள் அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்படக்கூடியவர்கள் என்று நமது முதலமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள்? திரு. எம். ஸி. பாலன் அவர்கள் என்ன குற்றம் புரிந்தார்? நம்முடைய முதல் அமைச்சர் அவர்களை ஏன் அவர் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறார் என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்தி எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றது வாஸ்தவம் தான். மாநிலம் முழுவதும் அந்தக் கிளர்ச்சி இருந்ததும் வாஸ்தவம் தான். ஆனால், நாகர்கோவிலில் கிளர்ச்சி நடந்ததா? துப்பாக்கி பிரயோகம் நடந்ததா? கன்யாகுமரி மாவட்டத்தில் ஏதாவது கொடூரச் சம்பவம் நடந்ததா? இல்லை—பிறகு ஏன் பாலன் அவர்களைச் சிறைச்சாலையில் வைக்க வேண்டும்? நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஸ்காட் கிறிஸ்டியன் காலேஜில் போலீஸ் அதிகாரிகளும், அங்குள்ள மாவட்ட கலெக்டரும் சரியான முறையில் செயல்படவில்லை, துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதுபற்றியும், மற்ற சம்பவங்கள் பற்றியும் விசாரித்து அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். இந்தச் சம்பவங்களை வெளிக்கொண்டு வந்தது திரு. பாலன் அவர்களும், கன்யாகுமரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களும். அந்த அடிப்படையில் வைத்து, அங்கு இருக்கும் அதிகாரிகளுக்குப் பாலன் அவர்களைப் பிடிக்காத காரணத்தினால் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அங்கே டிஸ்டிரிக்ட் கிளப்பில் நடந்த ஒரு செயலை நான் இங்கே மனப்பூர்வமாகச் சொல்லுகிறேன். மாவட்ட அதிகாரிகள் சேர்ந்து அங்கே ஒரு கிளப் வைத்திருக்கிறார்கள். அந்த கிளப்பில் ஒரு கன்னிப் பெண்ணை கற்பழிக்கிற காட்சியைப் பார்த்து, அதைப் பாலன் அவர்கள் மக்களிடத்திலே எடுத்துச் சொன்ன காரணத்தினால் அங்கிருக்கிற அதிகாரிகள் அவர் மீது கோபம் கொண்டு அவரை ரௌடி லிஸ்டில் சேர்த்திருக்கிறார்கள். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிக்க வேண்டும். எதற்காக அவரைச் சிறைச் சாலையில் வைக்க வேண்டும்? அவர் என்ன குற்றம் செய்தார்? ஒரு வழக்கறிஞரை ஒரு பெரிய பணக்காரரை, தேர்தலில் நின்றவரை இது போன்று அனாவசியமாக ரௌடி லிஸ்டில் சேர்த்தால், அந்த லிஸ்டில் இடம் பெறக்கூடியவர்கள் இன்னும் எத்தனை பேர்கள்? ஆகையினால் நான் முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லுகிறேன், இந்தப் பட்டியலில் ரௌடி என்று சேர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தினரையும், மற்ற கட்சியினரையும் நீங்கள் சிறைச் சாலையில் வைக்கிறீர்கள். அது உங்களுடைய பண்பாட்டுக்கு விரோதம் என்று நான் கூறுகிறேன். இவைகளைப் புனர்பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கனம் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலத்தான் மாணவர்கள் 'டிபன்ஸ் ஆப் இண்டியா ரூல்ஸின்' கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிற நிலை, நான் முதல் அமைச்சர் அவர்களிடம் சொல்லிக் கொள்கிறேன் குருவியின் தலையில் பனங்காயை வைக்காதீர்கள். இளம் மாணவர்களை நல்ல வழிக்குக் கொண்டு வருவது கனம்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [3rd August 1965

முதல் அமைச்சர் அவர்களுடைய கடமையாகும். நேற்று கூட நான் ஒரு செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். ஒரு மாணவன் சிறைச்சாலையில் தற்கொலை செய்து கொண்டிருக்கிறான். காரணம், அவனுக்குச் சிறைச்சாலையின் கொடுமை பிடிக்கவில்லை. அந்தச் சூழ்நிலை பிடிக்கவில்லை. இம்மாதிரி தற்கொலையை மேலும் மேலும் வளர்க்காதீர்கள் என்று நான் கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தப் போவதில்லை என்று மாணவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அரசியல் தலைவர்களும் சொல்லியிருக்கிறார்கள். வேறு யாரும் இந்தி எதிர்ப்பு போரா[ட்டம்] நடத்தப்போவதாக சொல்லவில்லை. ஜனநாயக முறையில் [67-]ம் ஆண்டில் தேர்தல் வரும்பொழுது மக்கள் அன்று வாக்களிக்கத்தான் போகிறார்கள். அரசாங்கத்தின் கொள்கையை மக்கள் அப்பொழுது சிந்தித்துத்தான் செயலாற்றப் போகிறார்கள். ஆகவே நடைபெறாத சம்பவங்களை நடைபெறும் என்று கணக்குப் போட்டு, தப்புக் கணக்குப் போட்டு, பல மாண வர்களை இன்று கைது செய்து சிறைச்சாலையில் வைத்திருக்கிறீர் கள். ஒரு கல்லூரியில் ஒரு மாணவன் சிறைச்சாலையில் வைக்கப் பட்டால், அந்தக் கல்லூரியில் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய் கிறார்கள். வேலை நிறுத்தம் செய்தால், போலீஸார் அங்கு சென்று 'லா அண்டு ஆர்டர் மெயின்டைன்' செய்ய வேண்டிய நிலை ஏற் படும். தடியடிப் பிரயோகம் நடக்கும். எதிர்த்தரப்பிலிருந்து கல்வீச்சு ஏற்படும். இந்தப் பக்கத்திலிருந்து குண்டுகள் வீசப் படும். அந்தப் பக்கத்தில் சில பிணங்கள் விழும் என்ற நிலையைத் தான் வகுக்கிறோம். மாணவர்களை உடனடியாக இந்த அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இல்லாத போராட்டத்தைத் தூண்டிவிடுகின்ற முறையிலே தான் இந்த மாநில அரசாங்கம் மாணவர்களைச் சிறைச்சாலையில் வைக் கிறது என்று இங்கு நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அதே போலத்தான் இந்த சப்ளிமெண்டரி டிமாண்டில் பல திட்டங் களைச் சேர்த்திருக்கிறார்கள். குற்றச் சாட்டுகளைச் சொல்லி, கனம் முதல் அமைச்சர் அவர்கள் அவற்றிற்குப் பரிகாரம் தேட வேண்டும் என்று எதிர்பார்க்கும் போது, அவர்கள் செய்யும் நல்ல காரியங்களுக்கு அவர்களைப் பாராட்டாமல் இருப்பதற்கும் இல்லை. அவர்கள் பல உயர்நிலைப் பள்ளிகளைத் திறந்து வைத்திருக்கிறார் கள். அதற்கு அவர்களைப் பாராட்டுகிறேன்; நன்றியைத் தெரிவிக் கிறேன். ஆனால் அதே நேரத்திலே, எத்தனை மார்க்குகள் வாங்கி இருந்தாலும், 300, 400 மார்க்குகள் வாங்கியிருந்தாலும், பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள், அரிசன மாணவர்கள் உட்பட, பல மாணவர்கள் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் அவதிப் படுகிறார்கள். ஒரு மாணவனுக்குப் படிப்பதற்கே பணம் இல்லா மல் தவிக்கும்போது, தஞ்சைக்கும், திருச்சிக்கும், சென்னைக்கும் அலைந்து கொண்டு இருக்க வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. இதையெல்லாம் தீர்க்க பல கல்லூரிகளைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். 300 மார்க்குகள் வாங்கிய மாண வனும் இடம் கிடைக்காமல் திண்டாடும் காரணத்தினால், அரசாங்



3rd August 1965] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

போட்டோ, அல்லது அரசாங்கக் கல்லூரியில் இன்னும் இரண்டு மூன்று செக்ஷன்களைத் திறந்தோ, 300 மார்க்குகள் வாங்கிய யாருக்குமே இடம் இல்லாமல் போகும் நிலையைத் தவிர்க்க அரசாங்கம் முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரோடுகளைப் பற்றிப் பேசும்போது, தமிழ் நாட்டில் ரோடுகள் போடக் கரும்பு அபிவிருத்தி நிதியிலிருந்து போட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், சென்னை ராச்சிய அக்கௌண்ட் டண்ட்-ஜெனரல் ஏற்கனவே, பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டியில் ஒரு ரிபோர்ட் சமர்ப்பித்திருக்கிறார்கள். பெரும் பகுதி கரும்பு நிதியி லிருந்து இன்றையதினம் வரை உபயோகிக்கப் படவில்லை என்று. இப்பொழுது ரூ. 35 லட்சம் ரோடுகளுக்கு என்று சொல்லப் படுகிறது. அதிலும் அடையாளமாக ரூ. 25 லட்சம் ஒதுக்கியிருக் கிறார்கள். பல காலமாகச் சர்க்கரை ஆலைகளிலிருந்து இப்படி ரோடுகள் போட வேண்டும் என்று எஸ்டிமேட்டுகள் வந்திருக் கின்றன. சில எஸ்டிமேட்டுகள் சாங்ஷன் ஆகியிருக்கின்றன. அவை ஒன்றும் வேலை துவங்கவில்லை. இந்த வருஷம் 50 ஆயிரம் என்று எஸ்டிமேட்டு போட்டிருந்தால், அடுத்த வருஷம் அது சாங் ஷன் ஆகும் என்று சொன்னால், அதற்குள் அந்த எஸ்டிமேட் 75 ஆயிரம் ஆகிவிடும் நிலைமை தான் இருக்கிறது. ஆகவே, இப் பொழுதே எல்லா ரோடுகளையும் சாங்ஷன் செய்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். (மணியடிக்கப் பட்டது). ஆகவே, கனம் முதல் அமைச்சர் இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு மாணவர்களை விடுதலை செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, அரசியல் கைதிகளை அரசியல் விரோதத்தின் காரண மாக, அதிகாரிகளின் விரோதத்தின் காரணமாகச் சிறைச்சாலை களில் வைத்திருப்பது கொடுமை, அவர்களைக் கொடுமைப்படுத்த 'டிபன்ஸ் ஆப் இந்தியா ரூலை'ப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, இப்பொழுது அவர்களை விடமுடியாது என்றாலும், இந்தப் போராட்டம் 18-ம் தேதி நடக்கும் என்று முதல் அமைச்சர் கனவு கண்டுகொண்டு இருக்கிறார்கள்—அந்தக் காரணத்தினால், குறைந்த பட்சம் 20-ம் தேதிக்குப் பிறகாவது மாணவர்களையும், அரசியல் தலைவர்களையும் விடுதலை செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஜே. மாதா கவுடர்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்தத் துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து, ஒரு சில கருத் துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துணை மதிப்பீட்டிலே முக்கியமாக அதிகச் செலவுக்குக் காரணம் நம்முடைய அரசாங்க ஊழியர்களுக்கு அகவிலைப் படியை கூட்டிக் கொடுத்ததால்தான். முன்பெல்லாம், நம்முடைய என்.ஜி.ஓ.-க்கள் அமைச்சரிடத்தில் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் அளவில் தங்க ளுடைய பஞ்சப்படியும் உயர்த்தப்படவில்லை என்று குறைபாடு சொல்லி வந்தார்கள். சட்ட மன்றத்திலே உள்ள நாம் அத்தனை பேரும் அறிவோம். சென்ற ஜூலை மாதத்திலிருந்து, ரூ. 90 முதல்

[திரு. ஜே. மாதா கவுடர்] [3rd August 1965

ரூ. 109 வரை வாங்குகிறவர்களுக்கு, மத்திய சர்க்கார் ஊழியர்களை விட அதிகப்படியான பஞ்சப்படியைக் கொடுத்திருக்கிறோம். அந்தப் பெருமை கனம் முதல் அமைச்சரைச் சாரும். அதை எல்லோரும் நன்றாகக் கவனித்து, அரசாங்க ஊழியர்கள் எல்லாம் நம்முடைய அரசைப் போற்றுகிறார்கள். அதே நேரத்தில் மலைப் பிராந்தியத்திலே வேலை செய்யும் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்த வரை, ஒரு சிறிய ஏமாற்றத்தைத் தெரிவிக்கிறார்கள். அது பற்றி நான், ஹில் அலவன்ஸ் போன்றவை அதிகப்படுத்திக் கொடுக்கப்படுமா என்று ஒரு கேள்வி கேட்டபோது, மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் அது பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். ஹில் அலவன்ஸ் கொடுப்பதை ஓரளவு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்பதில் காரணம் இருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் சம்பந்தமாக முன்பு, அவர்களுடைய அடிப்படை சம்பளத்தில் 50 சதவிகிதம் ஹில் அலவன்ஸ் என்றாலும் இருந்தது. அது எம்.இ.ஆர்.-லேயே இருந்தது. இன்றைக்கு அவர்களுடைய சம்பள விகிதத்தை மாற்றியமைத்தபோது, அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவிகிதம் என்பது போய்விட்டது. அதைத் தயவு செய்து பரிசீலிக்க வேண்டும் என்று பல முறை கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக அதிகமாகச் செலவு செய்யப்படும் இனம் போலீஸ் படையின் எண்ணிக்கையை உயர்த்துவதினால், நம் மாநிலத்திலே எதற்காக உயர்த்துவது என்று சிலருடைய வாதமாக இருக்கிறது. மாநிலத்திலே போலீசே வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி இந்த மன்றத்திலே இருப்பவர்கள் மாத்திரம் சிந்திப்பது உசிதம் இல்லை. பொது மக்கள் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நான்கு ஐந்து மாதங்களுக்கு முன்பு நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி காரணமாக என்ன நடந்தது? பொது மக்கள் தெருவில் நடப்பதற்கு முடிந்ததா? மக்கள் வெளியிலே தலைகாட்ட முடியாமல் போனதற்குக் காரணம் பொது மக்களுக்குத் தெரியும். ஆகவேதான் அவர்கள் போலீஸ் அதிகமாக வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிப் போலீஸ் வேண்டுமென்று எல்லோருக்கும் தெரிந்திருந்தும், அரசியல் காரணத்தின் விளைவாக யாரை அடிக்க என்று கேட்கலாம். ஆனால் உண்மையாக வேண்டுமா, வேண்டாமா என்றால், அதற்கு 4, 5 மாதங்களுக்கு முன் நடந்த சம்பவங்களை நினைத்துப் பார்க்க வேண்டும். ஆனாலும் இந்த இனத்தில் போலீஸ்காரர்களை உயர்த்துவது பற்றி இருக்கிறதே அல்லாமல் அவர்களுடைய சம்பள உயர்வு பற்றி சற்றுச் சிந்தித்து ஆகவேண்டும். இன்றைக்கு போலீஸ் நமக்குப் பாதுகாப்புக் கொடுக்கும்போது 4, 5 மாதங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் போலீசுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய சீர்கேடான நிலைமையைத் தூண்டிவிட்டார்கள். யார் அதற்குக் காரணம்? அதற்குப் பொறுப்பு யார்? ரத்தக்கறை படிந்தது என்று நண்பர் மதியழகன் அவர்கள் ஆவேசமாகப் பேசினார்கள். யார் பொறுப்பு? ரத்தக் கறைக்கு யார் பொறுப்பு? யார், யார் என்று திருப்பித் திருப்பி



3rd August 1965] [திரு. ஜே. மாதா கவுடர்]

அமைச்சர் அவர்களைக் கேட்பானேன்? நான் திருப்பிச் சொல்லுவேன், இதெல்லாம் எதிர்க் கட்சித் தூண்டுதலில் நடந்தன, ரத்தக் கறைக்கு அவர்கள் காரணம். ரத்தக் கறைக்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டும் என்று அமைச்சரைக் கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது? சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த மாதிரி நிலைமை மறுபடியும் நம்முடைய நாட்டில் வரவேண்டும் என்று எதிர்க் கட்சிக்காரர்கள், நண்பர் திரு. மதியழகன் விரும்புகிறார்களா? இன்றைக்கு மாணவர்களைச் சிறையில் வைப்பது சரியில்லை என்று எடுத்துக் கூறுகிறார்கள். மாணவர்களைத் தூண்டும் போது எப்படி இருந்தது? ‘இந்தியைத் திணித்து விட்டார்கள், அரசாங்கம் இந்தியைத் திணிக்கிறது, அரசியல் ரீதியில் எவ்வளவோ பார்த்தோம் ஆனால் முடியவில்லை, சர்க்காரும் கேட்க மாட்டேன் என்கிறார்கள், தேர்தலிலும் பார்த்தோம், மக்களும் எங்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லை, மாணவர்களே, நீங்கள்தான் துணை புரிகிறவர்கள்’ என்று மாணவர்களைக் கிள்ளி விட்ட நேரத்தில் எப்படி இருந்தது? இப்பொழுது நண்பர் திரு மதியழகன் பேசுவதிலிருந்து அச்சம் ஏற்படுகிறது. ஆகஸ்டு 15-ம் தேதி அல்லது வேறு ஒரு தினத்தில் ஏதாவது செய்வார்களோ என்று அவர்களைப் பாதுகாப்புக் கைதியாக வைப்பதில் என்ன தவறு? அவர்கள் வெளியே இருந்து, ஏதாவது நடக்க வேண்டும் என்று நண்பர் திரு. மதியழகன் நினைக்கிறார்களா? அதைச் சிந்தித்துப் பார்த்தால் 4, 5 மாதங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சியினை மனதில் கொண்டு, அப்படிப்பட்ட நிலைமை வந்துவிடாமல் தடுக்க, என்னென்ன பாதுகாப்புக்கள் அவசியமோ அவையெல்லாம் செய்துதானே ஆக வேண்டும். யாராக இருந்தாலும், மாணவராக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, கைது செய்வது நியாயமானதே. ஆகவே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் தைரியத்துடன், இது வரை தைரியத்துடன் நடந்துகொண்டு காரியங்களைச் செய்தது போல, அதே முறையில் இன்னமும் நடந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். “வக்கீல்களைப் பிடித்துப் போட்டிருக்கிறீர்கள், டாக்டர்களைப் பிடித்துப் போட்டிருக்கிறீர்கள், தேர்தலில் நிற்பவர்களையெல்லாம் பிடித்துப் போட்டிருக்கிறீர்கள்” என்று கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். தேர்தலில் யார் வேண்டுமானாலும் நிற்கலாம். ரௌடிகளும் நிற்கலாம், நல்லவர்களும் நிற்கலாம். வோட்டுக் கொடுப்பது மக்களுடைய இஷ்டத்தைப் பொறுத்தது. அதை வைத்துக்கொண்டு “அவர்களை எப்படி நீங்கள் கைது செய்து வைக்கலாம்?” என்று கேட்பதில் எந்த விதமான அர்த்தமும் இல்லை. கிட்டத்தட்ட இருபது கோடி ரூபாய் அளவிலே துணை மானியக் கோரிக்கை கேட்டிருப்பதைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன். சிறு தொழில்களுக்கும் அதிகமாக உற்சாகம் கொடுப்பதற்கு அடுத்த துணை மதிப்பீட்டிலாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். 11-30 a.m.

* புலவர் கா. கோவிந்தன்: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கல்வித் துறையில் கல்வி இயக்குநர் அலுவலகத்தை விரிவுபடுத்துவதற்காக ஒரு மானியத்

[புலவர் கா. கோவிந்தன்] [3rd August 1965

கடமைப்பட்டிருக்கிறேன். அதை வரவேற்று நாடு போற்றும் என்றாலும், இந்தக் கருத்தை 1962-ம் ஆண்டில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வற்புறுத்தினார்கள்; மதிப்பீட்டுக் குழு எடுத்துக் கூறின கருத்தையும் எடுத்துக் கூறினார்கள். ஆனால், அப்போது நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. "அது 1962-ல் கூறியது, இப்பொழுது 1965-ல் காலம் மாறியிருக்கிறது. ஆகவே இப்பொழுது தேவை இருக்கிறது" என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறக்கூடும். ஆனால், 1965 மார்ச்சில் நடைபெற்ற விவாதத்தின்போதும் அதே கருத்து, அதே காரணங்களைக் காட்டி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், விரிவு படுத்த வேண்டினார்கள். ஆனால் அப்பொழுதும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. "எல்லாம் இணைக்கப் பட்டது (இன்டெக்ரேட்). ஆரம்பக் கல்வி வேறு, உயர்நிலைக் கல்வி வேறு, கல்லூரிக் கல்வி வேறு அல்ல; ஒன்றோடொன்று இணைப்பானது, கீழ் மட்டத்திலிருந்து எம்.ஏ. வரையில் 'இன்டெக்ரேஷன்' இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் கல்வித் துறை அமைக்கப்பட்டிருக்கிறது" என்று கூறி அதை அன்று மறுத்தார்கள். மார்ச் 11-ம் தேதி கொண்டிருந்த கருத்து, மார்ச் திங்கள் முடிவதற்குள் எப்படி மாற்றம் அடைந்தது? மனமாற்றம் எப்படி ஏற்பட்டது? கல்வித் துறையிலே இப்படிப்பட்ட மாறுதல்களை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் எப்படிச் செய்தார்கள் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த மாற்றத்திலே கூட, கல்லூரிக் கல்வியையும், உயர்நிலைக் கல்வியையும், ஆரம்பக் கல்வியையும் வெவ்வேறாகப் பிரிக்க வேண்டும் என்ற கருத்து கூறப்பட்டது. முதல் அமைச்சர் அவர்கள் அதைச் செயலில் கொண்டுவரும்போது, கல்லூரிக் கல்வியைத் தனியாகவும் உயர்நிலைக் கல்வியையும் ஆரம்பக் கல்வியையும் இரண்டையும் ஒன்றாக இணைத்து அதைத் தனியாகவும் பிரித்து, ஒவ்வொரு இயக்குநரிடம் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் குறைதானே என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய கல்வித் துறையில் அப்பொழுது இயக்குநராக இருந்தவரைப்பற்றி இந்த மன்றத்திலே குறிப்பிட்டுப் பேசுகிறபோது, அவர் தம்முடைய கடமையை ஆற்றாமல் வேறு பல காரியங்கள் செய்கிறார்கள் என்று சொன்ன நேரத்தில், முதல் அமைச்சர் அவர்கள் அந்த வாதத்தை ஏற்றுக்கொண்டு அப்போதே நடவடிக்கை எடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அப்பொழுது மறுத்து விட்டார். அப்பொழுது கூறிய நேரத்தில், "கல்வி இலாகா இயக்குநரைச் சில கனம் உறுப்பினர்களுக்குப் பிடிப்பதில்லை, அதனால்தான் இப்படி அப்படி என்று சொல்கிறார்கள். கல்விக்காக சிறப்பாக அற்புதமாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் அவரைப் பற்றி ஏதோ கோபதாபத்தை வைத்துக்கொண்டு ஒரேயடியாகக் குற்றங்கூறுவது சரியல்ல, நல்லது அல்ல" என்று சொன்னார்கள். அப்படி அற்புதமாகவும் சிறப்பாகவும் பாடுபடுகிற ஒரு கல்வி அதிகாரியை இப்பொழுது செயலற்றவராக, அந்தத் துறையில் வெறும் அட்மினிஸ்ட்ரேடிவ் அதிகாரியாக மட்டிலும் போட்டி ...ப்பதன் நோக்கம் என்ன? அவர்மீது ...



3rd August 1965] [புலவர் கா. கோவிந்தன்]

முதல் அமைச்சருக்கு இருக்கிறதா என்பதைப்பற்றி இந்த மன்றம் அறியக் காத்திருக்கிறது என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைக் கூறுவதால் அந்த இயக்குநர் அப்பொழுது எங்களுக்கு பகைவராக இருந்தார் என்றோ, இப்பொழுது எங்களுக்கு நண்பராகிவிட்டார் என்றோ பொருள் அல்ல. அவர் தவறு செய்தால் அந்தத் தவறு நாட்டைப் பாதிக்கும் என்ற காரணத்தினால் அந்தத் தவற்றை அப்போது எடுத்துக் கூறினோம். இப்போதும் அப்படிப் பட்ட நல்லவரை, அவருக்குப் பயிற்சி உள்ள ஆரம்பக் கல்வி, உயர்நிலைக் கல்விப் பொறுப்பில் வைக்காமல் வெறும் அதிகாரியாக மட்டும் அமைத்திருப்பது நல்லதுதானா, இதற்கு திரை மறைவில் நாடகம் ஏதாவது நடந்திருக்கிறதா என்று முதல் அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு, மதுரையில் நடுவர் மன்றம் அமைப்பதற்கு மானியம் கோரியிருக்கிறார்கள். அதிகாரிகள் தவறு செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் மட்டும் போதாது. திருவண்ணாமலையில் முன்னாள் முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் ஒரு கருத்து தெரிவித்தார்கள். அவர் ஏதோ எதிர்க்கட்சி மேடையிலே உட்கார்ந்திருப்பது போலவும், இப்பொழுது நாட்டில் ஏதோ மாறுபட்ட கட்சி ஆட்சியில் இருப்பது போலவும் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். "செல்வாக்கு உள்ளவர்கள் தலையிடுவதால் இப்பொழுது அதிகாரிகள் சட்டத்திற்குப் புறம்பாகக்கூடக் காரியங்கள் செய்கிறார்கள், அது என்னுடைய காலத்திலேகூட இருந்தது என்றாலும், முளையிலேயே கிள்ளிப் போட்டுக்கொண்டு வந்தேன், இப்பொழுது அதிகமாகப் போய்விட்டது" என்ற கருத்தைச் சொன்னார்கள். அதிலே ஒரு உண்மை இருக்கிறது. அந்தச் செல்வாக்கு உள்ளவர்கள் யார்? ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள்தான். இப்படிப்பட்டவர்கள் அதிகாரிகளின் அலுவல்களில் தலையிட்டு, அலுவலகத்தையே கெடுக்கிறார்கள் என்பதற்கு நான் திட்டவட்டமாகச் சான்று கூற முடியும்.

கனம் உதவி சபாநாயகர்: இன்னும் ஒரு நிமிஷத்தில் உரையை முடித்துவிட வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன்: ஒன்றே ஒன்றைக் கூறி முடிக்கின்றேன். செய்யாறு உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் மீது குற்றச்சாட்டு இருந்தது. அந்தக் குற்றச்சாட்டு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. விசாரணை நடத்தின அதிகாரி அவர் மீது குற்றஞ்சாட்டி சர்க்காருக்கு அனுப்பினார். அதிகாரி அதை ஒப்புக் கொண்டார். அவர் மீது தவறு இருக்கிறது. சர்க்காருக்கு அனுப்பிவிட்டோம் என்ற காரணத்தால் அவர் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல், துணை இருந்த ஆசிரியர்களை மாற்றி விட்டார்கள். அந்த மாற்றம் வேண்டாம் என்ற கருத்தில் இந்த மன்றத்தில் இருக்கும் அங்கத்தினர்கள், குறிப்பாக என்னுடைய தொகுதியில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த ...மச்சக்கிரன் அவர்களும் மற்றவர்களும் குறுக்கிட்டு அந்த

இயக்குநரிடத்திலும், டிவிஷனல் இன்ஸ்பெக்டரிடத்திலும் முறையிட்டு அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் போகவே முதல் அமைச்சர் அவர்களிடத்தில் முறையிட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை. கடைசியாக, வற்புறுத்தல் அதிகமாகவே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தலையிட்டு அதை மாற்றியிருக்கிறார்கள். அதை நான் இப்பொழுது இங்கே திட்டவட்டமாக முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். அந்த ஆசிரியர் மீது எடுத்த நடவடிக்கை பற்றிய அந்த அறிக்கையை டி.ஈ.ஓ. அவர்கள் விசாரித்த விசாரணை அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்தால் அவர்கள் எவ்வளவு தவறு செய்திருக்கிறார்கள் என்று புரியும். அதை விட்டுவிட்டு அதிகாரி செய்த உத்தரவை அரசாங்கம் தலையிட்டு மாற்றுவது என்றால் நாட்டிலே சர்க்கார் நடக்குமா, நாட்டிலே அலுவல் நல்ல முறையில் நடைபெறுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கைகளை மனப்பூர்வமாக ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன். புதுப் பணிகளுக்காகத்தான் அதிகமாகப் பண ஒதுக்கத்தைக் கேட்டிருக்கிறார்கள். பணம் இருக்கிறதோ இல்லையோ, புதுப் பணிகள் தாமதப்படக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் விருவிருப்போடு வேலை செய்யவேண்டும் என்ற அளவில் ஊக்கத்தோடு இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக இந்தத் துணை மதிப்பீடு அமைந்திருக்கிறது. ஆனால், அதே சமயத்தில் சில இலாக்காக்களைப் பார்க்கும்போது, வரவுக்கும் செலவிற்கும் கணக்கே இல்லாமல், பணத்தை ஒதுக்கி வைத்துக் கொண்டு, மிச்சப்படுவதைக் கூட நோக்கிலே சொல்லாமல் வீணாக்கப்படுவதைப் பார்க்கிறோம். அதையும்கூடக் கண்காணித்து, அப்படிப்பட்ட இலாக்காக்களுக்குச் சற்றுச் சுறுசுறுப்பைக் கொடுத்து ஒழுங்காக, உண்மையாக எவ்வளவு செலவு தேவையோ அந்த அளவிற்குக் கேளுங்கள், பணம் ஒதுக்குவோம் என்று சொல்வது மிக மிகச் சிறந்ததாக இருக்கும். ஏனென்றால், சாதாரணமாகவே, கணக்கிட்டு, கறுக்காக இவ்வளவுதான் செலவழிக்கப்படும் என்று சொல்வது சுலபமான காரியம் அல்ல. இருந்தாலும், வேரியேஷன்ஸ் 5 சத வீதம், 10 சத வீதம் இருந்தால் பரவாயில்லை; 100-க்கு 100 பர்ஸெண்ட் சில இனங்களில் வேரியேஷன்ஸ் இருக்கிறது. ஒதுக்கிய பணத்தைக் கொஞ்சமும் செலவழிக்காமல் அப்படியே வைத்துக் கொண்டிருப்பதையும் பார்க்கிறோம். அம்மாதிரியான சிறு தவறுகள் இந்த நிதி இலாகாவில் புகாமல் இருப்பதற்கும் மிகக் கண்காணிப்போடு இருப்பது மிக அவசியம்.

உப மானியக் கோரிக்கையில் நல்ல அம்சங்களைப் பார்க்கிறோம். சேதுசமுத்திரம் திட்டம், கல்பாக்கம் அணுசக்தி மின்சாரத் திட்டம் அவற்றையெல்லாம் துரிதப்படுத்துவதற்காக முதலிலே பணத்தை ஒதுக்கி வேலைகளைத் துவக்கி வைத்திருக்கிறார்கள். இதுவும் மிக மிகப் பாராட்டத் தக்கது. அதுவும் கல்பாக்கம் அணுசக்தி நிலையத்தை வெளிநாட்டு உதவி இல்லாமல் வெளிநாட்டு





அறிஞர்கள் உதவி இல்லாமல், நம் நாட்டு இன்ஜினீர்களை வைத்து அதை எப்படியும் வெற்றிகரமாகக் கட்டி முடிக்க வேண்டும் என்று யோசித்திருக்கிறோம். அதற்குத் தகுந்த இடம் தமிழ்நாடுதான். அது வெற்றிகரமாக நடக்க வேண்டும் என்று அத்தனை பேரும் ஆசி கூறுவதே அவசியம் என்று நினைக்கிறேன்.

ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸுக்காக சில தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். ஸ்பெஷல் ஆர்ம்டு போலீசில் வேலை செய்கிற சில பேருக்கு ஆவடியில் க்வார்ட்டர்ஸ் கொடுத்திருக்கிறார்கள். மற்றவர்கள் வெளியிடங்களில் இருக்கிறார்கள். ஆவடியில் க்வார்டர்ஸில் இல்லாமல் வேறு இடங்களில் குடியிருந்தால் வீட்டு வாடகை கிடையாது என்று கூறுகிறார்கள். அங்கு இடம் இல்லாமல் சென்னை நகரம் போன்ற இடங்களில் இருந்தால் வாடகை கிடையாது என்று கூறுகிறார்கள். ஆவடியில் போதுமான க்வார்டர்ஸ் இல்லாததன் காரணமாகத்தான் ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸைச் சேர்ந்தவர்கள் வெளியே குடியிருக்கவேண்டியிருக்கிறது. அந்தக் குறையைப் பல்லாண்டுகளாக நாங்கள் எடுத்துச் சொல்லிக்கொண்டே வருகிறோம். கனம் முதலமைச்சர் அவர்கள் அடுத்த முறையாவது அதையும் ஒரு நியூ சர்வீஸாக எடுத்து, அதற்கு வேண்டிய நிதியை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். க்வார்ட்டர்ஸும் கொடுக்காமல், ஆவடியிலும் வீடு கொடுக்காமல், சென்னை நகரத்தில் வீடு எடுத்துக்கொண்டிருந்தால், எஸ்.ஏ.பி.-இல் வேலை செய்கிற சிப்பந்திகளுக்கு வீட்டு வாடகை கொடுக்கக்கூடிய நிலையைக் கொண்டுவருவது மிக மிக அவசியம் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

நீதி நிர்வாகத் துறையில் கண்காணிப்புக்காக ஒரு சில ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறோம். நம்முடைய உயர் நீதி மன்றத்தில் ஒரு லிஃப்டு தேவை என்று நான் ஏழு வருஷங்களாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். லேட் ஹவுஸுக்குக் கீழே கூட வக்கீல்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். உயர் நீதி மன்ற மாடிப்படிகளில் வயதான வக்கீல்கள் ஏறுவதற்குள் மூட்டு ஒடிந்துவிடும் போல் இருக்கிறது. சில வயதான வக்கீல்கள் மாடிப்படி ஏறுவதற்குள் இருதயமே நின்றுவிடுமோ என்று பயப்படத்தக்க அளவில் கஷ்டப்படுகிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்**: லிஃப்ட் வேண்டும் என்று வயதானவர்கள் கேட்கலாம். ஆனால், இளைஞர்கள் கேட்கக் கூடாது (சிரிப்பு).

* **திருமதி டி. என். அனந்தநாயகி**: வயதானவர்களுக்காகத்தான் வக்காலத்து வாங்கிப் பேசுகிறேன். வயதானவர்கள் மாடிப்படி ஏறும்போது மூச்சுத் திணறுகிறது. இருதயமே நின்றுவிடுமோ என்று பயப்படத்தக்க நிலை இருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இரக்க சிந்தை உள்ளவர்கள். அவர்கள் இதை எப்படியாவது கவனித்து, எங்களுக்கு உயர் நீதி மன்றத்தில் லிஃப்ட் ஒன்றை அடுத்த வருஷத்திற்குள்ளாவது அமைத்துக் கொடுக்க

நடவடிக்கை எடுப்பார்களானால், உயர்நீதி மன்றத்திற்கு வருகிற அத்தனை பேரும் முதலமைச்சர் அவர்களை என்றென்றைக்கும் வாழ்த்திக் கொண்டிருப்போம்.

கல்வித் துறைக்கு வரும்போது, ஒரு நல்ல மாறுதலை மிகத் தீவிரமாக நம்முடைய கனம் முதலமைச்சர் அவர்கள் செய்ததைக் குறித்து நான் முழு மனதோடு பாராட்டுகின்றேன். எந்தத் துறையாக இருந்தாலும் வேலை அதிகரித்துக் கொண்டு வரும் போது, அதைப் பங்கு போட்டுப் பல பேர் நல்ல முறையில் பணியாற்றக்கூடிய வாய்ப்புக்களைக் கொடுப்பது ஜனநாயகத்திற்கு மிகவும் அவசியம். ஜனநாயகம் தேவை என்று சொல்கிறவர்கள் கூட மறைமுகமாக எதிர்ப்பதைப் பார்க்கும்போது மிகவும் வருத்தமாக இருந்தது. ஒரு நல்ல காரியம் செய்யும்போது பாராட்ட வேண்டாமா அந்தக் கட்சி? அந்த முறையிலே நல்ல காரியத்தை தைரியமாக கனம் கல்வி அமைச்சர் செய்ததை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். இன்னும் ஆரம்பக் கல்விக்காக தனியாகவே ஒரு டைரெக்டரைப் போட வேண்டும். இன்றைக்கு ஆயிரக்கணக்கான பள்ளிக் கூடங்கள் துவங்கப்பட்டிருக்கின்றன. கவனக் குறைவினால் கூடப் பல தவறுகள் வந்துவிடக் கூடும். ஆகவே வேலைப் பளுவைப் பிரித்து அதிகாரிகளைப் போட்டுக் கொடுப்பதன் மூலமாகத்தான் பலருடைய அநுபவத்தையும், காலத்தையும், கவனத்தையும் செலுத்த வைத்து நம்முடைய திட்டங்களில் நாம் முழு வெற்றியைக் காண முடியும். ஆகவே ஆரம்பக் கல்வியைப் பிரித்து அதற்காகத் தனியாகவே ஒரு டைரெக்டரைப்போடுவது நல்லது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுபோல நகர சபையில் இருந்து ஆரம்பக் கல்வியை அரசாங்கமே எடுத்துக் கொண்டால் நல்லது. இன்றைய தினம் நகர சபைகள் நடத்துகிற ஆரம்பப் பாடசாலைகளில் தரமே போய்விட்டது. ஆசிரியரை மாற்றுவதும், யார் யாருக்காக தேர்தலில் வேலை செய்தார்கள் என்று கண்காணிப்பதும், தேர்தலுக்கு யாரை எப்படிப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று திட்டமிடுவதும், பாடத்தைத் தவிர மற்ற எல்லாம் இருக்கிறது. ஆகவே ஸ்தல ஸ்தாபனங்களில் இருந்து ஆரம்பக் கல்வியை எடுத்து அரசாங்கமே நடத்துவது அவசியம் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறிகளை எடுத்துக்கொண்டால் இன்றைய தினம் அதிகமாக அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிற ப்ளீடிங் மெட்ராஸ் ரகத்துணியைத் தயாரிப்பவர்கள் என்னுடைய மாவட்டத்தில்தான் இருக்கிறார்கள். அங்குள்ள கைத்தறி வியாபாரிகளுக்கு வரிச்சலுகை கொடுத்தால் நன்றாக இருக்கும். சாயம் வாங்கி நெசவாளர்களுக்கு எல்லாம் கொடுக்கிறார்கள். திருப்பிக் கொடுத்தால் போயிற்று. இல்லை என்றால் வராத கணக்கில்தான் போட வேண்டியிருக்கிறது. ஆகவே வரி விலக்காவது கொடுத்தால் அவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வார்கள்.





அடுத்து வட சென்னையில் ஒரு பெண் கல்லூரியை ஆரம்பித்திருக்கிறார்கள். இடமில்லாத காரணத்தினால் இந்த ஆண்டு பி.ஏ. வகுப்பை ஆரம்பிக்க முடியவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மற்ற இடங்களில் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு இரண்டு லட்சம், மூன்று லட்சம், ஐந்து லட்சம் என்று வசூலித்திருக்கிறார்கள். வடசென்னை உறுப்பினர் ஒரு பைசா கூட வசூல் செய்து கொடுக்கவில்லை. அப்படி இருக்க அரசாங்கம் கட்டடம் கட்டித் தரவில்லை என்பதாகக் குற்றம் சாட்டுவதற்கு நியாயமே இல்லை. (சிரிப்பு)

**திருமதி டி. என். அனந்தநாயகி:** சர்வே நம்பர் 4310, 4319 உள்ள நிலத்தை கட்டடத்திற்காக கனம் அமைச்சர் அவர்கள் அக்வயர் பண்ணிக்கொடுக்கட்டும். கட்டடத்திற்கு நானே எப்படியாவது பணம் சேர்த்துக் கொடுத்துவிடுகிறேன். இந்த சர்வே நம்பர்கள் கொண்ட நிலம் இந்தக் கல்லூரியின் கட்டடம் கட்டப்படுவதற்கு ஏற்ற இடம். இதைக் கூட மின் இலாகா கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. வேறு யாருக்கும் கொடுக்காமல் இந்தப் பெண் கல்லூரிக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். இடத்தைக் கொடுத்து விட்டால் வட சென்னை மக்கள் கட்டடத்திற்குச் செலவு என்ன ஆனாலும் அதைக் கொடுத்துவிடுவார்கள். அதற்கு நாங்கள் தயாராய் இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பேசின் ப்ரிட்ஜ் பாலத்தை அகலப்படுத்திப் புதுப்பித்துக் கொடுக்கவேண்டும். இன்றைக்கு அது 17 அடி அகலம் உடையதாகத்தான் இருக்கிறது. இரண்டு லாரிகள் வந்தால் நடுவில் உள்ள மனிதன் நசுங்கிப் போக வேண்டியதுதான். ஆந்திராவுடன் இணைக்கிற பெரிய வர்த்தகத் தொடர்புள்ள பாலமாக அது இருக்கிறது. ஆகவே இதில் கவனம் செலுத்தி துணை மதிப்பீட்டிலோ, வரவுசெலவுத் திட்டத்திலோ சேர்த்து அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, வெட்டுப் பிரேரணையை யொட்டி ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் வைக்க ஆசைப்படுகிறேன். துணை மானியக் கோரிக்கைக்குக் கொடுக்கப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கையில் ஏற்கனவே இருக்கிற போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு அலவன்சு வழங்கப்பட்டதினால் ஏற்பட்டுள்ள செலவும் புதியதாகப் படைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருப்பதனால் ஏற்பட்டுள்ள செலவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக கண்ணீர்ப் புகை வீசும் 14 படைகளைப் புதியதாக ஏற்படுத்த உப மானியக் கோரிக்கையில் தொகை கோரப்பட்டிருக்கிறது. அது உண்டாக்க, [illegible] 48.5 அளவுக்கு புதியதாக

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [3rd August 1965

கூடுதலாக உபமானியக் கோரிக்கை கோரப்பட்டிருக்கிறது. இப்படிப் பார்க்கிறபோது போலீசாரின் எண்ணிக்கையை உயர்த்துவதுதான் க்ஷேமநல அரசாங்கத்தின் செயலாக இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது நாம் க்ஷேமநல ராஜ்யத்தில் இருந்து நழுவி போலீஸ் ராஜ்யமாக ஆக்கிக் கொண்டு வருகிறோம் என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ஆடுகளுக்கு அம்மை நோய் வந்துவிட்டால் ஆடுகளைக் காப்பாற்ற முடியாமல் போகிறது. ஏராளமான ஆடுகள் இறந்து போவதையும் நாம் பார்க்கிறோம். அத்தகைய அம்மை நோயைத் தடுப்பதற்கு அமெரிக்காவின் வேளாண்மைத் துறையினரின் உதவியுடன் ராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் ஒரு சிறந்த அம்மைப்பாலைக் கண்டு பிடிப்பதற்காக ஒரு திட்டத்தை ஏற்படுத்துவதற்கு 2,56,384 ரூபாய் கோரியிருக்கிறார்கள். இத்தகைய ஆராய்ச்சி நிலையத்திற்கு இது போதுமானதாக இருக்குமா என்று பார்த்தால் நிச்சயமாகப் போதாது. இன்றைக்கு அந்த நோயினால் பெரும்பாலான கால்நடைகள் இறக்கின்ற நிலையில் இருக்கின்றன. ஆகவே இந்தக் கால்நடைகளைக் காப்பாற்றுவதற்கான ஆராய்ச்சி விரிவான முறையில் அதிகமாக நடைபெறவேண்டும். அதற்காக அதிகமாகப் பணமும் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, சேலம் மாவட்டத்தை இரண்டாக, அதாவது சேலம், தர்மபுரி என்று பிரித்திருப்பதன் காரணமாக, புதியதாக அமைக்கப்படுகின்ற தர்மபுரி மாவட்ட தரைப்படங்கள் தயாரிப்பது, இன்னும் இதுபோன்ற வேலைகளுக்காக 69,400 ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அக்டோபர் 2-ஆம் தேதி இந்த மாவட்டம் அமைய இருக்கிறது. அமைய இருக்கின்ற மாவட்டத்திற்கு தர்மபுரி மாவட்டம் என்றே பெயர் வைக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்வதோடு, அத்தகைய மாவட்டம் எந்த நிலையில் உண்டாகி இருக்கிறது என்கிற ஆராய்ச்சியில் இறங்க முற்படவில்லை என்றாலும், புதியதாக இந்த மாவட்டத்தை அமைக்க ஆட்சியாளர்கள் முன் வந்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

இந்த மாவட்டத்தின் தலைநகரம் எங்கு அமைகிறதோ அந்த இடத்திலேயே ஜில்லா நீதி மன்றத்தையும் ஏற்படுத்த வேண்டும். அமைய இருக்கிற மாவட்டத் தலைநகரத்திலேயே ஜில்லா நீதிமன்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதாக உயர்நீதி மன்ற நீதிபதிகள் எல்லாம் ஒரு முகமாக அபிப்பிராயம் தெரிவித்திருந்தும் நமது முதல் அமைச்சர் அவர்கள் அதை கிருஷ்ணகிரியில் ஏன் அமைக்கக் கூடாது என்பதாக அபிப்பிராயம் கேட்டிருப்பதாக அறிகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதுவரைக்கும் ஹைக்கோர்ட்டார் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.



3rd August 1965]

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** அவர்கள் தர்மபுரியில்தான் வைக்கவேண்டுமென்று சொன்னால் அந்த இடத்திலேயே ஜில்லா நீதி மன்றத்தை ஏற்படுத்த முதலமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் ஏற்கனவே தர்மபுரியில் இருந்து வருகிற வழக்கறிஞர்களிடமும், கிருஷ்ணகிரியில் இருந்து வருகிற வழக்கறிஞர்களிடமும், உயர்நீதி மன்றத்தார் எந்த இடத்தில் ஏற்படுத்தலாம் என்று அபிப்பிராயப்படுகிறார்களோ அந்த இடத்தில் ஏற்படுத்த சம்மதிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** மிக்க நன்றி.

**திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவாதத்தில் இருக்கக் கூடிய துணை மானியக் கோரிக்கை மீது சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயம் சம்பந்தமாக எடுத்துக் கொண்டோமானால் தஞ்சை ஜில்லாவில் இந்த வருஷம் தண்ணீர் இல்லாமல் குறுவை சாகுபடி பெருமளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்றால் மேட்டூர் அணையில் 19, 20 அடி தண்ணீர் இருக்கிறபோதே அணையைத் திறந்துவிட்ட காரணத்தினால் விவசாயிகள் தண்ணீர் வந்துவிட்டது என்று சாகுபடி வேலையை ஆரம்பித்துவிட்டார்கள். அப்புறம் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் குறுவை நாற்றுகள் எல்லாம் பாழ்பட்டுப் போய்விட்டன. குறுவை நாற்றங்காலுக்குப் பாய்ச்ச போதுமான தண்ணீர் இல்லாமல், நாற்றுகள் தீய்ந்து, காய்ந்து போனதால் ஏராள சேதம் ஏற்பட்டிருக்கிறது. மேட்டூர் அணையில் தண்ணீர் அதிகமாகத் தேங்கிய பிறகு திறந்து விட்டிருந்தால் இந்த அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். மைசூர் அரசாங்கத்திடமிருந்து மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் தண்ணீர் கேட்டதாகவும் அந்தத் தண்ணீர் காலங்கடந்து கிடைத்ததாகவும் நாங்கள் பத்திரிகையிலே செய்தியைப் பார்த்தோம். 600 கோடி கன அடி தண்ணீர் மைசூரிலிருந்து கொடுத்ததாக எழுதியிருந்தார்கள். இந்த மாதிரிக் கேட்டு வாங்கக்கூடிய தண்ணீரை காலத்திலே கேட்டு வாங்கிக் கொடுத்திருந்தால் இந்த அளவுக்குச் சேதம் ஏற்பட்டிருக்காது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தஞ்சை மாவட்டத்தில் போதிய அளவுக்குப் பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்தாகவேண்டும். மழைக் காலங்களிலே வெள்ளம் வந்து விடுகிறது என்று சொன்னாலும் கூட, மழையில்லாத காலங்களில் தண்ணீர் கிடைக்காத நிலைமை இருந்து வருகிறது. தண்ணீர் திறந்துவிடப்பட்ட உடனேயே முதல் மடையில் இருக்கிறவர்கள் அவ்வளவு தண்ணீரையும் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். இதனால் கடை மடையிலே இருக்கக்கூடிய, அதாவது திருத்துறைப் பூண்டி, மன்னார்குடி போன்ற இடங்களில் இருக்கக்கூடிய, விவசாயிகளுக்குத் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு விடுகிறது என்பதையும் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்

[திரு. ஆ. கு. சுப்பையா] [3rd August 1965

அடுத்தபடியாக, இதுவரையில் எல்லாக் கிராமங்களிலேயும் உணவு தானியக் கிடங்குகள் கட்டப்பட்டிருக்கின்றன. இப்பொழுது விவசாயிகளுடைய தானியத்திற்கு விலை நிர்ணயம் செய்து விட்டபடியால், அவர்கள் நியாயமான விலைக்கு விற்பனை செய்துவிடுகிறார்கள். ஆகவே, கட்டப்பட்டிருக்கிற உணவு தானியக் கிடங்குகள் சும்மா இருக்கின்றன. இதை வேறு ஏதாவது காரியங்களுக்காக உபயோகப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இப்பொழுது உரம் வைப்பதற்காக கிடங்குகள் கட்டப்போகிறார்கள். இந்த உணவு தானியங்களுக்காகக் கட்டப்பட்ட கிடங்குகள் சும்மாக் கிடப்பதால் உரத்திற்கான கிடங்குகளாக அவைகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மூன்று போகங்கள் சாகுபடி செய்யக்கூடிய நிலைமை ஏற்படுமென்று சொன்னார்கள். இந்த ஆண்டு ஒரு போகம்கூடச் சாகுபடி செய்யக்கூடிய நிலைமை இல்லை. இப்பொழுது தண்ணீர் பற்றுக்குறை இருப்பதால் அதற்கு வேண்டிய பரிகாரம் தேட வேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI A. KUNJAN NADAR: Mr. Deputy Speaker, Sir, I wish to point out one or two points regarding the educational problem in Kanyakumari district. Before doing so, I congratulate the Government and particularly the Hon. Chief Minister for taking the very bold step of bifurcating the educational administration and making things all right.

Sir, in Kanyakumari, we have ever so many problems created after our merger with the Madras State. One of the latest problems has been created as a result of the process of the so-called regularisation of services by the local District Educational Officers there. About 800 teachers were appointed some seven years back. They were in continuous service since then. But now applications have been called for and they are ousted and reappointed. That means that after seven years of service, their services are dispensed with and they are reappointed. As a result of this, many teachers who were in the secondary grade, are now reverted to the primary grade. In Travancore-Cochin, our erstwhile State, 35 marks in English were the minimum marks for passing S.S.L.C. and for entering the Public Service. In Madras the minimum is 40 marks in English. When our district was integrated, a hue and cry arose there. Then, a Government order was passed that the 40 per cent marks rule would not apply to the allotted teachers. Our area was integrated on 1st November 1956 and till 1960 this system was not introduced there. We were continuing under the old system. Sir, I ask, what is the position of the teachers who passed in between these two periods. They are also suffering from this 40 per cent marks rule. They were appointed as Secondary grade teachers, and they underwent Secondary Grade training in Madras State. Those who were appointed as Elementary Grade teachers were promoted as Secondary Grade teachers. They are now working as Secondary Grade teachers and after seven years the District Educational Officers there say "You go back to the Elementary Grade". That is one aspect of the matter.



3rd August 1965] [Sri A. Kunjan Nadar.]

Then there is break of service. They are losing all the seven years of service and also the increments they had earned all these seven years. Many persons have been sent out and they are without jobs now. Most of them are over-aged and they are above 30 or 35 years. During the last meeting of the Assembly, the matter was represented to the Hon. Chief Minister and the Secretary of the Department. Even then there was no remedy. Things are going on in their own way. About 800 teachers have been affected. I would request the Hon. Chief Minister to earnestly look into the matter in the midst of his crowded activities.

As regards College admission, Sir, even students who have secured 400 marks and 450 marks have no place in our colleges. Our colleges are so overcrowded. More than half the number of candidates who have passed the S.S.L.C. examination are girls. I request that more seats should be allotted to each college. Some such provision should be made as early as possible.

One word, Sir, about the Defence of India Rules, which are now enforced in our country. I do not say that either the Chief Minister or the Home Minister does things purposely. But, I will bring to your notice one instance, Sir. In our place, one Mr. M. C. Balan belonging to the D.M.K. Party has been kept under custody under the Defence of India Rules. I do not agree with his policies. But I know the full facts of the case and I may be permitted to speak about it. There is absolutely no Anti-Hindi agitation in Kanyakumari district. Some time back there was the Thoothoor incident and shooting in the Scott Christian College. There were strikes and party meetings. I too had occasion to address some meetings in which Mr. Balan also addressed. If, in a democracy, we are expected to keep quiet, we will not open our mouths. There was a reference in this Assembly about the incident that happened in the District Club. I thought it a shameful affair to give expression to it in an august Assembly like this. But it is time that we all know things about it. In Nagercoil, there is the District Officers' Club. A poor girl, who went to the town seeking some domestic job, was seduced and taken to the District Club. She was kept in the kitchen for 22 days. She was very badly handled there. When the District Collector and the Superintendent of Police were passing that way one night at about 1 O'clock, they saw some light in the District Club. By surprise, they went in just to know why there was light at that untimely hour. They saw the girl there. The actual culprits, who were members of the Club, ran away. Then the Superintendent of Police filed a case against the girl and the charge was that at one O'clock in the night she was standing before the compound of the Club and calling people, who were passing that way, by showing hands. Such a case was filed against her. It is now going on. Mr. Balan gave expression to all these things in public meetings. Then, a counter-case was filed by the girl against some people in which Mr. Balan appeared as advocate. I got a copy of the petition a few days back. In that petition, it is stated that the case which she

[Sri A. Kunjan Nadar] [3rd August 1965

filed before the Magistrate was sent for enquiry to the Police and the Police have stated that nothing of that sort had happened. It is also alleged that the very Magistrate before whom she filed the complaint is involved in the case. Perhaps, the Hon. the Chief Minister or the Home Minister may not know about Mr. Balan

12-00 noon. and his capacity. But I know Mr. Balan and I know how he is capable of making a revolution in Kanyakumari district.

The Defence of India Rules operate against him simply because the Police officers have something against him regarding this case. There is absolutely no justification for detaining him under the Defence of India Rules and there may be such other cases which must be examined by the Government.

(Mr. Deputy Speaker sounded the gong.)

* **திரு. வை. சங்கரன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆலைகளிலே நெல்லை உணர வைப்பதற்காக இயந்திரங்கள் வாங்க கூடுதல் தொகை கேட்கப்பட்டிருக்கிறது. இது ரொம்ப நல்ல அம்சமாகும். வரக்கூடிய காலத்திலே நல்ல முறையிலே அரிசி கிடைப்பதற்கு வழி ஏற்படும். இந்த விஷயத்திலே நாம் இப்போதே உன்னிப்பாக இருக்கவேண்டும். சாதாரணமாக முதல் போகத்திற்கு முன்னாலே விலை ஏறிக் கொண்டு போய் செப்டெம்பர் அக்டோபர் மாதத்தில் உச்ச நிலையை அடைகிறது. போன ஆண்டில் கூட இந்தக் காலத்தில் தான் கஷ்டமான நிலையை அடைந்தோம். இந்த ஆண்டில் போன ஆண்டை விட அதிகமான கஷ்டம் இருக்கிறது. மான்சூன் பெருமளவுக்குப் பல மாவட்டங்களிலே தவறி விட்டது. ஆண்டவன் புண்ணியத்தில் இனியாவது பருவ மழை பெய்து எல்லாம் நல்ல முறையில் நடக்கவேண்டும். 'ப்ரிபேர்டு ஃபார் தி ஒர்ஸ்ட்' என்பதைப் போல் நாம் எந்த நிலைமையையும் சமாளிக்கத் தயாராக இருக்கவேண்டும். 'குதிரை போன பிறகு கதவை மூடுவது' என்ற கதையாகி விடக் கூடாது. அந்த கஷ்டகாலம் ஏற்படுமானால் மக்களுடைய உணவுக்கு இப்போதிருந்தே திட்டமிடவேண்டும்.

மற்ற ராஜ்யங்களிலிருந்து பருப்பு வாங்குவது சம்பந்தமாக ஆறு கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அது நல்லதொரு நடவடிக்கைதான். அந்த மாநிலங்களில் தற்போது 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை பருப்பு 45 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. ஆனால் இங்கே நடப்பு விலையானது 110-ல் இருந்து 120 ரூபாய் வரை இருக்கிறது. அந்த ராஜ்யங்களிலிருந்து வருவதில் தடைகள் இருப்பதால் கடிதங்கள் எழுதி அரசாங்கத் தரப்பில் வாங்குவது என்று முடிவு செய்திருக்கிறார்கள். காலா காலத்தில் அவை வர ஏற்பாடு செய்யவேண்டும். வரும் வரும் என்று சொல்லிப் பல மாதங்கள் ஆகிவிடுகின்றன. அவை சீக்கிரத்தில் கிடைக்கவும், சரியான முறையில் விநியோகம் செய்யவும் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும்.

சிறு தொழில்கள் கார்ப்பரேஷன் ஒன்று ஏற்படுத்தப்படுவதாக இருக்கிறது. ஏற்கனவே சிறு தொழில்கள் டிப்பார்ட்மெண்ட் என்று தனியாக இருக்கிறது. ஏற்கனவே உள்ள ஒரு பெரிய குறை



3rd August 1965] [திரு. வை. சங்கரன்]

பாட்டைத் தற்போதாவது நீக்கவேண்டும். சிறு தொழில்களின் கீழ் பல தொழிற்சாலைகளை ஆரம்பித்த பிறகு கோக், பிக் அயர்ன், அலாய் ஸ்டீல் போன்ற 'ரா-மெட்டீரியல்ஸ்' அவர்களுக்குக் கிடைக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. அவற்றை வெளி நாடுகளிலிருந்து அந்நியச் செலாவணி காரணமாக வரவழைத்துக் கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. அந்த ரா-மெட்டீரியல்ஸ் கிடைக்க வழி செய்யவேண்டும். ரா-மெட்டீரியல்ஸ் கிடைக்கவில்லையென்றால் அந்தத் தொழில்கள் எதனுமிக்காக நடத்தப்பட முடியாது. அவை கிடைக்காத காரணத்தால் எங்களுடைய மாவட்டத்திலேயே பல ஃபவுண்டரிகள் பல மாதங்கள் வேலை செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. இதைப் பற்றி அரசாங்கம் நன்றாகப் பரிசீலித்து ஒரு தொழிலுக்கு ஆண்டுக்கு என்னென்ன ரா-மெட்டீரியல்ஸ் எவ்வளவு வேண்டுமென்று பார்த்து அவை கிடைப்பதற்கான வழிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையை இரண்டாகப் பிரித்திருப்பது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். டிவிஷனல் இன்ஸ்பெக்டர் என்று மூன்று ஜில்லாக்களுக்கு சேர்ந்து இருக்கிறார்கள். அவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்று சொன்னால் நேரடியாகப் போய்த் தொடர்பு கொள்ள முடியவில்லை. தவிர அந்த அதிகாரி போன் வசதி இல்லாத நிலைமையில் இருக்கிறார். மதுரை டிவிஷனில் மூன்று ஜில்லாக்கள் சேர்ந்திருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு அதிகாரிக்கு போன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமராவதி சைனிக் ஸ்கூலுக்காக 1,10,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கொடைக்கானலில் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த சைனிக் ஸ்கூல் அமராவதிக்குப் போய்விட்டது. கொடைக்கானலில் ஒரு சைனிக் ஸ்கூல் ஆரம்பிப்பதைப்பற்றி மூன்றாவது திட்டத்திலாவது சேர்க்கவேண்டும். அங்கு ஒரு ஸ்கூல் ஏற்படுத்தினால் தான் அந்த மலைப் பகுதி நல்ல முறையில் அபிவிருத்தி அடைய முடியும். நெருக்கடி என்று சொல்லி விட்டு விடாமல் அங்கு ஒரு சைனிக் ஸ்கூல் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நிலத்திற்கு அடியில் இருக்கும் நீரைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. பூமிக்கடியில் தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டு பிடிக்க Water Diviners-நுணுக்கம் தெரிந்தவர்களை அப்பாயிண்ட் செய்ய வேண்டும். தாலுகா வாரியாக தனியார்கள் விருப்பத்திற்கு விடாது சர்க்காரே மேற்கொண்டு கிணறு வெட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். பிளேன் மூலமாகப் பூச்சிக் கொல்லி மருந்தை நிலக்கடலைக்கு இரண்டு ஆண்டுகளாக கோயம்புத்தூரில் தெளிக்கிறார்கள். அதே போன்று மதுரையிலும் பிளேன் மூலம் மருந்து தெளிக்க ஏற்பாடு செய்யவேண்டும். மதுரையில் பல இடங்களில் லெவல் கிராசிங் இல்லை. அங்கெல்லாம் மேலே பாலம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. செ. மாதவன்** : கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் துணை மதிப்பீட்டில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு அகவிலைப் படியை உயர்த்தியிருப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீண்ட நாட்களாக எதிர்பார்த்தபடி சம்பள விகிதத்தில் மத்திய சர்க்காரோடு ஒத்து வரக்கூடிய அளவுக்கு அகவிலைப் படியைச் சமமாகக் கொடுத்து விட்டதற்காக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அவர்களுக்கு சிடி காம்பன்சேடரி அலவன்ஸ் கொடுக்கப்படவேண்டுமென்பது பல முறை வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. சிட்டியின் கிரேடை அதிகமாக்கியதற்குப் பின்னால் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு அந்த அலவன்ஸைக் கொடுக்கும்போது நம்முடைய மாநில சர்க்கார் அவர்களுடைய ஊழியர்களுக்கு அதைக் கொடுக்கத் தயங்குவானேன்? நம்முடைய மாநில சர்க்கார் ஊழியர்களில் போலீஸ் இலாகாவில் பணி புரிகின்றவர்களுக்கு சிடி ஸ்பெஷல் பே என்று கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு மட்டும் அப்படிக் கொடுக்கும் போது அதே விகிதத்தில் மற்ற ஊழியர்களுக்கும் கொடுப்பதில் தவறு இல்லையென்று கருதுகிறேன். இதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். அவர்களுடைய ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையும் இந்த மன்றத்தில் பல முறை எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதை உயர்த்துவது பற்றியும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எமர்ஜன்சி காலத்திலே ப்ராவிடன்ட் பண்டாக 5 சதவிகிதம் பிடிக்கவேண்டுமென்ற கொள்கை நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திலிருந்து ஏற்றுக்கொண்டது. ஆனால் வருமான வரி கட்டக்கூடியவர்கள், கட்டாதவர்கள் ஆகியோருக்கு இடையே இதிலே வேறுபட்ட தொகை பிடிக்கப்படுவதை அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும். வருமான வரி கட்டுகின்றவர்களுக்கு மத்திய சர்க்காரில் கம்பல்சரி டெபாசிட் ஸ்கீம் என்று வைத்திருந்தார்கள். அதிலே மூன்று சதவிகிதம் பிடித்தார்கள். நம்முடைய சர்க்கார் ஜெனரல் ப்ராவிடன்ட் பண்டில் 2 சதவிகிதம் பிடித்தார்கள். மத்திய சர்க்கார் அந்த 3 சதவிகிதம் பிடிப்பதை நிறுத்திவிட்டார்கள். நம்முடைய சர்க்காரோ வருமான வரி கட்டுபவர்களிடமிருந்து இப்போது 2 சதவிகிதந்தான் பிடிக்கிறார்கள்; ஆனால் வருமான வரி கட்டாத என்.ஜி.ஓ.-க்களிடமிருந்து 5 சதவிகிதம் பிடிக்கிறார்கள். அதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டில் மாநில போக்குவரத்துத் துறைக்கு அதிகமான நிதி ஒதுக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், புதிதாக இந்த இலாகாவிலே சில திட்டங்களை வகுத்திருப்பதுதான். அதிலே ஒரு திட்டம் 'ரெய்டு' செய்வது. 'ரெய்டு' செய்கிற முறையைப் பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

இன்னின்ன மாவட்டங்களில் இன்னின்ன தேதிகளில் களவுகளை கண்டு பிடிப்பதற்காக ரெயிட் செய்யப் போகிறோம் என்று முதலில் பத்திரிகைகளில் அறிக்கை, அது விளம்பரமாகிவிடுகிறது. அதற்குப் பின்னால் ரெயிட்—இந்த முறை எவ்வளவு தூரம் பயன்





தரும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்காக லட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ரெயிட் செய்வதற்கு முன்னால் ரெயிட் செய்ய ஸ்டாப் வாச்சஸ் வேண்டுமென்ற கோரிக்கை வந்தது. இதற்கு முன்பு என்ன செய்தார்கள்? இதற்கு முன்பு ஸ்டாப் வாச்சஸ் இல்லாமல் எப்படி ரெயிட் செய்தார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. திடீரென்று வாச்சஸ் வாங்க ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்படுகிறது. அதுவும் ஸ்மகிள்ட் கூட்ஸ் வாங்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் இந்த வாச்சுகளை வாங்க அவை இந்த நாட்டில் இல்லாத காரணத்தினால் அல்லது சட்டப்படி கிடைக்காத காரணத்தினால் ஸ்மகிள்ட் குட்ஸை வாங்கும் ஒரு சூழ்நிலை இந்த இலாகாவிற்கு திடீரென்று ஏற்படுவானேன்? திடீரென்று இத்திட்டம் வருவானேன் என்பதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சட்டப்படி கோட்டேஷன் போட வேண்டுமென்ற விதியைக் கூட மீறி இந்த இலாகா இதைச் செய்திருக்கிறது என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

இந்தப் புதிய திட்டத்தில் ஸோனல் ஆபீஸஸ் திறப்பது புதுத் திட்டமாக கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது வரவேற்கக்கூடிய திட்டம் தான். இதை செயல்படுத்துவதற்கு முன்னால் அரசாங்கம் இது பற்றி பரிசீலிக்கிறதா என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். மூன்று இடங்களில் ஸோனல் ஆபீஸஸ் திறக்கப்பட்டு இருக்கின்றன. மூன்று ஸோனல் ஆபீசர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை ஏற்படுத்துவதற்கு முன்னால் இதற்குள்ள விதிகள், இந்த ஆபீசர்களுக்கு என்ன அதிகாரங்கள், அவர்களுக்குள்ள கடமைகள் என்ன என்று விதியே வகுக்கப்படவில்லை. அப்படி விதிகள் வகுப்பதற்கு முன்னாலே அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. விதிகள் வகுக்கப்படுவதற்கு முன்னால் ஆபீசர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இது சரியா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்துறையில் இன்னொரு திட்டம் புதிதாக யூனிட் ஆபீஸ்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இதில் பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களைப்பற்றி அமைச்சர் அவர்கள் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். யூனிட் ஆபீஸ் திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூரில் வைத்திருக்கிறார்கள். முசிரியில் உள்ள ஒருவர் பெரம்பலூர் யூனிட் ஆபீசுக்குச் செல்ல வேண்டும். ஏற்கனவே திருச்சிக்கு வந்திருந்தார்கள். திருச்சியில் வொர்க்ஷாப் இருக்கிறது. அங்கு அவர் தன் வேலையை முடித்துக் கொண்டு மேலே பெரம்பலூருக்குச் சென்று யூனிட் ஆபீசரிடம் சர்டிபிகேட் வாங்கும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதை மீண்டும் பரிசீலித்து இப்படி யூனிட் ஆபீஸ் திறக்கப்பட்டிருப்பதால் பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அடுத்தபடியாக, இப்பொழுது டாக்ஸிகளுக்காக ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். டாக்ஸியில் பெயின்ட் அடிக்கவேண்டும் என்பது திட்டம். பெயின்ட் இருக்கட்டும், பரவாயில்லை, மீட்டர் போடவேண்டுமென்ற பகுதி, [illegible]

[திரு. செ. மாதவன்] [3rd August 1965

கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தில் கருத்து வேறுபாடு இருக்கிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் அந்தத் திட்டம் இல்லை, ஆனால் மதுரை மாவட்டத்தில் இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் ஓட்ட வேண்டுமென்றால் ராமநாதபுரம் மாவட்டத்தில் லைசென்ஸ் வாங்கி விட்டால் மீட்டர் வைக்க வேண்டிய அவசியமில்லை. மதுரையில் அதை ஓட்டலாம். இப்படி மாவட்ட வாரியாக குழப்பம் ஏன்? மொபஸலில் டாக்ஸிக்கு மீட்டர் வைக்கவேண்டுமென்று வற்புறுத்தினால், அதனால் பொது மக்களுக்கு இடையூறுகள் ஏற்படும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். பதினைந்து மைல்கள் தூரமுள்ள ஊர்களுக்கு செல்ல வேண்டுமென்றால் விடுவதில்லை. சிலயிடங்களில் சிலர் விடுகிறார்கள். பதினைந்து மைல் சென்று விட்டால் 15 மைல் திருப்பிவர வேண்டும். மீட்டர் போட்டால் அந்தப் பதினைந்து மைலுக்கு சார்ஜ் கொடுக்க வேண்டும். மீதி 15 மைலுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே மொபஸலைப் பற்றி மீண்டும் இதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக அட்மினிஸ்ட்ரேஷன் ஆஃப் ஜஸ்டிஸ் புதிதாக விஜிலன்ஸ் ஆபீசர்களை நியமித்திருக்கிறார்கள். வரவேற்கிறேன். அதைக் குறை கூறவில்லை. ஆனால் அது அமைகிற அமைப்பு முறை சரியாக இல்லை என்று கருதுகிறேன். டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ரேட் காடரில் விஜிலன்ஸ் ஆபீசர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். ஹைகோர்ட், அதற்குப் பின்னால் செஷன்ஸ் கோர்ட், அதற்குப் பின்னால் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ரேட் கோர்ட், உயர்நீதி மன்ற அளவில் விஜிலன்ஸ் ஆபீசர்களைப் போடவேண்டுமென்பது மத்திய சர்க்காரைப் பொறுத்தது என்றால் செஷன்ஸ் கோர்ட் அளவில் விஜிலன்ஸ் ஆபீசர்களைப் போட்டாக வேண்டும். சப்-ஜட்ஜ் காட்ரில் உள்ள டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ரேட்டைப் போட்டால் சரியாக இருக்கும். மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை நீதிமன்றக் கட்டடம் மதுரையில் அமைய வேண்டுமென்பது நீண்ட நாளையக் கோரிக்கை. அது பரிசீலிக்கப்படாமல் இருக்கிறது. நிலம் வாங்க ப்ரப்போசல் சென்றது. நிலமும் பார்க்கப்பட்டது. முதல் அமைச்சர் அவர்கள்கூட சென்று பார்த்ததாகக் கேள்விப்பட்டேன். அதற்குப் பின்னாலும் அது உருவாகாமல் இருக்கிறது. எமர்ஜன்சி ஆரம்பித்து அதிக நாட்கள் ஆகி விட்டதால், அதை முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள முதல் மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்கள் கூற ஆசைப்படுகிறேன். இந்த விவாதத்தை துவக்கிவைத்து பேசிய கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் துணை மான்யக் கோரிக்கையைவிட்டு அப்பாற்சென்று பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றியே அதிகமாக வற்புறுத்திப் பேசினார்கள். நாலைந்து மாதங்களுக்கு முன்னால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட கோர சம்பவங்களையும், மக்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் ஏற்பட்ட நாசத்தையும் இந்த நாட்டிலே உள்ள அனைவரும் அறிவார்கள். அந்த நிலையில் போலீசார் தங்களுடைய உயிரையும் திரணமாக மதிக்க



3rd August 1965] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

பட்ட ஆபத்துக்களை எல்லாம் தாண்டி மக்களுடைய உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாத்த ஒரு நிலையை இந்த மன்றத்தில் உள்ள அங்கத்தினர்கள் மட்டும் அல்லாது இந்த மாநிலத்திலுள்ள மக்கள் அனைவரும் அறிவர். அந்த ஒரு நிலையில் போலீசாருக்கு நாம் எல்லாம் நன்றிக் கடன் பட்டவர்களாக இருக்கவேண்டுமே யொழிய போலீசாருக்கு ஏதோ ஊதியத்தை உயர்த்தி விட்டீர்களே, பாதுகாப்பு சட்டப்படி எல்லாம் கைது செய்கிறீர்களே என்று கூறுவதில் ஒன்றும் கருத்து இல்லை, சாரம் ஒன்றும் இல்லை என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டவர்கள் பற்றி சில வக்கீல்களின் வாதத்தை எடுத்துக் காட்டினார்கள். இது எதைக் காட்டுகிறது என்றால் கிணற்றில் விழுந்த ஒருவர் பாம்பின் வாலை கயிறாக நினைத்து தொத்திக்கொண்டு மேலே வர முயற்சிப்பதுபோல்தான் இருக்கிறது. யார் யாரோ சொல்கிறார்கள், எங்கெங்கோ சொல்கிறார்கள், ஒரு புத்தகத்தில் வருகிறது என்று பல நாட்பட்ட வாதத்தை எடுத்துக்கூறுவதில் பசை இல்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். இது முதலைக் கண்ணீர் வடிப்பதற்கு ஒப்பாகும். போலீஸார் பாதுகாப்புச் சட்டப்படி யாரைக் கைது செய்திருக்கிறார்கள்? ரௌடிகளையும், பொது ஜனங்களுக்கு சாதாரணமாக ஆபத்து விளைவிப்பவர்களையும் அன்றோ கைது செய்கிறார்கள்.

SRI S. MADHAVAN: On a point of order, Sir. The Chair has already given a ruling that the word "rowdyism" is unparliamentary. So, is the hon. Member entitled to use that word again?

MR. DEPUTY SPEAKER: The hon. Member is obviously referring to arrested persons.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** ரௌடிகளைத்தான் போலீஸார் கைது செய்கிறார்கள் என்று சொன்னேன். இந்த ஒரு நிலையில் எதிர்கட்சியினர் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் போலீசாரைப் பார்த்து பயப்படுவது போன்ற ஒரு உணர்ச்சி இருப்பதாக இங்கு பேசுவதில் இருந்து எனக்கு தோன்றுகிறது. திருடர்கள்தான் போலீசாரைப்பற்றி பயப்படவேண்டுமே தவிர, நல்ல பிரஜைகள், சட்டப்படி கட்டுப்பட்டு நடக்கும் பிரஜைகள் யாரும் போலீசாருக்கு பயப்பட வேண்டிய அவசியமில்லை என்று இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசினார்கள். 1967-ம் ஆண்டு தேர்தலில் மக்கள் எங்களுக்கு வோட் அளிப்பார்கள் என்று ஒரு சமயத்தில் குறிப்பிட்டார்கள். அதற்கு நான் ஒரு சிறிய உதாரணத்தை இந்த சமயத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தர்மபுரியில் மக்கள் நல்லவிதமாக, "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது போல் தர்மபுரியில் தர்மத்தை நிலைநாட்டியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வால் அறுந்த நரிகளைப் போல் பொது மக்கள் முன் நிரூபித்தனர் என்பதனை நாடறியும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாமென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறீர்கள். ஒவ்வொரு மிருகமாக எடுத்து ஒவ்வொருவரும் பயன்படுத்த தொடங்குவார்களானால் மன்றத்தின் கண்ணியம் கெடும் என்ற காரணத்தினால் இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இன்று ஒரு மணிக்கு, இல்லட்டின், வோட் எடுக்கவேண்டியிருக்கிறது. அதிக நேரம் இல்லை. இதை எல்லாம் நிறுத்திக் கொண்டால் நல்லது. கனம் அங்கத்தினரைக் கேட்டுக் கொள்கிறேன், இதோடு நிறுத்திவிடலாம் என்று, இன்றைக்கு பேச அவகாசம் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** போலீசார் டி.ஏ.-யை மட்டும் உயர்த்திக் கொண்டு போனால் மட்டும் போதாது. அவர்கள் அடிப்படைச் சம்பளத்தில் சில மாறுதல்களை ஏற்படுத்தி அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தினால் ப்ராவிடன்ட் பண்ட் போன்ற சில திட்டங்களுக்கு அவர்களுக்கு அனுகூலமாக இருக்கும்.

* **திரு. சா. கணேசன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற துணை மதிப்பீட்டின் மீது என்னுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் சமர்ப்பிக்க விரும்புகிறேன். முதலாவது நம்மை மிகவும் அச்சுறுத்திக்கொண்டிருக்கின்ற ஒன்று உணவு நிலை. உணவு நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. அதற்கு பல காரணங்கள். குறிப்பிடத் தகுந்த ஒரு காரணம் உணவு நெருக்கடி நம்மால் உற்பத்தி செய்யப்பட்டதுதான் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும்கூட, தெளிவாக, உணவு என்று எடுத்துக்கொள்கிற பொழுது நம் மாநிலத்தை மட்டும் குறித்துப் பேச முடியாது. அகில இந்திய ரீதியாகத்தான் பார்க்க முடியும். அகில இந்தியத் தேவை என்ன? அதில் கிடைக்கக்கூடியது என்ன? பற்றாக்குறை எவ்வளவு ஏற்படும்? அதை நிறைவு செய்வதற்கு உரிய வழிவகை என்ன என்பதைப் பற்றித் தெளிவான கணக்கு இல்லை; உணவு விஷயத்தில் குழப்பமற்ற ஒரு உறுதியான ஒரு நிலைமை இன்னும் ஏற்படவில்லை என்பதை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். உற்பத்தியாகின்ற பண்டங்களை எடுத்துக்கொண்டால் பலவகைத் தானியங்களுள் நம்மைப் பொறுத்த வரையில் முக்கியமாக இருப்பது நெல். கோதுமை இறக்குமதி செய்யப்படுகிறது. அதை நாம் அப்படியே நேரடியாக உபயோகிக்க முடியாது. அதை மாவாக, ரவையாக ஆக்கித்தான், ஓரளவு பக்குவமாக்கின பின்னால்தான் உணவாக சமைக்க முடியும். அப்படி இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை கூட பல்வேறு மில்களில் தேங்கிக்கிடக்கின்றன என்ற புகார்களை மில் உரிமையாளர்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி வருவதை அவ்வப்போது பெற்று அவ்வப்போது வினியோகிப்பதற்குரிய ஒரு சரியான வழிமுறை வகுக்காமல் ஐயமும், கொஞ்சம் மயக்கமும் கொண்ட நிலையில்தான் நாம் செயல்பட்டு வருகிறோம் என்பதை நான் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.





மேலும் இந்த உணவு நெருக்கடி காரணமாக விலை அதிகமாய் விட்டது என்றெல்லாம் மக்கள் மிகவும் கவலைப்படுகிறார்கள். உணவுக்காக அரிசி கொடுப்பதற்காக நெல்லை வாங்கி அதை அரையுங்கள் என்று சில மில்காரர்களிடத்தில் நாம் அனுமதி கொடுக்கிறோம். சர்க்கார் விதித்திருக்கிற அளவு 1.47 சுமார் 1½ என்று வைத்துக்கொள்வோம். இப்படி 1.47 குவின்டால் நெல்லுக்கு 1 குவின்டால் அரிசி கொடுக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் கட்டளை. அது ஜில்லாவுக்கு ஜில்லா, பகுதிக்கு பகுதி மாறுபடுகிறது. நான் சொல்வது ராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்தது. ப்ரொக்யூர்மென்ட் ஆபீஸர், தாசில்தார் இவர்கள் கூடவே இருந்து நெல் அரைத்தார்கள். 1.52 குவின்டால் நெல்லுக்குத்தான் ஒரு குவின்டால் அரிசி கிடைக்கிறது என்பதை தாசில்தார் கூடவே இருந்து பார்த்து, கணித்து விட்டு அதைப்பற்றி மேல் அதிகாரிகளுக்கும் எழுதி அனுப்பினார். இப்படிப்பட்ட நிலை இருக்குமானால் ஒரு குவின்டால் அரிசி கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு 1.47 குவின்டால் நெல் என்றுதான் வரையறுப்போம் என்று சொன்னால் ஊழல்கள், கலப்படங்கள் ஏற்படுவதற்கு சர்க்காரே—வேண்டுமென்று செய்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை—வழி செய்கிறார்கள் என்ற நிலை ஏற்படுகிறது. அரிசியில் கல்லைக் கலப்பதும், நன்றாக ஊற வைத்து மைத்துப் போன அரிசி கிடைப்பது போன்ற நிலைமைகள் வருகின்றன. இதை அரசாங்கம் அவ்வப்போது கவனிக்க வேண்டும். இதன் காரணமாக மில்காரர்கள் நெல் அரைப்பதற்கு மறுக்கிறார்கள். அதற்கு மாறாக இன்னொரு வகையில் பார்த்தால், சர்க்கார் குறிப்பிட்ட ரீடெயில் ஸேல்ஸ்காரர்கள் இருக்கிறார்களே, அவர்கள் மூலமாக விற்கிற விலை, கொள்முதல் விலையைப்போல் மிகவும் அதிகமான அளவு லாபம் கிடைக்கிற அளவுக்கு இருக்கிறது. இது இடையில் விற்பவர்களுக்கும் கிடைப்பதில்லை, வாங்குபவர்களுக்கும் கிடைப்பதில்லை. தில்லைநாயகம் என்ற சம்பா அரிசி, இன்னாரிடத்திலிருந்து வாங்க வேண்டும், இன்னின்ன விலைக்கு வினியோகிக்க வேண்டும், அதில் ஏற்படுகிற விலை வித்தியாசத்தில் குறிப்பிட்ட தொகையைச் சர்க்கார் கஜானாவில் கட்டவேண்டும். அந்தக் கணக்கைப் பார்த்தால் ஒரு குவின்டாலுக்கு 8 ரூபாய் 20 காசு வருகிறது. அதோடு கூட நிர்வாகச் செலவுக்காக ஒரு ரூபாயும் சேர்த்துக் கட்ட வேண்டும். அதையும் கூட்டிப் பார்த்தால் 9 ரூபாய் 20 காசு சர்க்கார் கஜானாவில் செலுத்த வேண்டும். இவையெல்லாம் யார் தலையில் போய்ச் சேருகிறது. நான் சொன்னது தில்லைநாயகம்சம்பா என்ற இனத்திற்கு. கருடன்சம்பா என்று இன்னொரு இனம் இருக்கிறது. அதற்கு 17 ரூபாய் 72 காசு குவின்டால் ஒன்றுக்கு சர்க்கார் கஜானாவில் செலுத்த வேண்டும். இத்துடன் நிர்வாகச் செலவு ரூபாய் 1 சேர்த்து 18.72 கட்ட வேண்டும். இவ்வளவையும் சேர்த்து நம்மைப் போன்றவர்கள் அதாவது வாங்குபவர்கள்—உண்பவர்கள் இருக்கிறார்களே அவர்கள் தலையில்தான் சுமை ஏறுகிறது. விலை ஏறுகிறது, விலை ஏறுகிறது என்று சொன்னால் அதற்கு வியாபாரிகள் மட்டும் காரணம் அல்ல. சர்க்கார் நிர்ப்பந்தத்தினால் முறையில்லாத அளவுக்குச் சர்க்கார் கஜானாவில் லாப நோக்கத்தோடு அதிகமாக

[திரு. சா. கணேசன்] [3rd August 1965

சொல்லுகிற காரணத்தினல்தான் நியாயமான விலையில் உணவு 'ஸ்டேபிள் ஃபுட்' ஆன அரிசி நமக்கு கிடைக்கவில்லை. இவ்விதம் விலை ஏறிக்கொண்டே போகிறது. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நேரம் இல்லாத காரணத்தால், நான் விரிவாக சொல்லவில்லை. ஒன்றிரண்டை மட்டும் குறிப்பிட்டு சொல்லுகிறேன். ராமநாதபுரம் ஜில்லா முழுக்க முழுக்க காய்ந்து விட்டது. கையிலிருந்த விதைகளை—நெல்லை—மழையை நம்பி நிலத்தில் போட்டாய் விட்டது—அது இப்போது மண்ணோடு மண்ணாகப்போய் விட்டது. மிகமிகப் பெரும்பாலான இடங்களில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை மனத்தில் கொண்டு அரசாங்கம் அந்தப் பகுதிகளுக்கு முழு வரி நீக்கம்—அதாவது வரிவஜா செய்ய வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

இந்த ப்ரொக்யூர்மெண்ட் செய்கின்ற விஷயத்தில் எல்லோரும் வாலண்டியாக கொடுக்கிறார்கள் என்றெல்லாம் இங்கே அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். அதிகாரிகள் மிகவும் பரிவோடும், அன்போடும், மரியாதையோடும் நடக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லுகிறோம். வேண்டுமென்றால் சில இடங்களில் ஒருக்கால் அவ்வாறு நடந்திருக்கலாம். ஆனால் பல இடங்களில் அதிகாரிகள் மிக கடுமையாகவும், கொடுமையாகவும் நடந்திருக்கிறார்கள் என்பதற்கு பல சான்றுகள் என்னிடம் இருக்கின்றன. பல இடங்களில் இம்மாதிரி நடந்திருக்கின்றன. ஸ்ரீரங்கத்தில் துவாரகதாஸ் கன்ஷம்தாஸ் என்பவருக்கு உரிமையான எஸ்டேட்டில்—அதாவது அவர்களுக்குச் சொந்தமாக அங்கே கொஞ்சம் நிலம் இருக்கிறது. அது தர்ம ஸ்தாபனம். அதில் மொத்தத்தில் எவ்வளவு விளைந்திருக்கிறதோ, அதைவிடக் கூடுதலாக லெவி விதித்தார்கள். நூறு மூட்டை விளைந்திருந்தால் 150 மூட்டை நெல் தாருங்கள் என்று அதிகாரிகள் கேட்டார்கள். அதை எப்படி எங்கேயிருந்து தருவேன் என்று சொல்லிக்கொண்டிருந்தார் இதன் உரிமையாளர். இது விவகாரத்தில் இருந்து கொண்டிருக்கிற பொழுது, அவர் வெளியூருக்குச் சென்றிருக்கின்ற நேரத்தில் நெல் போட்டிருந்த இடத்திலுள்ள நிலையோடு கதவைப் பெயர்த்து எடுத்துவிட்டு நெல் மூட்டைகளை எடுத்து லாரிகளில் ஏற்றி விட்டார்கள். இதைப்பற்றி கலெக்டர் அவர்களுக்கு உடனே அறிவிக்கப்பட்டிருக்கிறது. போட்டோ முதலியவைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. போலீசிலும் புகார் செய்யப்பட்டு வழக்கும் போடப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு நான் எதுவும் சொல்ல முன்வரவில்லை. வழக்கு விசாரணையில் இருப்பதால், நடந்த நிகழ்ச்சியை மட்டும் சொன்னேன். இதைப் போல வேறு பல இடங்களிலும் நடக்கக்கூடும், நடந்திருக்கின்றன. ஆகவே ஆளும் கணத்தார் நன்கு விசாரணை செய்து, இப்படி வேண்டத்தகாதவைகள் நடந்திருந்தால் அதன்மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

கல்வித் துறையில் இப்போது செய்திருக்கும் மாற்றத்தை நான் மனமார வரவேற்கிறேன். கல்விக் கூடங்களின் தொகை—அல்லது எண்ணிக்கை—அதிகரித்துக்கொண்டு போவதால், இயக்



3rd August 1965] [திரு. சா. கணேசன்]

குநர்களை இரண்டாக பிரித்திருப்பது நன்மைதான். அந்த முறையில் கல்லூரிக் கல்விக்காக ஒரு இயக்குநரையும், அதற்கு கீழ்ப்பட்ட கல்விக்கு இன்னொரு இயக்குநரையும் நியமித்திருக்கிறார்கள். இது முற்றிலும் சரியே. ஆனால் இதுமாதிரி உயர்நிலைக் கல்விக்கும், தொடக்கக் கல்விக்கும் தனித்தனி இயக்குநர்களை நியமிக்க வேண்டும். இண்டக்ரிட்டெஸ் முறையில் 11-வது ஸ்டாண்டர்ட் என்று இப்போது ஒன்றாக இருக்கிறது என்று சொல்லித் தட்டிக் கழிக்கப்படாது. இருக்கின்ற நிலையைப் பார்க்கிற பொழுது ஹைஸ்கூல் என்ற ஒரு நிலையும், அதற்குக் கீழேயுள்ள தொடக்கப் பள்ளிகளுக்கு என்ற ஒரு நிலையும் இருப்பதுதான் நல்லது. எலிமெண்டரி ஸ்கூல் நிலையில்—இதற்குத் தனியாக ஒரு டைரக்டர் என்றில்லாவிட்டாலும் டெபுடி டைரக்டர் என்று வேண்டுமென்றாலும் போட்டுக்கொள்ளலாம். ஆனால் எலிமெண்டரி ஸ்கூல் அளவில் ஒரு பிரிவு ஏற்படுத்துகின்ற முறையில் நெறிமுறைகளை வகுக்கவேண்டும். ஆகவே அதைத் தனியாக ஒருவரின் நிர்வாகத்தில் வைப்பது மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இனி, சில இம்போர்ட்டெட் மெடிஸின்களையெல்லாம் இம்போர்ட் 12-30 p.m.
செய்யாமல் இருப்பது எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது என்பதைப் பொறுத்த வரையில் நான் பிரத்தியட்சமாக உணர்ந்தவற்றைச் சொல்லுகிறேன். மிக அருமையான மருந்து டிங்சர் மொர்த்தியோலேட். அது இருந்தால் எந்த விதச் செப்டிக்கும், நோயாளியும் சரி, டாக்டரும் சரி பயப்படவேண்டாம். அது எங்கும் அவுன்ஸ் 75 பைசாவிற்குக் கிடைத்து வந்தது. நம் ஸ்டேட் பூராவையும் எடுத்துக் கொண்டாலும் மொத்தத் தேவை இரண்டு, மூன்று லட்சம் ரூபாய்க்குத்தான் போகும். அன்னிய நாட்டுச் செலாவணி. உயிரைக் காக்கும் மருந்து இது. அதே போல வேறு சில [illegible]ண்டு. டெண்டுலம் காஸ் போன்றவைகள் இருக்கின்றன. இம்மாதிரி இன்றியமையாதவற்றை வரவழைக்க வழி செய்ய வேண்டும்.

